REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 மார்ச் 14 வியாழக்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்
வரு. 92 இல. 64
Thursday 14, March, 2024
20பக்கங்கள்
50/-




## டக்ளஸ் தேவானந்தாவுக்கு ஆதரவு தெரிவித்த ஜனாதிபதி



வெடுக்குநாறி மலையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு விசேட குழு அமைக்கப்பட வேண்டுமென, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்வைத்த கோரிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான உண்மைகளை கண்டறிந்து, தேசிய நல்லிணக்கத்திற்கு இடையூறுகளை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் எதிர்காலத்தில் நடைபெறாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். 06

லொரென்சோ புதா – 4 ஆழ்கடல் வள்ளம்

## மீனவர்களை அழைத்துவர அரசு அவசர நடவடிக்கை



லொரென்சோ புதா - 4 வள்ளத்திலிருந்த மீனவர்களை விரைவில் இலங்கைக்கு அழைத்துவர ஏற்பாடு செய்யுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சட்டமாஅதிபர் ஊடாக வெளிவிவகார அமைச்சுக்கு அறிவித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த டி சில்வா குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த இதனைத் தெரிவித்தார்.

லொரென்சோ புதா - 4 கப்பல் தொடர்பில் கடற்றொழில் திணைக்களம், கடற்படை 06

நாட்டின் பொருளாதாரம் பற்றிய

## புரிதலின்றி அள்ளிவீசிய அரசியல் வாக்குறுதிகளால் மக்கள் பாதிப்பு

அந்தத் தவறைச் செய்ய நான் தயாரில்லை; ஜனாதிபதி வலியுறுத்து



நாட்டின் பொருளாதாரம் பற்றிய உண்மையைப் புரிந்து கொள்ளாமல், அதிகாரத்தைப் பெறுவதற்காக வழங்கிய அரசியல் வாக்குறுதிகளால் நாட்டு மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். அந்தத் தவறை செய்ய, தாம் தயாரில்லையென வலியுறுத்திய ஜனாதிபதி, உண்மைக்கு முகம் கொடுத்து நாட்டுக்கு 06

மாகாண, தேசிய பேதங்களுக்கு அப்பால்

# சகல பாடசாலைகளையும் மத்திய அரசின் கீழ் கொண்டுவர தீர்மானம்

## தேசிய கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்த விரைவில் நடவடிக்கை - கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு



**பாராளுமன்றின் அனுமதியுடன் முன்னெடுக்கப்படும் நடவடிக்கையால் அமைச்சர் மாறினாலும் கல்விக் கொள்கைகளில் மாற்றம் ஏற்படாது.**

லோரன்ஸ் செல்வநாயகம்

மாகாண பாடசாலைகளை எதிர்காலத்தில் மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தேசிய பாடசாலை, மாகாண பாடசாலைகள் என்ற பேதங்களுக்கப்பால் ஒரே விதமான பாடசாலைகளாக சகலதையும் செயற்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அத்துடன் தேசிய கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், கல்வி மறுசீரமைப்பு கொள்கை வரைவில் தேசிய பாடசாலை மற்றும் மாகாண பாடசாலைகளை ஒரே விதமாக கொண்டு வருவது தொடர்பில் யோசனைகள் 06

IMF உடன்படிக்கையை விளங்கிக் கொள்ளாத

## எதிர்க்கட்சியால் எவ்விதத்திலும் நாட்டை ஆள முடியாது என்பது உறுதியாகிறது

*அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு*

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை விளங்கிக் கொள்ளாத எதிர்க்கட்சிக்கு எந்த விதத்திலும் நாட்டை ஆட்சி செய்ய முடியாது என்பது உறுதியாகிறது என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் இலங்கையில் நடைபெறவுள்ள கொழும்பு சர்வதேச திரைப்பட விழாவை ஏற்பாடு செய்வது தொடர்பான விசேட கலந்துரையாடல் அமைச்சர் பந்துல குணவர்தனவின் தலைமையில் நேற்று ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இம்முறை சர்வதேச தரத்துடன் கூடிய திரைப்பட விழாவாக, சர்வதேசப் பிரிவு, ஆசியத் 06

ரமழான் தொழுகை நேரம்

| திகதி | 14-18 |
|---|---|
| ஸஹர் முடிவு | 04.48 |
| ஸுபஹ் | 05.03 |
| சூரிய உதயம் | 06.18 |
| ழுஹர் | 12.21 |
| அஸர் | 03.35 |
| மஃரிப் | 06.22 |
| இஷா | 07.31 |

## நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களில் கார் மோதி விபத்து: 07 சைக்கிள்கள் சேதம்

உலக வர்த்தக மையப் பகுதியில் சம்பவம்

லோரன்ஸ் செல்வநாயகம்




கொழும்பு கோட்டை உலக வர்த்தக மையப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் ஏழு மோட்டார் சைக்கிள்களும் காரொன்றும் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். உலக வர்த்தக மைய கட்டடத்திற்கு அருகில் உள்ள வீதியில் பயணித்த கார் ஒன்று, 06

## அமைச்சர் பந்துலவின் 'சதராவ தீபனீ' நன்றி பாராட்டு விழா சனிக்கிழமை



அமைச்சர் பந்துல குணவர்தனவின் எண்ணக்கருவுக்கமைய நடைமுறைப்படுத்தப்படும் 'சதராவ தீபனீ' நன்றி பாராட்டு விழா எதிர்வரும் 16 ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அமைச்சரின் எண்ணக்கருவில் நடைமுறைப்படுத்தப்படும் கல்வி பொதுத் 06

## கணினிக் குற்றங்கள் அதிகரித்துள்ளதால் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரம்

3 மாதங்களில் 423 மோசடிகள் பதிவு

லோரன்ஸ் செல்வநாயகம்




இணையதளம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் குற்றச்செயல்கள் வேகமாக அதிகரித்து வருவதால், அது தொடர்பில் கண்காணிப்புகளை முன்னெடுப்பதாக இலங்கை கணினி அவசர பெறுபேறுகள் மன்றம் தெரிவித்துள்ளது.

அந்த மன்றத்தின் பிரதம சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர், வருக தமுனுகொல இது தொடர்பில் தெரிவிக்கையில் இந்த வருடத்தின் நேற்று வரையான காலப்பகுதியில், 423 இணையத்தளம் மூலமான மோசடிகள் பதிவாகியுள்ளதாகவும் 06

## ச.தொ.ச. நிலையங்களில் 43 ரூபாவுக்கு முட்டைகள்

இன்றிலிருந்து ஏப்ரல் 13 வரை சந்தர்ப்பம்

லோரன்ஸ் செல்வநாயகம்



நுகர்வோர் தமக்குத் தேவையான அளவு முட்டைகளை இன்று முதல் ஏப்ரல் 13 வரை, சதொச மூலம் பெற்றுக் கொள்வதற்கு 06

## ஐக்கிய மக்கள் சக்தியிலுள்ள எம்.பிக்கள் பலர் எம்முடன் இணைவர்

ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. சாதிக்கும்



ஐக்கிய மக்கள் சக்தியிலுள்ள பெரும்பாலான எம்.பிக்கள் ஐக்கிய தேசிய கட்சியுடன் மீண்டும் இணைந்து கொள்ளவுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளார். 06

## பாதாளக் கோஷ்டியின் மொழியில் பதிலளிக்க தயார்



பாதாள உலக செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களுக்கு புரியும் மொழியில், பதில் வழங்குவதற்கு தயாரென பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அம்பலாங்கொடை மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் அண்மையில் இடம்பெற்ற பாதாள 06

## புலம்பெயர்தலுக்கான புதிய கட்டுப்பாடுகள், விதிமுறைகள்

பிரித்தானியாவில் அமுலாகிறது



புலம்பெயர்தலுக்கான புதிய கட்டுப்பாடுகள் மற்றும் விதிமுறைகளை பிரித்தானியா அமுல்படுத்தவுள்ளது.

புகலிடம் கோருவோரின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தும் 06



# நகர்வலம்



# நாட்டின் இயல்பு நிலையை சீர்குலைக்கும் செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது

## அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டின் இயல்பு நிலையையும் மக்களின் அன்றாட வாழ்க்கையையும் சீர்குலைக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் இடமளிக்க முடியாது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் இடம்பெற்று அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், நாட்டில் நிலவும் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் தபால் திணைக்களம் மட்டுமன்றி ஏனைய அனைத்துப் பிரிவுகளும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

நாட்டில் நிலவும் நெருக்கடி நிலை வழமைக்குத் திரும்பிவரும் நிலையில் இந்த நிலையை சீர்குலைக்கும் வகையில் பல்வேறு சக்திகள் பல்வேறு விதத்திலும் அரச நிறுவனங்களை சீர்குலைக்கும் வகையில் செயற்பட்டுவருகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்துள்ளன.

எவ்வாறான பிரச்சினையையும் பேச்சுவார்த்தை மூலம் அல்லது இணக்கப்பாட்டின் மூலம் தீர்க்கமுடியும். அதைவிடுத்து வேலை நிறுத்தப் போராட்டங்களை மேற்கொள்ளும் போது சாதாரண மக்களே அதனால் பாதிக்கப்படுகின்றனர். அதனால் பொதுமக்கள் பாதிப்படைவதைத் தடுக்கும்வகையில் பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கமுடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் அரசியல் நோக்கத்தில் அவ்வாறானவர்கள் செயற்படுவார்களானால் அதுதொடர்பில் நிறுவனங்கள் மட்டத்திலும் குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்தின் மூலமும் தேவையான விசாரணைகளை மேற்கொள்ள நேரிடுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சமூக சேவைகள் செய்துகொண்டு

# அநுராதபுரம் நகரில் ஹெரோயின் விற்பனை; சந்தேக நபர் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

ஏழைக் குடும்பங்கள் மற்றும் வசதி குறைந்த குடும்பங்களின் குழந்தைகளுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி பங்களிப்பு, உதவியாளர் பதவிகளை வகித்து தற்போது பத்து வருடங்களுக்கு மேலாக அநுராதபுரம் நகருக்கு பாரியளவில் ஹெரோயின் போதைப்பொருள் கொண்டு வந்து அதனை விநியோகித்து வந்த நபர் ஒருவரை 1 கோடி ரூபா பெறுமதி மிக்க போதைப்பொருள் தொகையுடன் கடந்த (11) கைது செய்துள்ளதாக அநுராதபுரம் கோட்ட குற்றத்தடுப்பு பிரிவின் புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர்.

ஆசிரியர் குடும்பம் ஒன்றில் பிறந்து நாட்டின் பிரபல காப்புறுதிக் கூட்டுத்தாபன அநுராதபுரம் கிளையொன்றின் முகாமையாளராக சேவையாற்றி வரும்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். மிக நீண்டகாலமாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அநுராதபுரம் பண்டுலகம பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய நபரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள நபர் கெக்கிராவ பகுதியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றின் பழைய மாணவராவார். சமூகத்தில் ஒரு முக்கிய குடும்பத்தில் பரோபகாரராக காண்பித்து பாதுகாப்பு பிரிவினரை தவறாக வழிநடத்தி இந்த வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரின் தாய், தந்தை, மனைவி மற்றும் இரு சகோதரிகளும் ஆசிரியர்கள் என்பதுடன் இந்த வியாபாரத்தை மேற்கொண்டு சென்ற முகாமையாளர் சகல பதவிகளையும் பயன்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# இலங்கையின் சவூதி அரேபியாவிற்கான தூதுவர் அமீர் அஜ்வாத்துக்கு கௌரவிப்பு

## பிரதம அதிதியாக அமைச்சர் அலிசப்ரி பங்கேற்பு



**கொழும்பு தினகரன் நிருபர்**

இலங்கையின் சவூதி அரேபியாவிற்கான புதிய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள அமீர் அஜ்வாத்தை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வொன்று கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் கடந்த (11) திங்கட்கிழமை மாலை நடைபெற்றது.

கொழும்பு டைம்ஸ் பிரதம ஆசிரியரும் அரப் நியூஸ் கொழும்பு நிருபருமான மொஹமட் ரசூல்தீன் இதனை ஏற்பாடு செய்திருந்தார். இதில் பிரதம அதிதியாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கலந்து கொண்டார்.

கொழும்பு டைம்ஸ் பிரதம ஆசிரியர் மொஹமட் ரசூல்தீன் தூதுவரை வரவேற்று உரையாற்றினார். சவூதி அரேபியாவிற்கான தூதுவர் அமீர் அஜ்வாத்தும் இங்கு உரையாற்றினர்.

இந்நிகழ்வில் பங்களாதேஷ், இந்தோனேசியா, நேபாளம் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளின் இராஜதந்திரிகளும் கலந்து கொண்டதுடன் விசேட அழைப்பாளர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் மொஹமட் ரசூல்தீன் ஆகியோர் இணைந்து சவூதி அரேபியாவிற்கான தூதுவர் அமீர் அஜ்வாத்திற்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர்.

# உள்நாட்டு உற்பத்தி சுகாதார துவாய்கள் 92 வீதமானவைக்கு வரி அறவீடு கிடையாது

## இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



நாட்டிற்குத் தேவைப்படும் சுகாதார துவாய்களில் 92% மானவை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுவதாகவும், அதற்காக அரசாங்கம் எந்த வரியையும் அறவிடுவதில்லையென்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

மீதமான 8% மான சுகாதார துவாய்களே வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதாகவும் அதனை ஒரு நிறுவனம் மட்டுமே இறக்குமதி செய்யும் நிலையில் அதற்காக 22.5% வட்டி அறவிடுவதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டிலுள்ள 15 - 47 வயதுக்கிடைப்பட்ட வயதுடைய பெண்களில் 40%மானவர்கள் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக பெண்களுக்கான சுகாதார துவாய்களை பாவிப்பதை நிறுத்தியுள்ளனர் என்பது ஆய்வுகளின் மூலம் தெரிய வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சர்வதேச கைத்தொழில் கண்காட்சி ஜூன் மாதம்

கைத்தொழில் அமைச்சின் ஆலோசனைக்கமைய சர்வதேச கைத்தொழில் கண்காட்சி எதிர்வரும் ஜூன் மாதம் 19ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையால் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

பல்வேறு கைத்தொழில்களின் சமீபகாலபோக்கு, நவீன தொழில்நுட்பம், கைத்தொழிலில் ஈடுபடுகின்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் முனைவோர்களை ஒன்றிணைத்தல் ஆகியவற்றுக்கு இக்கண்காட்சி பாலமாக அமையவுள்ளதாக, கைத்தொழில் அபிவிருத்திச் சபை தெரிவித்தது.



கஹட்டோவிட்ட அல் பத்ரியா மஹா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டு போட்டி நிகழ்வுகள் அண்மையில் பாடசாலை வளாகத்தில் வெகுவிமர்சையாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான் கலந்துகொண்டு முதலாம் இடத்தை பெற்றுக்கொண்ட இல்லத்திற்கு வெற்றிக்கிண்ணத்தை வழங்கி வைப்பதையும் அருகில் அல் ஹிமா அமைப்பின் பணிப்பாளர் ஷெய்க் நூருல்லாஹ்வையும் படத்தில் காணலாம்.

# கம்பஹா மாவட்ட ஐ.மு. சங்கத்தின் 10ஆவது வருட நிறைவு விழா நிகழ்வு

**கொழும்பு தினகரன் நிருபர்**

கம்பஹா மாவட்ட ஐக்கிய முஸ்லிம் சங்கத்தின் 10 ஆவது வருட நிறைவையொட்டி பாடசாலை மாணவர்களுக்கான இலவச அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வு சங்கத்தின் ஸ்தாபகர் முஸம்மில் ஹாஜி உள்ளிட்ட சங்கத்தின் அங்கத்தவர்களின் ஏற்பாட்டில் வத்தளை புதிய நகர சபை மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் எம்.ஆர்.எம். மொஹிடீன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம், தமிழ், சிங்கள பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கி வைக்கப்பட்டன.





நிகழ்விற்கு பிரதம அதிதியாக தொழிலதிபர் ஏ.எச்.எம்.மாஹிர் கலந்து கொண்டதுடன் விசேட அதிதிகளாக ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, கொலன்னாவ பள்ளிவாசல் தலைவர் ஐ.வை.எம்.ஹனீப், உலக பௌத்த மையத்தின் இலங்கை நிலையத் தலைவர் சுதத் தேவபுர உள்ளிட்ட பலர் கலந்து கொண்டதுடன் விசேட பேச்சாளராக கலாநிதி ரவூப் ஸெய்ன் (நளீமி) மற்றும் மௌலவி அஷ்ஷெய்க் இப்றாஹிம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.



சீனன் கோட்டை முத்துக்கள் வட்சப் குழுமத்தினால் அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையில் கல்வி பயிலும் குறைந்த வருமானம் பெறும் மாணவர்களுக்காக (தரம் 1 முதல் 05 வரை) அப்பியாச புத்தகங்கள் குழுமத்தின் தலைவர் ராமிஸ் நாஸிம் தலைமையில் பாடசாலை உப அதிபர் எம். பர்ஸான் மற்றும் எம்.டீ.எம் நைஸர் தாஹாவிடம் கையளித்த போது எடுக்கப்பட்ட படம். அஸாம் பளீல், முஹம்மத் பஸ்மி உள்ளிட்ட குழும அங்கத்தவர்கள் பலரும் படத்தில் காணப்படுகின்றனர்.

# இலங்கை – மலேசிய வர்த்தக கவுன்ஸில் ஏற்பாட்டில் மகளிர் தின நிகழ்வு கொழும்பில்

**ருஸைக் பாரூக்**

இலங்கை மலேசிய வர்த்தக கவுன்சில் (SLMBC) சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஹில்டன் கொழும்பு ரெசிடென்சியில் " World of Wanitha " என்ற மின் மாற்ற வர்த்தக தளத்தை அறிமுகப்படுத்தியது.




வர்த்தக கவுன்சில் மகளிர் தொழில் முனைவோர் துணைக் குழுவின் தலைவி டிஷ்மா கருணாரத்ன வரவேற்புரை நிகழ்த்தினார். விழாவின் பிரதம அதிதியாக ஒடாரா குணவர்தன மற்றும் இலங்கைக்கான மலேசிய உயர்ஸ்தானிகர் பட்லி ஹிஷாம் ஆதம் ஆகியோர் " World of Wanitha " என்ற தளத்தை ஆரம்பித்து வைத்தனர்.

வர்த்தக கவுன்சிலின் முன்னாள் தலைவர்கள் திருமதி தில்ருக்ஷி டி சில்வா, திருமதி துஷி ஜயவீர, மக்கள் தொடர்பு மற்றும் சமூக ஊடகங்கள் செல்வி அனிசா ஹில்மி, கவுன்சிலின் செயலாளர் திருமதி தருஷிகா சேனாதீர, உறுப்பினர் திருமதி வத்சலா விஜேசிங்க மற்றும் டிஷ்மா கருணாரத்ன ஆகியோருக்கு பாராட்டு சின்னமும் இதன்போது வழங்கப்பட்டது. வர்த்தக கவுன்சில் தலைவர் எம்.எச்.கே.எம். ஹமீஸ், உப தலைவர்கள், முன்னாள் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# மசாஜ் நிலையம் என்ற போர்வையில் விபசார விடுதி; 09 பேர் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

மதவாச்சி பொலிஸ் பகுதியில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் மூன்று விபசார விடுதிகளை நடாத்திச் சென்ற உரிமையாளர்கள் உட்பட 09 பேரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மதவாச்சி நகரில் அமைந்துள்ள இரண்டு மசாஜ் நிலையங்களையும் வஹமலுகொல்லாவயில் அமைந்துள்ள மசாஜ் நிலையம் ஒன்றையும் பொலிஸார் சுற்றிவளைத்துள்ளனர்.

தொடர்ந்து பொது மக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் மதவாச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஆர். எம்.ஐ.பீ. ரத்னாயக்க தலைமையில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டன.

# அம்பலாங்கொடை பகுதியில் இருவேறு துப்பாக்கிச் சூடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அம்பலாங்கொடை பகுதியில் இடம்பெற்றுள்ள இரண்டு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 4 பேர் பலியாகியுள்ளதுடன் மேலும் 06 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பலாங்கொடை பிடிகல, குருவல பிரதேசத்தில் கடையொன்றுக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ள துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மோட்டார் சைக்கிளில் வந்துள்ள இனம் தெரியாத துப்பாக்கிதாரிகளே இந்த துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டு தப்பியோடியுள்ளதாகவும் T56 ரக துப்பாக்கியால் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாகவும் காயமடைந்தவர்களில் ஒருவர் எல்பிட்டி அரசாங்க வைத்தியசாலையிலும் மேலும் இருவர் காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்திற்கும் T56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்றும் பொலிசார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

# தினகரன்

THINAKARAN

2024 மார்ச் 14 வியாழக்கிழமை


தொழுகை நேரம்

சுபஹ் - 05.03
லுஹர் - 12.21
அஸர் - 03.35
மஃரிப் - 06.22
இஷா - 07.31

இன்றைய சுபதினம்

சோபகிருது வருடம் பங்குனி 01

ராகுகாலம் : பகல் : 1.51 - 3.21வரை
சுபநேரம் : காலை : 7.51 - 9.21வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



## ரமழான் சிந்தனை

# நோன்பின் நோக்கம்

ஐம்பெரும் கடமைகளில் ஒன்றே ரமழான் மாதத்தில் நோன்பு நோற்பதாகும். இது, இஸ்லாமிய மாதங்களில் ஒன்பதாவது மாதம். அதில் நிறைவேற்றப்படும் வணக்கத்தின் பெயரே நோன்பாகும். இம்மாதத்தை அடைந்துகொள்ளும் பருவ வயதை அடைந்த, புத்திசுவாதீனமுள்ள, ஒவ்வொரு முஸ்லிமும் நோன்பு நோற்க வேண்டும் என்பது அல்லாஹ்வின் கட்டளை. நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்று இரண்டாவது வருடத்தில் ரமழான் நோன்பு முஸ்லிம்கள் மீது விதியாக்கப்பட்டது.

'உங்களில் யார் ரமழான் மாதத்தை அடைந்து கொள்கிறாரோ அவர் நோன்பு நோற்கட்டும்' என்று அல்குர்ஆன் அழைப்பு விடுத்துக் கொண்டிருக்கிறது. அந்த அழைப்புக்கு ஏற்ப செயற்பட வேண்டியது இறைவிசுவாசிகளின் பொறுப்பாகும்.

அதிகாலை பொழுது முதல் சூரியன் மறையும் வரை இறைவனின் திருப்தியை எதிர்பார்த்து நோன்பை முறிக்கும் காரியங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளும் உயர்ந்த வணக்கமாக நோன்பு காணப்படுகிறது.

உயர்ந்த ஆன்மீக ரீதியான பயிற்சியை வழங்கும் நோன்பு விதியாக்கப்பட்டதன் நோக்கம் குறித்து அல்லாஹுத்தஆலா பின்வருமாறு குறிப்பிடுகிறான்,

'விசுவாசிகளே, நீங்கள் இறையச்சமுள்ளவர்களாக ஆக வேண்டும் என்பதற்காக உங்களுக்கு முன்பிருந்தோர் மீது நோன்பு விதியாக்கப்பட்டிருந்தது போல உங்கள் மீதும் விதியாக்கப்பட்டுள்ளது' (அல் பகரா183).

இஸ்லாத்துக்கு முன்னைய சமூகங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டிருந்தது. இவ்வாறு முன்னைய சமூகங்கள் மீது விதியாக்கப்பட்ட நோன்பை முஸ்லிம்கள் மீதும் விதியாக்கிய அல்லாஹுத்தஆலா அதனூடாக ஒவ்வொரு முஸ்லிமும் இறையச்சமுள்ளவர்களாக மாறவேண்டும் என்பதை நோக்கமாக ஆக்கினான்.

எனவே, நோன்புகளைப் பேணுதலாக நோற்று இறையச்சமுள்ளவர்களாக மாற எமக்கு அல்லாஹ் அருள்பாளிக்கட்டும்.

முப்தி எ.எச்.எம் மின்ஹாஜ்
(காஷிபி, மழாஹிரி) நிந்தவூர்

## தவக்கால சிந்தனை



# வாழ்வின் முன்னுரிமை கிறிஸ்துவே

புனித ஜெரோம் விவிலியத்தின் ஒரு பகுதிக்கு விளக்கவுரை எழுதப் பணிக்கப் பட்டார். எழுதி முடிப்பதற்கான கால எல்லை நிறைவுற்றபோதும் அவரால் அதனை எழுதி முடிக்க முடியவில்லை, காரணம், பல்வேறுபட்ட தேவைகளுடன் நாளாந்தம் தேவையிலுள்ள மக்கள் வருகின்ற போது அவர்களுக்கு பணியாற்றியதால் முடியாமற் போய்விட்டது என்கிறார்.

புனித ஜெரோமிற்கு கிறிஸ்துவில் தன் வாழ்வினை பதிப்பதற்கு தனது வாழ்வின் முன்னுரிமை தெரிந்திருந்தது, அதாவது, தேவையிலுள்ள மக்களுக்கு உதவுவதே அவரது முன்னுரிமையாகும்.

இன்றைய இறைவார்த்தையானது நமது வாழ்வின் முன்னுரிமை கிறிஸ்துவில் மையம் கொண்டிருப்பதே என்பதனை ஞாபகமூட்டுகிறது. விடுதலைப்பயண நூலின் முதலாம் இறைவார்த்தையானது இஸ்ரயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டின் பயணத்தில் பாதி வழியில் நிற்கின்றார்கள். கடவுள் அவர்களை மிகுந்த வலிமையுடன் விடுதலை வாழ்வுக்கு அழைத்துள்ளார்.

தங்களது நீண்ட பயணத்தின் நடு வழியில், மோசே கடவுளைச் சந்திக்க சீனாய் மலைமேல் நாற்பது நாட்கள் ஏறிச்சென்றார். அப்போது மக்கள் மத்தியில் அச்சமும் சந்தேகமும் ஏற்படுகிறது. அப்போது அவர்கள் பொன் கன்றுக்குட்டி ஒன்றை உருவாக்கி, அதனை தங்கள் கடவுளாக்கிக் கொள்கிறார்கள். இது அவர்களின் வாழ்வில் இன்னும் அதிகமான துன்பத்தை கொணர்ந்தது.

இன்றைய நற்செய்தியில், யூதத் தலைமைகள் இயேசுவை கடவுளின் உயிர் வாழும் பிரசன்னம் என்று ஏற்க மறுத்தார்கள். இஸ்ரயேல் மக்களும், யூதத் தலைமைகளும் கடவுள் தங்களது எதிர்பார்ப்பிற்கு ஏற்ப வாழவில்லையென்று கடவுளின் உயிர் வாழும் பிரசன்னத்திலிருந்து விலகிச் சென்றார்கள்.

புனித ஜெரோம் தனது வாழ்வில் வியக்கத்தக்க வழிகளில் வந்த இயேசுவில் தன் கண்களையும், மனதினையும் பதித்தார். நமது வாழ்வின் எதிர்பார்ப்புக்களுக்கு அப்பால் வாழவிழைகின்ற இறைவனில் நமது கண்களையும் மனதினையும் பதிக்க இன்றைய நாளில் நாம் அனைவரும் சவாலுக்கு உட்படுத்தப் படுகிறோம்.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)

சிலாபம், நவதன்குளம்

# கல்லூரிகளுக்கு பிரதமர் நூல்கள் அன்பளிப்பு



புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பகுதியிலுள்ள புதிய பிரதேச செயலகத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொள்ளச் சென்ற பிரதமர் தினேஷ் குணவர்த்தன நேற்று முன்தினம் (12) நவதன்குளம் கனிஷ்ட கல்லூரி மற்றும் சிலாபம் சென்ட் மேரிஸ் கல்லூரிகளுக்கு விஜயம் செய்தார்.

மாணவர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடிய பிரதமர், கல்லூரிகளின் நூலகங்களுக்கு புத்தகங்களை அன்பளிப்புச் செய்தார்.

# சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை பணிப்பாளர் நாயகமாக கொட்டகதெனிய



இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் புதிய பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியாக எயார் வைஸ் மார்ஷல் எச்.எம்.எஸ்.கே.பி. கொட்டகதெனிய நியமிக்கப்பட்டுள்ளார்.

அமைச்சரவையின் பரிந்துரையின் பேரில் துறைமுகங்கள், கப்பற்துறை, விமானப் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, நேற்று அவருக்கான நியமனக்கடிதத்தை கையளித்தார்.

நிகழ்வில்அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ்.ருவான் சச்சந்திரவும் கலந்துகொண்டார்.

எயார் வைஸ் மார்ஷல் கொட்டகதெனிய கொழும்பு பல்கலைக்கழகத்தில் சர்வதேசக் கற்கைகள் மற்றும் இந்தியாவின் மெட்ராஸ் பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு மற்றும் மூலோபாயக் கற்கைகளில் முதுகலைப் பட்டங்களை பெற்றுள்ளார்.

அமெரிக்கா மற்றும் சீனாவில் பாதுகாப்பு பல்கலைக்கழகங்களில் மேலதிக கல்வியையும் இவர் பெற்றார்.

# IMFஉடனான தொடர் நடவடிக்கைகளுக்கு அரசியல் ஸ்திரத்தன்மை மிக முக்கியம்

## கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் பிரியங்க துனுசிங்க

(லோரன்ஸ் செல்வநாயகம்)

சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்ந்தும் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு நாட்டில் அரசியல் ஸ்திரத் தன்மை அவசியம் என்றும், அதற்கு பிரதான அரசியல் கட்சிகள் அனைத்தும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவது அவசியம் என்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் விஞ்ஞான கல்வி பீட பேராசிரியர் பிரியங்க துனுசிங்க தெரிவித்துள்ளார். இதன் மூலமே நாட்டில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதைத் தவிர்க்க முடியும் என்பதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகள் தொடர்பில் அதன் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்திருந்ததுடன் அந்த பேச்சுவார்த்தை கடந்த (11) திகதி ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இப்பேச்சு வார்த்தைக்கு ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் சமுகமளிக்கவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் மட்டுமே கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவித்திருந்தார்.

இந்த பேச்சுவார்த்தை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே, பேராசிரியர் பிரியங்க துனுசிங்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள பேராசிரியர்,

சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்தால் மாத்திரமே நாடு மீண்டும் பொருளாதார நெருக்கடியில் தள்ளப்படுவதை தவிர்க்க முடியும்.

அது தொடர்பில் அனைவரும் சிந்திக்க வேண்டும். அரசியல் கட்சிகளுக்கு இடையில் விரிவான இணக்கப்பாடு அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அரசாங்க பாடசாலைகளில் தகவல் தொழில்நுட்ப பாடம்

## முன்னோடி நடவடிக்கைகள் 19 இல்,

(லோரன்ஸ் செல்வநாயகம்)



அரசாங்க பாடசாலைகளில் தகவல் தொழில்நுட்ப பாடத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான முன்னோடி நடவடிக்கைகள், எதிர்வரும் 19 முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க தகவல் தொழில்நுட்ப பாடத்திட்டத்தை திருத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு தேவையான உதவிகளை வழங்குவதற்கு மைக்ரோசொப்ட் நிறுவனம் அமைச்சுக்கு ஒத்துழைப்பு வழங்க முன் வந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், புதிய தகவல் தொழில்நுட்ப பாடத்திட்டத்தை அரசாங்க பாடசாலைகளில் அறிமுகப்படுத்துவதன் மூலம் சர்வதேச தரத்திற்கு எமது மாணவர்களின் கல்வி அறிவை முன்னேற்ற முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

# வடக்கின் கடல் பாதுகாப்பை கண்காணிக்க சாரணர் படை

## அமைச்சரவையில் யோசனை சமர்ப்பிப்பு



வடக்கின் கடல் பாதுகாப்பை கண்காணிப்பதற்காக "கடல் சாரணர்கள்" என்ற தொண்டர் அமைப்பை உருவாக்க அமைச்சரவை பத்திரம் சமர்ப்பித்துள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அமைச்சர் மேலும் கூறுகையில்,

"வடக்கின் கடற்பரப்பில் இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் கடற்படையினர் முடியுமானவரை தமது கடமைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனாலும்,எமது கடல் வளங்கள்,உபகரணங்கள் என்பன சட்டவிரோதமாக நுழையும் இந்திய மீனவர்களால் அழிக்கப்பட்டு வருகின்றன.இதைத் தடுப்பதற்கு எமது கடற்பரப்புக்கள் கண்காணிக்கப்பட வேண்டும்.

இதுகுறித்த யோசனையை அமைச்சரவையில் முன்வைத்துள்ளேன்.கடல் சாரணர் அமைப்பு என்ற தன்னார்வ தொண்டர் படையை ஏற்படுத்தி கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க ஆலோசித்துள்ள தாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

# ஹோட்டல் அறையிலிருந்து இரண்டு சடலங்கள் மீட்பு

பெண் ஒருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்த ஒருவர்,தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.இச்சம்பவம் அறுகம்பை பகுதியிலுள்ள

ஹோட்டலில் கடந்த (12) இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.ஹோட்டல் அறையில் தங்கியிருந்த 35 வயதுடைய இப்பெண்ணை குறித்த அந்நபர் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்திருந்தார்.

06

# உயர் வெப்பநிலை காலத்தில் பாடசாலைகளின் செயற்பாடுகள்;

## கல்வியமைச்சிலிருந்து நினைவூட்டல்கள்



தற்போதைய உயர் வெப்பநிலையின் பொருட்டு பாடசாலைகள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பான பரிந்துரைகளை நினைவுகூர்ந்து,சகல மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

மரதன் ஓட்டப் போட்டியில் பங்குபற்றிய 16 வயதுடைய மாணவன் திடீரென உயிரிழந்தமை தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளர் வாசன பெரேராவினால் இந்த கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

அமைச்சினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளை சில பாடசாலைகள் புறக்கணித்துள்ளதாக செயலாளர் தனது கடிதங்களில் குறிப்பிட்டுள்ளார். இந்நாட்களில் நிலவும் அதிக வெப்பநிலையால் பாடசாலைகள் மற்றும் பிரிவேனாக்களின் அன்றாட நடவடிக்கைகள், வெளிப்புற நடவடிக்கைகளை திட்டமிடுவது குறித்த அறிவுறுத்தல்களே கடிதத்தில் உள்ளடக்கப் பட்டுள்ளன.

# டயனா கமகேவின் மனு நேற்று நீதிபதிகள் முன்னிலையில் விசாரணை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

தமது கட்சி அங்கத்துவத்தை இல்லாதொழிப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தி மேற்கொண்டுள்ள தீர்மானம் முறையற்றது என தீர்ப்பளித்து அதனை செல்லுபடியற்றதாக உத்தரவு பிறப்பிக்கக்கோரி இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தாக்கல் செய்துள்ள மனு, உச்ச நீதிமன்றத்தினால் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

காமினி அமரசேகர, குமுதினி விக்ரமசிங்க, மஹிந்த சமயவர்தன ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில், இந்த மனு மீதான விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி மனுவில் பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்கிரமரத்ன நீதிமன்றத்திடம் விடயங்களை சமர்ப்பித்தார். இந்த மனுவில் பிரதிவாதிகளாக அத்தியாவசியமான சில தரப்பினர் பெயரிடப்படவில்லை என,அவர் சுட்டிக்காட்டியதுடன் அது பாரிய சட்ட மீறலாகுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

06

# சென்னை, பலாலி விமான சேவைகளை அதிகரிக்கத் திட்டம்



சென்னை, பலாலிக்கிடையிலான விமான சேவையை அதிகரிப்பது உள்ளிட்ட பல அபிவிருத்தி திட்டம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது. இந்திய அதிகாரிகள் இது குறித்து வடமாகாண ஆளுநருடன் கலந்துரையாடினர். ஆளுநரின் செயலகத்தில் இவர்கள் சந்தித்து கலந்துரையாடியதாகத் தெரிய வருகிறது.

வட மாகாணத்தில் உள்ள சுற்றுலாத் தளங்களை அபிவிருத்தி செய்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில், இவர்கள் கவனம் செலுத்தினர்.

இலங்கைக்கான இந்திய பதில் உயர்ஸ்தானிகர் கலாநிதி சத்வஞ்சல் பாண்டே உள்ளிட்ட குழுவினர்,இதன் சாத்தியங்கள் பற்றி வட மாகாண ஆளுநருடன் கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் செவிதி சாய் முரளியும் இச்சந்திப்பில் கலந்துக்கொண்டார்.

பலாலி விமான நிலைய அபிவிருத்தி, சென்னையிலிருந்து பலாலிக்கான விமான சேவையை அதிகரித்தல் மற்றும் காங்கேசன்துறை தூத்துக்குடிக்கிடையிலான பயணிகள் கப்பல் சேவை போன்ற திட்டங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.இயற்கை சக்தி வளங்களை பயன்படுத்தி மின்னுற்பத்தியை மேற்கொள்ளுதல் பற்றியும் இங்கு ஆராயப்பட்டது.

# பண்டிகைக் காலத்தையொட்டி முட்டைக்கு கட்டுப்பாட்டு விலை

## அமைச்சர் மஹிந்த அமரவீரவுடனான சந்திப்பில் தீர்மானம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பண்டிகைக் காலத்தில் முட்டையின் விலையை குறைக்கும் நோக்கில் கட்டுப்பாட்டு விலையை விதிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முட்டை உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கிடையில் விவசாய அமைச்சில் விசேட பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது. இப்பேச்சு வார்த்தையில் பங்கேற்ற மேற்படி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஹேமாலி கொத்தலாவல முட்டைக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிப்பது தொடர்பான தீர்மானத்தை முன் வைத்தார்.

இதையடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க, சந்தையில் 50 ரூபாவுக்கும் குறைந்த விலையில் எங்கும் முட்டைகள் விற்பனை செய்யப்படுவதில்லை என தெரிவித்தார்.

அதேவேளை, பொருளாதார மத்திய நிலையங்களில் குறித்த விலைக்கு குறைவாக முட்டைகள் விற்பனை செய்யப்படுகின்ற போதிலும் அந்த விலையில் சாதாரண மக்களுக்கு முட்டைகள் கிடைப்பதில்லை என்றும் சுட்டிக் காட்டினார்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் பங்குனி மாதம் 01ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரமழான் பிறை 03

### குறள் தரும் சிந்தனை



அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்

பொறாமை, பேராசை, பொங்கும் கோபம், புண்படுத்தும் சொல் ஆகிய இந்த நான்கும் அறவழிக்குப் பொருந்தாதவையாகும்.

# வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் பசுமைப் புரட்சி!

வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கையில் அரசாங்கம் தற்போது ஈடுபட்டுள்ளது. மக்கள் ஒவ்வொருவரும் தத் தமது வீடுகளில் வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபடுவார்களேயானால், அவர்கள் தங்களுக்கான காய்கறிகளை உற்பத்தி செய்து கொள்ள முடியும். இதன் மூலம் வாழ்க்கைச் செலவை ஓரளவு ஈடுசெய்து கொள்வதற்கு முடியும். காய்கறி விலைகள் தற்காலத்தில் அதிகரித்திருப்பதனால் மக்கள் அதிக பணத்தை அதற்காகச் செலவிட வேண்டிய அவசியமும் இல்லை.

இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டே வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கின்றது. இத்திட்டத்தை வெற்றியுடன் முன்னெடுத்துச் செல்வதற்காக சில ஊக்குவிப்பு நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளவிருக்கின்றது.

இலங்கையில் மரக்கறி விலைகள் எப்போதும் சீராக இருப்பதில்லை. காலநிலை சீராக இருக்குமானால், மரக்கறிகளின் விலைகள் வீழ்ச்சியடைவது வழக்கம். ஆனால் கடும் வரட்சி மற்றும் தொடர்ச்சியான மழை வேளைகளில் மரக்கறிப் பயிர்கள் அழிவடைவதனால் காய்கறிகளின் விலைகள் உச்சத்துக்குச் சென்று விடுகின்றன. இவ்வாறான சூழ்நிலையில் மக்களால் சமாளிக்க முடியாதவாறு காய்கறிகளின் விலைகள் கடுமையாக உயர்ந்து விடுகின்றன.

கடந்த மாதமும் இவ்வாறுதான் இலங்கையில் மரக்கறிகளின் விலைகள் உச்சத்தைத் தொட்டன. ஒரு கிலோ கரட் இரண்டாயிரம் ரூபாவையும் தாண்டி விற்பனையாகியது. மலைநாட்டு மரக்கறிகள் மாத்திரமன்றி, ஏனைய பிரதேசங்களில் விளைகின்ற கத்தரி, புடோல், பாகற்காய், பயற்றங்காய் போன்ற பாரம்பரிய மரக்கறிகளின் விலைகளும் மிக அதிகமாகவே இருந்தன. மக்கள் பலர் மரக்கறிகளை வாங்குவதையே தவிர்த்துக் கொண்டனர்.

தற்போதுதான் காய்கறிகளின் விலைகள் சற்றுக் குறைவடைந்திருக்கின்றன. ஆனாலும் மரக்கறிகளின் உற்பத்தியானது முன்னைய நிலைமைக்கு இன்னுமே வந்துவிடவில்லை. மரக்கறிகளின் விலைகள் இனிமேல் முன்னைய நிலைமைக்கு வருவதற்கு வாய்ப்பே கிடையாதென்றுதான் காய்கறி விற்பனையாளர்கள் கூறுகின்றனர்.

நாட்டில் காய்கறி உற்பத்தி வீழ்ச்சியடைவதற்கு சீரற்ற காலநிலை மாத்திரம் காரணமல்ல. காய்கறிச் செய்கை மீது மக்களுக்கு படிப்படியாக நாட்டம் குறைவடைந்து வருவதே இதற்கான பிரதான காரணமாகும். பயிர்ச்செய்கை என்பது முன்னரைப் போன்று இக்காலத்தில் சாதாரணமான தொழில் அல்ல. அன்றைய காலத்தில் காய்கறிச் செய்கையாளர்கள் அதிகளவு வருமானத்தைப் பெற்றனர். காய்கறிச் செய்கையில் சவால்கள் என்பது அக்காலத்தில் குறைவாகவே இருந்தன. பீடைத்தாக்கம், பசளைப் பாவனை, சந்தைப்படுத்தல் என்பன அக்காலத்தில் பெரும் சவாலாக இருக்கவில்லை.

ஆனால் இக்காலத்தில் பயிர்ச்செய்கையென்பது பெரும் சவால்கள் நிறைந்ததாகவே மாறிவிட்டது. பசளைகள், பீடைநாசினிகள் ஆகியவற்றின் விலையேற்றம், கூலித்தொழிலாளர்களுக்கான அதிகரித்த சம்பளம் உட்பட பெரும் பணத்தைச் செலவிட்டே மரக்கறிச் செய்கையில் ஈடுபட வேண்டியுள்ளது. மரக்கறிச் செய்கையாளர்கள் கடன்பட்டும், தமது தங்கநகைகளை அடகு வைத்துமே பயிர்ச்செய்கையில் ஈடுபட வேண்டியுள்ளது.

அவர்களுக்கு அமோகமான விளைச்சல் கிடைத்தாலும் கூட, அவற்றைச் சந்தைப்படுத்துவதில் எதிர்நோக்குகின்ற சிரமங்கள், பாதிப்புகள் கொஞ்சநஞ்சமல்ல. நகரங்களில் உள்ள சந்தைகளுக்கு நாம் செல்வோமானால், கூடுதல் விலை கொடுத்தே காய்கறிகளை வாங்க வேண்டியேற்படுகின்றது. ஆனால் மலைநாடு மற்றும் கிராமங்களிலுள்ள மரக்கறிச்செய்கையாளர்களிடமிருந்து மிகக்குறைவான விலைக்கே காய்கறிகள் கொள்வனவு செய்யப்படுகின்றன. அக்காய்கறிகள் கொழும்பு போன்ற நகரங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

மரக்கறிச் செய்கையாளர்களால் தங்களது உற்பத்திப் பொருட்களை நியாயமான விலைக்கு விற்பனை செய்ய முடிவதில்லை. அவர்களது காலடி தேடி வருகின்ற வியாபாரிகள் மிகக்குறைந்த விலை கொடுத்தே காய்கறிகளை கொள்வனவு செய்து செல்கின்றனர். நிலத்தைப் பண்படுத்துவதில் ஆரம்பித்து அறுவடை செய்யும் வரை மரக்கறிச் செய்கையாளர்கள் எதிர்நோக்குகின்ற சிரமங்கள், செலவினங்கள் மிகவும் அதிகமாகும். ஆனாலும் அறுவடை முடிந்ததும் மிகக்குறைந்த விலைக்கே அவர்கள் தங்களது காய்கறிகளை காலடி தேடி வருகின்ற வியாபாரிகளுக்கு அவற்றை விற்கின்றனர்.

சந்தைப்படுத்தலில் உள்ள பலவீனமே இதற்குக் காரணமாகும். பாடுபட்டு உழைக்கின்ற மரக்கறிச் செய்கையாளர்கள் தொடர்ந்தும் வறுமையில் வாடுகின்றனர். ஆனால் அவர்களிடமிருந்து காய்கறிகளை கொள்வனவு செய்கின்ற வியாபாரிகளோ செல்வச்செழிப்பில் வாழ்கின்றனர். இந்த அநீதிக்கு முடிவு காணப்படுவது அவசியமாகும். அப்போதுதான் உற்பத்தியாளர்களும் நுகர்வோரும் பாதுகாக்கப்பட முடியும்.

மரக்கறிகள் மாத்திரமன்றி ஒட்டுமொத்த உணவு உற்பத்தியும் ஊக்குவிக்கப்பட வேண்டியது அவசியமாகும். கமக்காரர்கள் மாத்திரமன்றி சாதாரண மக்களும் மரக்கறிச் செய்கையில் ஈடுபடுவார்களானால் ஒவ்வொரு வீட்டிலும் பணவிரயத்தைப் பெருமளவில் குறைத்துக் கொள்ள முடியும். ஆகவே காய்கறிச் செய்கையை அரசாங்கம் ஊக்கவிப்பது சிறந்த திட்டமாகும்.

editor.tkn@lakehouse.lk

# கொட்டாஞ்சேனை சாயி நாதனின் சரணாலயத்தில் பாபா அழைக்கிறார் 8ஆம் வருட சிறப்பு நிகழ்வுகள்



கொழும்பு, கொட்டாஞ்சேனை பகுதியில் வாழும் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் 2 ஆம் திகதி வந்தமர்ந்து 'சீரடி சாயி நாதனின் சரணாலயம்' என தனக்கொரு பெயரை ஏற்படுத்தி கோயில் கொண்டார் ஜீவாதார பாபா.

பக்தர்கள் தங்கள் துயர் தீர்க்கப்படும் என்று நம்பிக்கையில் திரண்டு வந்து தங்கள் பிரார்த்தனையை பாபாவிடம் முறையிட்டு வருகிறார்கள். எந்தவொரு அடியாரின் பிரார்த்தனையும் வீண்போகவில்லை. குழந்தை இல்லாமல் வரும் பக்தர்களுக்கு சாய் என்ற நாமத்தில் ஒரு குழந்தைச் செல்வம் தவழச் செய்கிறார்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கி அயல்நாடு செல்ல விசா கிடைக்குமா என ஏக்கத்துடன் வரும் மக்களுக்கும் தீர்வு கிடைக்க அருள் புரிகிறார். பக்தர்கள் வெளிநாடு சென்றவுடன் கிடைக்கும் முதல் சம்பளத்தை பாபாவுக்கு காணிக்கையாக செலுத்துகின்றார்கள். சாயி சரணாலயத்தில் காலடி வைக்கும் ஆத்மாக்களை புனிதஆத்மாக்களாக மாற்றும் வகையில் அருள்பாலித்து வருகின்றார்.

நினைத்த மாத்திரத்திலேயே அருகிலேயே தாம் இருப்பதை உணர்த்தி ஒளிவுமறைவின்றி தம் அன்பை வெளிக்காட்டிஅனுக்கிரகம் செய்பவர் சத்குரு ஷீரடி சாய் பாபா. இத்தனை காலமும் அவர் எமக்கு அளித்த அத்தனை நன்மைகளுக்கும் நன்றிகூறி, அவர்மீது நமக்குள்ள பக்தி பாவத்தை காட்டும் வகையில் ஷீரடி சாயியின் ஒரு இலட்சம் அர்ச்சனை 2024 ஆம் ஆண்டு தொடர்ந்து 3 நாட்கள், அதாவது மார்ச் மாதம் 15, 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

## தமிழகத்திலிருந்து சாயிமகா தொண்டர் பிரசாத் கணேஷ் வருகை



மார்ச் 15, 16 ஆம் திகதிகளில் மாலை 3.30_ 5.30 மணி வரையிலும், 17 ஆம் திகதி காலை 8.30 – 10.30 மணி வரையிலும் இலட்சார்ச்சனை நடைபெறும். மார்ச் 17 ஆம் திகதி இலட்சார்ச்சனை பூர்த்தியுடன் அன்னதானம் நடைபெறும். பக்தர்கள் தனித்தனியாக அமர்ந்து அவரவர் முன்பு வீற்றிருக்கும் பாபா மூர்த்திக்கு அர்ச்சனை ஆராதனை செய்வது மனம் கொள்ளா ஆனந்தம். அடியார்கள் இப்பூசையில் பங்குபெற வேண்டுமென்று வேண்டுகிறோம்.

இவ்விசேட நிகழ்வுகளில் கலந்து கொள்ள, தென்தமிழகத்தின் சாயிமகா தொண்டர், பிரபல திரைப்பட நடிகை ஜீ. சுப்புலட்சுமி அவர்களின் பேரன் பிரசாத் கணேஷ் வருகை தருகிறார். பாரம்பரிய இசைக்குடும்பத்தை சேர்ந்த அவர் 1000 இற்கும் மேற்பட்ட பக்திப் பாடல்களுக்கு இசை அமைத்தவர். பக்திமய கோபுரம் டி.வி. நிறுவி, அதன் மூலம் தற்கால மகான்களைப் பற்றி உலகுக்கு உரைப்பவர்.

சாயிநாதனின் சரணாலயத்தில் மார்ச் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் மாலை 6 மணிக்கும், 17 ஆம் திகதி காலை 10.45 மணிக்கும் 'அருள் தரும் பாபாவின் அற்புத தரிசனம்' என்ற தலைப்பில் பாபாவின் பல்வேறு அற்புதங்களையும், நம் அல்லல் தீர்க்கும் மகான்களின் மகா மந்திரங்களையும் பக்தர்களிடையே பகிர்ந்து கொள்ள இருக்கிறார் அவர்.

மேலதிக விபரங்களுக்கு +94 (76) 163 0462 என்ற தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

**அறங்காவலர் குழு...**

# கனடாவிலுள்ள புலம்பெயர் தமிழ் மாணவர்கள் எடிசன் திரைவிருது விழாவில் நடன நிகழ்ச்சி

உலகத் தமிழர்களால் இணைய வாக்குகள் பெற்று தேர்ந்தெடுக்கப்படும் தமிழ்த்திரைக் கலைஞர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வில் கனடா நாட்டு தமிழ் மாணவர்கள் நடனமாட உள்ளனர். மார்ச் 24 ஆம் திகதி சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள வர்த்தக மையத்தில் 16 ஆம் ஆண்டு எடிசன் திரை விருது வழங்கும் விழா நடைபெற உள்ளது.



அந்நிகழ்வில் பல்வேறு நாடுகளில் உள்ள தமிழ்த்திரைக் கலைஞர்கள், தன்னார்வ இசையமைப்பாளர்கள், நடன மணிகள், பின்னணிப் பாடகர்கள் ஆகியோர் தமிழ்நாட்டில் உள்ள திரைக் கலைஞர்களுடன் இணைந்து கலைநிகழ்வு நடத்த உள்ளனர். அந்நிகழ்வில் குறிப்பாக 2015 ஆம் ஆண்டு எடிசன் திரைக் கலைஞர் விருது விழாவில் தன்னார்வ இசையமைப்பாளராகக் கலந்து கொண்டு நிகழ்ச்சி நடத்திய கனடாவைச் சேர்ந்த ராம் அகராதி அவர்கள் தமிழகத்தில் உள்ள முன்னணி நடனக் கலைஞர்களுடன் இணைந்து கனடாவில் வாழும் தமிழ் மாணவர்களுக்கு நடனம் பயிற்றுவித்து, அவர்களை இவ்வாண்டு நடைபெறவுள்ள எடிசன் திரை விருது விழாவில் நடனமாட உள்ளார்.

இதன் மூலம் கனடா தமிழ் மாணவர்கள் தமிழ்த் திரை உலகில் வாய்ப்புகளைப் பெறவும், அவர்கள் தங்களின் திறமைகளை பல்வேறு நாட்டு தொலைக்காட்சிகளில் மூலம் தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்தவும் வழியேற்படுமென்று எடிசன் திரைவிருது குழுவின் தலைவர் செல்வகுமார் தெரிவித்தார்.




குறிப்பாக இவ்வாண்டு இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், லண்டன், கனடா நாட்டு கலைஞர்கள் பங்கேற்று கலை விருந்து படைக்கவுள்ளனர்.

# கொழும்பில் எதிர்வரும் 19ஆம் திகதி தேசிய திட்டமிடல் கருத்தரங்கு

தேசிய திட்டமிடலின் (National Planning Symposium) முக்கியத்துவம் தொடர்பான பெறுமதிமிக்க நுண்ணறிவுகளை பெற்றுக்கொள்ளும் நோக்கிலும், தேசிய திட்டமிடல் தொடர்பாக எதிர்கால வாய்ப்புகள் மற்றும் அதன் சவால்களை ஆராயும் நோக்கிலும் தேசிய திட்டமிடல் கருத்தரங்கொன்று இம்மாதம் 19ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொள்கை வகுப்பாளர்கள், பொருளாதார வல்லுநர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகளை ஒன்றிணைத்து பல்வேறு தலைப்புகளில் நான்கு அமர்வுகளாக இக்கருத்தரங்கு நடத்தப்படவுள்ளதுடன், திறமை, ஆளுமைமிக்க வளவாளர்கள் பலர் கருத்தரங்கில் கலந்துகொண்டு தமது கருத்துப்பகிர்வுகளை வழங்கவுள்ளனர்.

'இன்றைய தேசிய திட்டமிடல் நிபுணர்களின் நுண்ணறிவு' எனும் தலைப்பில் முதலாவது அமர்வு நடைபெறவுள்ளதுடன், தேசிய திட்டமிடலில் தற்போதைய நிலைமை தொடர்பான தனது அனுபவங்கள் மற்றும் கருத்துகளை தேசிய திட்டமிடல் நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் ஆர்.எச்.டபிள்யூ. ஏ.குமாரசிறி வழங்கவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து இரண்டாவது அமர்வில் 'நேற்றைய தேசிய திட்டமிடல் மற்றும் அதன் தாக்கங்கள்' எனும் தலைப்பில் கருத்துப்பகிர்வுகளை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரும் பிரபல்யமான பொருளாதார நிபுணருமான கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி வழங்கவுள்ளதுடன், தேசிய திட்டமிடலில் வரலாற்றுக் கண்ணோட்டம் தொடர்பாக அவர் கவனம் செலுத்தவுள்ளார். கடந்த கால உத்திகள் மற்றும் நிகழ்காலத் தாக்கங்கள் தொடர்பாக ஆராயும் வகையில் கருத்துப்பகிர்வுகளை அவர் வழங்கவுள்ளார்.

பெறுமதியான பாடங்களை வழங்குவதையும் நாட்டில் தேசிய திட்டமிடல் மீதான வளர்ச்சியில் ஆழமான புரிந்துணர்வுகளை வழங்குவதையும் இந்த அமர்வு நோக்காகக் கொண்டுள்ளது.

மூன்றாவது அமர்வு 'தேசிய திட்டமிடல் நோக்கங்களுடன் Macro பொருளாதாரக் கொள்கைகளை சீரமைத்தல்' எனும் தலைப்பில் மத்திய வங்கி ஆளுநர் கருத்துப்பகிர்வுகளை வழங்கவுள்ளார். இதன்போது தேசிய திட்டமிடல் மற்றும் Macro பொருளாதாரக் கொள்கைக்கும் இடையிலான தொடர்புகளை அவர் ஆராயவுள்ளதுடன், தேசிய திட்டமிடல் தொடர்பான அவதானிப்புகளுடன் பொருளாதார இலக்குகளை சீரமைப்பதற்கான வழிவகைகளையும் அவர் ஆராயவுள்ளார்.




நான்காவது அமர்வு 'இன்றைய தேசிய திட்டமிடலில் சவால்களை எதிர்கொள்ளுதல்' எனும் தலைப்பில் பொதுக்கொள்கை நிபுணரும் பிரபல்யமான கல்வியாளருமான கலாநிதி லாய்ட் பெர்னாண்டோ கருத்துப்பகிர்வுகளை வழங்கவுள்ளார். நகர அபிவிருத்தி, நிலையான சுற்றாடல், சமூக சமத்துவம் மற்றும் தொழில்நுட்ப வசதிகளை ஏற்றுக்கொள்ளுதல் போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக தேசிய திட்டமிடல் தொடர்பான முயற்சிகள் மற்றும் தற்போது எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாக அவர் தெளிவுபடுத்தவுள்ளார்.

மேலும், பிரபல்யமான நிபுணர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கொண்ட கட்சிகளின் அரசியல் பிரதிநிதிகளையும் கலந்துகொள்ளுமாறு கருத்தரங்கின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# சவூதியில் தேசியக்கொடிக்கென அனுஷ்டிக்கப்படும் FLAG DAY



ஒவ்வொரு வருடமும் மார்ச் 11 ஆம் திகதி சவூதி அரேபியாவின் தேசிய கொடி தினமாகும். சவூதி அரேபியா தனது நாட்டின் தேசியக்கொடி தினத்தை ஒவ்வொரு வருடமும் நினைவுபடுத்தி வருகின்றது.

1937 மார்ச் 11 ஆம் திகதி சவுதி அரேபியாவை ஆட்சி செய்த மன்னர் அப்துல் அஸீஸ் அவர்களால் அந்நாட்டு தேசியக்கொடி பச்சை நிறத்தில் 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என்ற இஸ்லாத்தின் கருப்பொருள் வார்த்தை பொதிந்ததாக அறிமுகம் செய்யப்பட்டது.



அறிமுகம் செய்யப்பட்ட காலம் முதல் இன்றுவரை நான்கு கட்டங்களாக இத்தேசிய கொடியில் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளது.

1. 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என்ற வாசகம் மாத்திரம்.
2. 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என்ற வாசகத்தின் மேல் இரண்டு வாள்கள்.
3. 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என்ற வாசகத்தின் மேல் ஒரு வாள்.
4. 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என்ற இஸ்லாமிய கருப்பொருள் வாசகம் மேலே கொண்டு செல்லப்பட்டு வாள் கீழே கொண்டுவரப்பட்டது. இந்த தேசியக் கொடியே தற்போது நடைமுறையில் உள்ளது.

இதில் உள்ள 'லாஇலாஹ இல்லல் லாஹ்' என்ற வாசகம் வணங்கப்படுவதற்கு தகுதியான ஒரே இறைவன் அல்லாஹ் என்பதனை குறிப்பதோடு இதில் உள்ள வாள் வீரம், கண்ணியம், உயர்ந்த அந்தஸ்து, கல்வி ஞானம், வீரம், நீதி, அபிவிருத்தி, அமைதியான வாழ்வு போன்ற ஆழமான அர்த்தங்களைக் கொண்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 11 ஆம் திகதி தேசியக் கொடி தினமாக நினைவுகூரப்பட வேண்டுமென கடந்த வருடம் 2023 மார்ச் 01 ஆம் திகதி மன்னர் சல்மான் இப்னு அப்துல் அஸீஸ் அவர்களால் அரச தீர்மானமாக பிரகடனப் படுத்தப்பட்டது.

அந்நாட்டு தேசியத்தை சவுதி அரேபியா மக்கள் மிகவும் நேசித்து வருவதையும், கண்ணியப்படுத்தி வருவதையும் ஊடகங்களூடாக பார்க்க முடிகிறது. இத்தேசிய கொடி அம் மக்களின் அடையாளமாகவும், கௌரவமாகவும் திகழ்கிறது.

சவூதி அனுஷ்டிக்கும் இத்தினம் 'FLAG DAY' எனும் மகுடத்தில் நாட்டின் அனைத்து அரச அலுவலகங்களிலும் அனுஷ்டிக்கப்படுவதுடன் தேசியக் கொடியால் அலங்கரிக்கப்பட்டும் காணப்படும்.

சர்வதேச முஸ்லிம் நாடுகளில் தற்போது திருக் கலிமாவை தாங்கிய ஒரேயொரு கொடியாக சவூதியின் தேசியக் கொடி மாத்திரமே திகழ்கிறது. அதனால் முஸ்லிம்கள் மத்தியில் இக்கொடிக்கு தனி மரியாதை இருப்பதை அவதானிக்கலாம்.

கொடியில் கலிமாவையும், முஸ்லிம்கள் தொழுகையில் முன்னோக்கும் கிப்லாஃ திசையான காபாஃ அமைந்திருக்கும் புனித மக்காவையும், நபிகள் நாயகத்தின் வாழ்விடமான புனித மதீனா நகரையும் தன்னகத்தே கொண்டுள்ள சவுதி அரேபியாவை இத்தருணத்தில் நாம் நினைவு கூர்வது பொருத்தமாகும்.

# கேகாலை, வேரகல கனிஷ்ட வித்தியாலய மாணவர் பாராளுமன்ற கன்னி அமர்வு

## ஜனாதிபதி செயலகத்தில் அமைச்சர் சுசில், சாகல ரத்நாயக்க பங்கேற்பு





கேகாலை, வேரகல கனிஷ்ட வித்தியாலய மாணவர் பாராளுமன்றத்தின் கன்னி அமர்வு அண்மையில் (11) ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. பாராளுமன்ற சபை முதல்வரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் ஜனாதிபதி செயலணியின் பிரதம அதிகாரி சாகல ரத்நாயக்க, பாராளுமன்றத்தின் பதில் செயலாளர் நாயகம் ஹன்ஸ அபேரத்ன, ஜனாதிபதியின் பாராளுமன்ற விவகார ஆலோசகர் ஆஷு மாரசிங்க, பிரதமரின் மேலதிக செயலாளரும் பாராளுமன்ற சபை முதல்வரின் செயலாளருமான ஹர்ஷ விஜேவர்தன, ஜனாதிபதி செயலகத்தின் உதவிப் பணிப்பாளர் மேஜர் நதீக தங்கொல்ல மற்றும் இலங்கை வங்கியின் பாராளுமன்றக் கிளையின் முகாமையாளர் இசுரி கீகனகே ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, இணைப் பாடவிதான செயற்பாடாக மாணவர் பாராளுமன்ற எண்ணக்கருவை பாடசாலைக் கட்டமைப்பில் பரவலாக்குவதன் மூலம் பாராளுமன்ற முறைமை மற்றும் ஜனநாயகம் தொடர்பான அறிவை மாணவர்கள் மத்தியில் விருத்தி செய்வதற்கு எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

இதன்போது உரையாற்றிய தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் ஜனாதிபதி செயலணியின் பிரதம அதிகாரி சாகல ரத்நாயக்க, மாணவர் பாராளுமன்ற எண்ணக்கருவின் மூலம் மாணவர் தலைமுறையினர் பாராளுமன்றத்தின் பொறுப்புக்கள் பற்றிய அறிவை விருத்தி செய்துகொள்வதற்கும் பொதுமக்கள் பிரதிநிதிகளாக செயற்படுவதற்கான பயிற்சியை பெறுவதற்கும் சந்தர்ப்பம் காணப்படுவதாக சுட்டிக்காட்டினார்.

அத்துடன், இலங்கை பாராளுமன்றத்தின் பதில் செயலாளர் நாயகம் ஹன்ஸ அபேரத்ன இங்கு குறிப்பிடுகையில், ஜனநாயகக் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கு மாணவர் பாராளுமன்ற எண்ணக்கரு மிகவும் முக்கியமானதாகும் எனத் தெரிவித்தார்.

வேரகல கனிஷ்ட வித்தியாலய மாணவர் பாராளுமன்றத்தின் கன்னி அமர்வை ஆரம்பிக்கும் வகையில் சபாநாயகர் தெரிவு செய்யப்பட்டதுடன், பிரதமர், அமைச்சர்கள் மற்றும் ஏனைய அங்கத்தவர்கள் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர். அத்துடன், வருகை தந்த அதிதிகளினால் மாணவர் பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

அத்துடன், இலங்கை வங்கியின் பாராளுமன்றக் கிளையினால் பாடசாலையின் 37 மாணவர்களுக்கு நிதி வைப்பிலிடப்பட்ட 37 வங்கிக் கணக்குகள் திறந்து அன்பளிப்பு செய்யப்பட்டதுடன், பாடசாலைக்கு ஒலிபெருக்கியொன்றும் அன்பளிப்பு செய்யப்பட்டது.

இதன்போது இலங்கை பாராளுமன்றத்தினால் வேரகல கனிஷ்ட வித்தியாலயத்துக்கு புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டதுடன், மாணவர் பாராளுமன்றத்தை நிறுவுவதற்கான பங்களிப்புக்காக இலங்கை பாராளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களத்துக்கும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கும், அதிதிகளுக்கும் பாடசாலையினால் நினைவுச்சின்னங்களும் வழங்கப்பட்டன.

இலங்கை பாராளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களம் மற்றும் ஜனாதிபதி செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் இலங்கை பாராளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்கள அதிகாரிகள், கல்விப் பணிப்பாளர் கீதானி சுபசிங்க, வேரகல கனிஷ்ட வித்தியாலயத்தின் அதிபர் எம்.எம். சாந்தணி திலகரத்ன, மாணவர் பாராளுமன்றத்துக்குப் பொறுப்பான ஆசிரியர் சுரணி மஹேஷிகா விக்கிரமசிங்க உள்ளிட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# கலைமகள் வித்தியாலய விளையாட்டுப் போட்டி







கொழும்பு 14, கலைமகள் வித்தியாலயத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நேற்று கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. கொழும்பு பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் நவ்சர் பௌசி, சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் துரைராசா சுரேஷ், கொழும்பு நகர சபையின் முன்னாள் உறுப்பினர்கள் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டார்கள்.

# திலக் சி.ஏ. தனபால, சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபராக பதவி உயர்வு

பொலிஸ் விசேட பணியகப் பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மாஅதிபர் திலக் சி.ஏ. தனபால தேசிய பொலிஸ் ஆணைக் குழுவினால் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

மாத்தறை தெய்யந்தர தேசிய பாடசாலையின் புகழ்பெற்ற பழைய மாணவரான அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் சிறப்புப்பட்டம் பெற்று இலங்கை பொலிஸ் சேவையில் 01.02.2001 முதல் பயிற்சி உதவி பொலிஸ் அத்தியட்சகராக இணைந்தார்.

கொழும்பு, குளியாப்பிட்டி, வவுனியா, தங்காலை போன்ற இடங்களிலும் பொலிஸ் விசேட பணியகம், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகம் போன்றவற்றிலும் பணி புரிந்துள்ளார். 2007 இல், கொழும்பு பல்கலைக்கழகத்தில் நிதியியல் பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டமும் பெற்றுள்ளார்.



அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான், சிங்கப்பூர், பிரிட்டன், ஸ்பெயின், ஆஸ்திரியா, அஸர்பைஜான், பிரேசில், நேபாளம், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ரஷ்யா போன்ற நாடுகளில் பயிற்சி நெறிகள், மாநாடுகள், பயிற்சிப்பட்டறைகள் போன்றவற்றில் பங்கேற்று பல சர்வதேச அனுபவங்களைப் பெற்றுள்ளார்.

2013 ஆம் ஆண்டில், அவர் தெற்கு சூடானில் ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் பொலிஸ் சேவையிலும் ஒரு வருடம் பணியாற்றியுள்ளார்.

பொலிஸ் சேவையில் இதுவரை பொலிஸ் திறமைப் பதக்கம் உட்பட 9 பதக்கங்களை வென்றுள்ளார். 10 தடவைகள் பொலிஸ் மா அதிபரின் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார். அவர் பணிபுரிந்த பல பணியிடங்களில் தேசிய திறன் விருது வழங்கப்படுவதற்குத் தேவையான தலைமைத்துவத்தை வழங்கியுள்ளார்.

# இலங்கை விமானப்படையின் 73வது ஆண்டு நிறைவு விழா

## மொரவெவ சிங்கள வித்தியாலயத்தில் விஞ்ஞான ஆய்வுக் கூடம்

**(ரொட்டவெவ குறூப் நிருபர்)**

இலங்கை விமான படையின் 73 வது நிறைவு தினத்தை முன்னிட்டு திருகோணமலை மொரவெவ சிங்கள வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுக் கூடம் மற்றும் ஒன்று கூடல் மண்டபம் என்பன நேற்றுமுன்தினம் மாணவர்களிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இலங்கை விமானப் படை வீரர்களினால் நிர்மாணிக்கப்பட்ட இக்கட்டடம் விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்சவினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

'பிருணு குசக்,பிருணு ஹிசக்' அமைப்பின் ஊடாக 53 நாட்களில் இக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டதாகவும், வடக்கு மாகாணத்தில் 73 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகவும் விமானப்படை தளபதி இதன்போது தெரிவித்தார்.



# குறுந்திரைப்பட போட்டி

Hefty Entertainment media வின் பதினோராவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அகில இலங்கை ரீதியாக குறுந்திரைப்பட போட்டி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணை வழங்கும் இப்போட்டியில், உங்களுடைய கதைகளை குறுந்திரைப்படமாக்கி 15/03/2024 இற்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பிவைக்க முடியும். சமூகத்தில் மாற்றத்தை கொண்டுவரக்கூடிய எந்தவொரு தலைப்பையும் தெரிவுசெய்து படமாக்க முடியும்.




நீங்கள் ஒளிப்பதிவு செய்யும் குறுந்திரைப்படமானது 8 நிமிடங்களுக்கு குறையாமலும் 15 நிமிடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். பின்னணி இசை வேறு படங்களில் இருந்தோ வேறு தளங்களில் இருந்தோ பதிவிறக்கம் செய்திருக்க கூடாது. அது உங்கள் சொந்த படைப்பாகவே இருத்தல் வேண்டும். திரைக்கதையானது உங்களுக்கே உரித்தான தனிப்பாங்கில் எடுக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். ஏற்கனவே படமாக்கப்பட்ட கதைகளை மீண்டும் நீங்கள் படமாக்கலாகாது.

இன்றிலிருந்தே உங்கள் படத்தை ஒளிப்பதிவாக்கி குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் உங்கள் குறுந்திரைப்படம், Teaser, poster என்பனவற்றை எமக்கு அனுப்பி வையுங்கள்.

# மருதமுனை பிரதேச மாணவர்களை நோன்பு காலத்தில் ஒழுக்கவிழுமியம் பேண வைக்க நடவடிக்கைகள்

**(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)**



மருதமுனை பாடசாலைகளின் கல்வி மேம்பாடுகளை ஒருநிலைப்படுத்தி, மாணவர்களை ஒழுக்கவிழுமியங்களை நோக்கி திசைமுகப்படுத்தும் நோக்கில் மருதமுனை ஜம் இய்யத்துல் உலமா மற்றும் சமூக ஆர்வலர்களால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளின் நிமித்தம் 'மருதமுனை பாடசாலைகளின் மேம்பாட்டு பேரவை' என்ற அமைப்பானது அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

கல்முனை வலயக் கல்வி அலுவலக அதிகாரிகளின் மேற்பார்வையுடன் மருதமுனை பாடசாலை அதிபர்களின் கூட்டிணைவில் இதற்கான ஆரம்பக் கூட்டம் அண்மையில் மருதமுனை அல்ஹம்றா வித்தியாலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் தலைமையில் நடைபெற்றது.

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி நிருவாகத்திற்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபிர், கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம்.எச். றியாஸா(கல்வி முகாமைத்துவம்), ஜிஹானா ஆலிப்(கல்வி அபிவிருத்தி) உள்ளிட்ட அதிகாரிகளுடன் மருதமுனையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள், அதிபர்கள், பிரதி அதிபர்கள் ஆகியோரும் இதில் பங்கேற்றனர்.

நோன்புகால வணக்க வழிபாடுகள் கருதி சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

நோன்பு 20 வரை உயர்தரம் தவிர்ந்த ஏனைய மாணவர்களின் பாடசாலை நேரசூசி வகுப்புக்கள் மதியம் 12 மணிக்கு முன்னர் முடிக்கப்பட வேண்டும். நோன்பு 20 முதல் பெருநாள் முடியும் வரை எந்த மேலதிக வகுப்புக்களையும் நடத்தலாகாது. தரம் 6 முதல் 9 வரையிலான மாணவர்களுக்கு பாடசாலைகளில் மேலதிக வகுப்புக்கள் எதனையும் நடத்துவதில்லை.

வீடுகளிலும், பிரத்தியேக நிலையங்களிலும் மேலதிக வகுப்புக்களை நடத்துகின்றவர்கள் மதியம் 12 இற்கு முன்னர் நிறைவு செய்ய வேண்டும். தரம் 10, 11 மாணவர்களுக்கு திங்கள் முதல் வியாழன் வரை பாடசாலைகளின் மேலதிக வகுப்புக்கள் நடத்தப்பட வேண்டும். அவை மதியம் 12 மணிக்கு முன்னர் நிறைவு செய்யப்பட வேண்டும்.

மாணவர்களின் நடத்தைகள் பொது இடங்களிலும் அவதானிக்கப்பட்டு அவை மாணவர் தலைவர், வகுப்புத் தலைவர் தெரிவுகளில் கருத்தில் கொள்ளப்படல்.

நோன்பு காலத்தில் ஆசிரியர்களின் செயற்பாடுகள் சமூகத்திற்கு முன்னுதாரணமாக அமைய வேண்டும் என்பதை ஆசிரியர்களுக்கு பாடசாலை மட்டத்தில் வலியுறுத்தல்.

மேற்படி விடயங்களை அவதானித்து நோன்பு 10 இல் பேரவை கூடி அதன் முன்னேற்றங்கள் குறித்து ஆராய்தல்.

பேரவையின் செயற்பாடுகளை எதிர்காலத்தில் மேலும் விரிவாக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வலயக் கல்விப் பணிப்பாளர் தமது உரையில் தெரிவித்தார்.

# அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி தூதுக் குழுவினர் குவைத் தூதுவருடன் சந்திப்பு

இலங்கையில் உள்ள குவைத் நாட்டு தூதுவர் கலாப் எம். எம். புதஹைர் (Khalaf M.M. Bu Dhhair) அவர்களை, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் , பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தலைமையில் அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி பணிப்பாளர் சபையின் சார்பிலும் , அதிபர் உட்பட விரிவுரையாளர்கள் சார்பிலுமான பிரதிநிதிகள் குழுவினர் செவ்வாய்க்கிழமை(13) கொழும்பில் உள்ள அந் நாட்டுத் தூதரகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது, பிரஸ்தாப அட்டாளைச்சேனை கிழக்கிழங்கை அரபுக் கல்லூரிக்கும் குவைத் நாட்டிற்கும் இடையிலான நீண்டகால நல்லுறவை நினைவு கூர்ந்த தூதுக்குழுவினர், அந்நாட்டு நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள மூன்று மாடி கட்டடத்திற்காக தூதுவரிடம் நன்றி தெரிவித்துள்ளனர். அதற்கான தளபாடங்களையும் தேவையான உபகரணங்களையும் பெற்றுத் தருமாறும் அவர்கள் தூதரிடம் வினயமாக வேண்டிக் கொண்டுள்ளனர்.



அத்துடன் பழைய கட்டடத்தை முற்றாக அகற்றிவிட்டு , அவ்விடத்தில் புதிதாக கட்டிடமொன்றை நிர்மாணித்து தருமாறும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். கல்லூரியின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவுமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அவர்களின் வேண்டுகோள்களையிட்டு உரிய கவனம் செலுத்தப்படுமென குவைத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

தூதுவரைச் சந்தித்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான இந்தக் குழுவில் கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியின் பதில் தலைவரும், முன்னாள் கிழக்கு மாகாண சபை செயலாளருமான யு. எல் .ஏ .அஸீஸ், பணிப்பாளர் சபை உறுப்பினர்களான மௌலவி ஏ .எல். காசிம், ஓய்வு பெற்ற கல்வி அதிகாரி யூ.எல்.வாஹித், டாக்டர் கே. எல்.நக்பர், அரபுக் கல்லூரியின் அதிபர் மௌலவி ஏ.எல்.அஷ்ரப் , விரிவுரையாளர்களான மௌலவி அஸீஸ் ரஹ்மத்துல்லாஹ், கலாநிதி யூ .எல். எம். அஸ்லம் மற்றும் கல்முனை முன்னாள் பிரதி மேயர் ரஹ்மத் மன்சூர் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

## இன்றைய பலன்கள்

(14.03.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
சக கலைஞர்களின் குடும்பத்திற்கு உதவி செய்வீர்கள். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமான பாதையைக் காண்பார்கள்.

**ரிஷபம் :**
மாணவர்கள் படிப்பில் அக்கறையாக செயல்படுவதோடு சுறுசுறுப்பாகவும் இயங்குவார்கள். பெண்களின் மகிழ்ச்சி கூடும்.

**மிதுனம்:**
கலைஞர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. பழைய வாய்ப்புகளின் மூலம் கிடைக்கும் வருவாய்க்கும் குறைவிருக்காது.

**கடகம்:**
கணக்கு வழக்குகளை பார்ப்பவரை கண்காணிப்பது அவசியம். குடும்பத்தில் அமைதி நிலவும். கணவன் மனைவி இடையே ஒற்றுமை பலப்படும்.

**சிம்மம்:**
கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்களை பெற முயற்சி செய்வதால் அதில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் கணவன் மனைவி இடையே கனிவும் அன்பும் கலந்து காணப்படும்.

**கன்னி:**
கூட்டாளிகளின் விஷயத்தில் தாராள போக்கை கடைபிடிக்க வேண்டாம். மாணவர்களின் போக்கில் சிறிது மாறுதல் காணப்படும். கலைஞர்களுக்கு அதிக அளவில் வாய்ப்புகள் வராது.

**துலாம்:**
மாணவர்களின் படிப்பால் பெற்றோருக்கு உற்சாகம் தரும். புதிய வாய்ப்புகளால் கலைஞர்கள் சுறுசுறுப்படைவார்கள். கணவன் மனைவி இடையே ஒற்றுமை போக்கு காணப்படும்.

**விருச்சிகம்:**
உடல் நலத்தில் அதிக கவனம் தேவைப்படும். முதியோர் ஒருவரது ஆசையால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**தனுசு:**
கலைஞர்கள் ஓரளவு உற்சாகமாக இயங்கக்கூடிய அளவில் புதிய ஒப்பந்தங்கள் சில அமையும். மாணவர்களின் கல்வியின் மீதான ஈடுபாட்டால் சுறுசுறுப்பாக இயங்குவர்.

**மகரம்:**
குடும்பத்தில் கணவன் மனைவி இடையே ஓரளவு இணக்கமான சூழ்நிலை காணப்படும். சில சமயத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். வாகன வகையில் செலவு ஏற்பட வாய்ப்பு உண்டு.

**கும்பம்:**
எல்லா பிரச்சினைகளிலும் பொறுமையை கடைப்பிடியுங்கள். குடும்பத்தை பொறுத்தவரை கணவன் மனைவி இடையே கருத்து ஒற்றுமை நிலவும். உறவினர் வருகையால் சுபச் செலவுகள் ஏற்படும்.

**மீனம்:**
வியாபாரிகளுக்கு நல்ல முறையில் வியாபாரம் நடந்தாலும் லாபம் சற்று குறைவாகவே இருக்கும். கலைஞர்கள் உற்சாகத்துடன் செயல்பட்டு பொருளாதாரத்தை பெருக்கிக் கொள்வர்.

## எதிர்க்கட்சியால் எவ்விதத்திலும்...

திரைப்படப் பிரிவு எனப் பல பிரிவுகள் உள்ளடக்கப்படவுள்ளது. நடுவர்களாக சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள், அகாடமி விருது பெற்ற ஜெர்மன் திரைப்படக் கலைஞர் மற்றும் பிரபல இந்திய திரைப்படக் கலைஞர்கள் செயற்படவுள்ளார்கள்.

இலங்கையில் இதுவரை திரைப்படங்களை திரையிடாத மூன்று லத்தீன் அமெரிக்க நாடுகள், கிழக்கு ஐரோப்பா மற்றும் இந்தியா உட்பட 18க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த படைப்பாளிகள் இந்தத் திரைப்பட விழாவிற்கு திரைப்படங்களை வழங்க முன்வந்துள்ளனர். அந்த வகையில் 2022/23/24 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் திரைப்படங்களை உருவாக்கிய திரைப்படக் கலைஞர்கள் இங்கு பல பிரிவுகளில் போட்டியிட சந்தர்ப்பம் கிடைத்துள்ளது

நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்

2022ஆம் ஆண்டுக்குப் பின்னர் வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட இலங்கை, உள்நாட்டுக் கடனைச் செலுத்த முடியாமல் போனதுடன், சுமார் ஒரு வருட கால அரசாங்கத்தின் நீண்ட கால முயற்சியில் தற்போது 2023 இல் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

48 மாதங்களில் மூன்று பில்லியன் அமெரிக்கன் டொலரை ஏற்கனவே இரண்டு கடன் தவணைகளாக சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து நாடு பெற்றுக் கொண்டுள்ளது.

மேலும் சர்வதேச நாணயத்தின் பிரதிநிதிகள் குழு மூன்றாவது கடன் தவணையை வழங்குவது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு இலங்கைக்கு வந்துள்ளனர். .

இந்த அமைப்புகளுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, 2027ஆம் ஆண்டுக்குள் ஏற்படக்கூடிய வெளிநாட்டு வள இடைவெளி அமெரிக்கன் டொலர்3911 பில்லியன். சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் 329 பில்லியன், 2027 வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்க சர்வதேச நாணய நிதியத்திலிருந்து 600 பில்லியன், உலக வங்கியிடமிருந்து 300 பில்லியன், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 300 பில்லியன் மற்றும் கடன் மறுசீரமைப்பு காரணமாக கிடைக்கும் நன்மை 1428 பில்லியன்.

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை விளங்கிக் கொள்ளாத எதிர்க்கட்சிக்கு எந்த விதத்திலும் நாட்டை ஆட்சி செய்ய முடியாது என்பது வெளிப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயங்கள் தொடர்பில் பூரண தெளிவைக் கொண்டுள்ள கலாநிதி ஹர்ஷ டி சில்வா மற்றும் பேராசிரியர் ஜி எல் பீரிஸ்ஆகியோர் எதிர்க்கட்சித் தலைவருக்கு விடயங்களை எடுத்துக் கூற முயன்றாலும் அவர் அதனை ஏற்றுக் கொள்வதாய் இல்லை என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## அமைச்சர் பந்துலவின் 'சதராவ தீபனீ'...

தராதர உயர்தர மாணவர்களின் இரண்டு வருடத்துக்கான புலமைப் பரிசில் வழங்கும் வேலைத் திட்டம் மற்றும் நாட்டின் சினிமா கலைஞர்களை பாராட்டும் 'சதராவ தீபனீ' நன்றி பாராட்டு விழா16ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலுமிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள கல்வி பொது தராத உயர்தர தொழில்நுட்ப மாணவர்களில் 250 பேருக்கு ஒரு மாதத்துக்கு 2,000 ரூபா என்ற வகையில் இரண்டு வருடங்களுக்கு 'பிரக்ஞா பந்து' புலமைப் பரிசில் நிதியத்தின் மூலம் வழங்கப்படவுள்ளது.

## ஐக்கிய மக்கள் சக்தியிலிலுள்ள...

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

”நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மாத்திரமே முடியும். தற்போது நாடுபூராகவும் இக்கருத்து பரவி வருகிறது.

கடந்தகால தேர்தல்களை ஆராய்ந்து பார்த்தால், 2020 பொதுத் தேர்தலில், ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்கள்

22 இலட்சம் பேர் வாக்களிக்காதிருந்தமை தெரிகிறது.

இன்று நிலைமைகள் மாறியுள்ளன. ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தவர்களில் பலர், தற்போது மீண்டும் எம்முடன் இணையும் விருப்புடனுள்ளனர்.

எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தியிலுள்ள பல எம்பிக்கள் எம்முடன் இணையும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

2019 ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாச 55இலட்சம் வாக்குகளை பெற்றார்.இது நூற்றுக்கு 41 வீதமாகவுள்ளது. அதேநேரம் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு 27 இலட்சம் வாக்குகளே கிடைத்தன.இது,

நூற்றுக்கு 23வீதமாகவுள்ளது . அதாவது 41 வீதத்தில் இருந்து 23 வீதத்துக்கு சஜிதின் செல்வாக்கு குறைவடைந்தது. ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி சார்பாக ஜனாதிபதி ரணில்விக்கரமசிங்கவை நியமிக்க பிரேரித்திருக்கிறோம்.

கட்சி சார்பற்ற வேட்பாளராக அவர் களமிறங்குவார். சுமார் 40 இலட்சம் வாக்குகளை அடிப்படையாகக் கொண்டே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி வேட்பாளர் போட்டியில் களமிறங்குகிறார்.

நாட்டின் எதிர்கால சந்ததியினருக்காக பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியுமான ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமாகும். இதை படித்த, உயர் மட்டத்தினர் உணர்ந்து வருகின்றனர்.

## கணினிக் குற்றங்கள் அதிரித்துள்ளதால்...

தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் இணையத்தளம் மூலம் ஒன்லைன் வேலை வாய்ப்புகளை பெற்றுத் தருவதாக தெரிவித்து பெரும் மோசடிகள் இடம்பெறுகின்றன. அதேவேளை கரன்சி மூலம் மேற்கொள்ளப்படும் மோசடிகள், பிரமிட் மோசடி போன்றவையே அதிகமாக இடம்பெறுகின்றன.

அந்த வகையில் கடந்த வருடம் முதல் இந்த வருடத்தின் கடந்த மூன்று மாதங்களில் இந்த மோசடிகள் வேகமாக அதிகரித்துள்ளன.

2023 ஆம் ஆண்டு இணையத்தளம் மூலமான 1609 மோசடிகள் பதிவாகியுள்ளன. அத்துடன் இந்த வருடத்தின் ஜனவரி மாதம் இவ்வாறான 110 மோசடிகள், பெப்ரவரி மாதத்தில் 213 மோசடிகள் மார்ச் மாதத்தில் 100 மோசடிகளும் பதிவாகியுள்ளன.

சில முறைப்பாடுகளில் நிதி மோசடி பதிவாகும் போது அவர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக் கொடுத்து, அதனை கணினி குற்றச்செயல் பிரிவுக்கு சமர்ப்பித்துள்ளோம்.

இணையத்தளம் மூலம் தமது நிர்வாணப் படங்களை வெளியிடப்போவதாக அச்சுறுத்தி மேற்கொள்ளப்படும்மோசடிகளும்பதிவாகியுள்ளன.

2023ஆம் ஆண்டு அதுபோன்று 775 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அத்துடன் 1609 இணையத்தளம் மூலமான மோசடிகளும் பதிவாகியுள்ளன. சமூக வலைதளங்கள் மூலம் கணக்கு உருவாக்கப்பட்டு இவ்வாறு 5188 மோசடிகள் பதிவாகியுள்ளன.

சிறுவர்கள் தொடர்பான 98 சம்பவங்கள், நபர்களின் வங்கிக் கணக்குகளில் பிரவேசித்து மோசடிகளில் ஈடுபட்டு 7499 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஹோட்டல் அறை... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

பின்னர்,ஹோட்டலின் குளியலறையில் தூக்கில் தொங்கி இந்நபர் தற்கொலை செய்து கொண்டதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இரத்த வெள்ளத்திலிருந்து பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது.பொத்துவில் பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய நபரே தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டவராவார்.தாக்கப்பட்டு உயிரிழந்த பெண்மஹகளுகொல்ல பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் பொத்துவில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## டயனா கமகேவின்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

ஐக்கிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுச்சபை உறுப்பினர்கள் மற்றும் ஒழுக்கக் குழுவின் உறுப்பினர்களும் குறித்த இந்த மனுவில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்படாமை பாரிய சட்டச் சிக்கல் என்றும் தெரிவித்த சட்டத்தரணி, அதற்கிணங்க இந்த மனுவை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முழுமையான அனுமதியை பெற்றுக் கொள்ளாமல் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவதற்கு இராஜாங்க அமைச்சர் டயனா கமகே மேற்கொண்ட தீர்மானம், ஐக்கிய மக்கள் சக்தியின் கட்சி யாப்புக்கு முரணானது என்றும் அதன் மூலம் அவர் கட்சியின் ஒழுக்கத்தை மீறியுள்ளார் என்பது உறுதியாவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் டயனா கமகேவை கட்சியிலிருந்து நீக்க மேற்கொண்ட தீர்மானம் சட்டபூர்வமானது என்றும் அவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குறித்த மனுவை முழுமையாக நிராகரிக்குமாறும் அவர் நீதிமன்றத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## புரிதலின்றி அள்ளிவீசிய அரசியல்...

சாதகமான எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப அனைவரும் பாடுபட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

யுனைடட் யூத் இளைஞர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த “இளைஞர் எமது எதிர்காலம்” என்ற சிநேகபூர்வ சந்திப்பில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார். இந்தச் சந்திப்பு (12) தப்ரபேன் எண்டர்டைன் மண்டில் நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக நாம் விரைவாக ஏற்றுமதி பொருளாதாரத்திற்குத் திரும்ப வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெருமளவிலான இளைஞர்கள் இச்சந்திப்பில் கலந்து கொண்டதுடன், ஜனாதிபதியிடம் நேரடியாக கேள்விகளைத் தொடுத்தனர்.

முன்வைக்கப்பட்ட அனைத்துக் கேள்விகளுக்கும் சாதகமான பதில்களை வழங்கிய ஜனாதிபதி, இளைஞர்களுடன் சிநேகபூர்வ உரையாடலிலும் ஈடுபட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வருகையைக் குறிக்கும் வகையில், "யுனைடட் யூத் அமைப்பின் ஆலோசகர் நியோமல் பெரேரா ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசொன்றையும் வழங்கினார்.

## புலம்பெயர்தலுக்கான புதிய...

நோக்கில், இப்புதிய திட்டம் கொண்டு வரப்படுவதாக சர்வசேத செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுவரை காலமும் சட்டவிரோதமாக நாட்டுக்குள் வரும் புகலிடக் கோரிக்கையாளர்களின் எண்ணிக்கையை குறைக்கும் நடவடிக்கையில் பிரித்தானியா ஈடுபட்டு வந்தது.இந்நிலையில் தற்போது

சட்டப்படி புலம்பெயர்வோரின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் முயற்சியிலும் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை முன்னிட்டு புலம்பெயர்தலுக்கான புதிய கடப்பாடுகள் மற்றும் விதிமுறைகள் அறிமுகப் படுத்தப் படவுள்ளன. முதியவர்கள், நோயாளிகளை கவனிக்கும் பணிகளுக்கு வரும் வெளிநாட்டவர்களுக்கு முதற்கட்டமாக தடைவிதிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் 04 முதல் திறன்மிகு பணியாளர்கள் விசாவில் வருபவர்களுக்கான குறைந்தபட்ச வருமான வரம்பு, 26,200 பவுண்களிலிருந்து 38,700 பவுண்களாக உயர்த்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், குடும்ப விசா பெறுவதற்கான குறைந்தபட்ச வருமான வரம்பு ஏப்ரல் 11 முதல், 29,000 பவுண்களாகவும் உயர்த்தப்படவுள்ளது.

இத்தொகை பின்னர், 38,700 பவுண்கள் வரை அதிகரிக்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## ச.தொ.ச.நிலையங்களில்...

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தின் தலைவர் பசந்த யாப்பா தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து சதொச விற்பனை நிலையங்களிலும், எந்த மட்டுப்பாடுகளுமின்றி தேவையான அளவு முட்டைகளை நுகர்வோர் கொல்வனவு செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நுகர்வோர் 43 ரூபாவுக்கு முட்டையை கொள்வனவு செய்ய முடியும் என்றும் பண்டிகைக் காலங்களையொட்டி இந்த விஷேட நடைமுறையை செயற்படுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## டக்ளஸ் தேவானந்தாவுக்கு...

வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலயத்தில் சிவராத்திரி வழிபாடுகளில் ஈடுபட்டவர்களை தடுத்து நிறுத்திய பொலிஸார்,எட்டுப் பேரை கைது செய்தனர்.தொல் பொருட்கள் சின்னங்களை சேதப்படுத்தியதாக இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களில்...

இலங்கை வங்கி மாவத்தையிலுள்ள வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் மீது மோதியது.

இதில்,இவ்விபத்து ஏற்பட்டதாகவும் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரே காயமடைந்தார். கார் சாரதி விசாரணைகளுக்காக கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

காரை செலுத்திய சாரதி நித்திரை கலக்கத்துடன் காணப்பட்டதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தரித்து வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் மீதே, மேற்படி கார் மோதியது. இதில், ஏழு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் கார் ஒன்றும் சேதமடைந்துள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## சகல பாடசாலைகளையும் மத்திய...

காணப்படுகின்றன. பாராளுமன்றத்தில் கல்வி தொடர்பான தெரிவுக் குழுவில் இது தொடர்பில் தற்போது கலந்துரையாடப்பட்டு வருகிறது. இதனை ஒரே தடவையில் மேற்கொள்வது கடினம். எனினும், படிப்படியாக கட்டம், கட்டமாக இதனை மேற்கொள்ள முடியும்.

இவ்வாறான மாற்றங்கள் ஏற்படும் போது, கற்பிக்க முடியாது என்று எவரும் கூறமுடியாது. அவ்வாறு தெரிவித்தால் எதிர்பார்க்கும் பெறுபேறுகளை அடைய முடியாது.

அந்த வகையில் ஆசிரியர்களுக்கான அறிவைப் பெருக்கும் வகையில் புதிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. அத்துடன் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி அனைத்து கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளோம்.

பல்வேறு நாடுகளிலும் இந்த நடைமுறையே பின்பற்றப்பட்டு வருகிறது. கல்வி மறுசீரமைப்பின் மூலம் காலத்துக்குப் பொருத்தமான மாற்றங்கள் அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் அனுமதியுடனேயே இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அவ்வாறானால் அமைச்சர் மாறினாலும் கல்விக் கொள்கைகளில் மாற்றம் ஏற்படாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பாதாளக் கோஷ்டியின்...

உலகக் குழுவினரின் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் பல அப்பாவிகள் பலியாகியிருந்தனர்.

பாதுகாப்பில் ஏற்பட்ட பலவீனம் என சிலர் இதைக் கருதுகின்றனர். இந்நிலையில், தற்போது நடைமுறையில் உள்ள பாதுகாப்பு வேலைத்திட்டத்தில் மாற்றம் தேவையென்றால் அதனைச் செய்யவும் தயங்கப் போவதில்லை எனவும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

## மீனவர்களை அழைத்துவர...

மற்றும் வெளிவிவகார அமைச்சு ஆகியோர் கலந்துரையாடியுள்ளன.

சட்ட நடவடிக்கைகள் சீஷெல்ஸ் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

சீஷெல்ஸ் நாட்டில் சட்ட நடவடிக்கைகளை முடித்து மீனவர்களை விரைவில் இலங்கைக்கு அழைத்து வருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சட்ட மாஅதிபர் ஊடாக வெளிவிவகார அமைச்சுக்கு அறிவித்துள்ளார்” என்று கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த டி சில்வா மேலும் தெரிவித்தார்.



# சர்வதேச புகழ்பெற்ற மூத்த ஊடகவியலாளர் லத்தீப் பாரூக்

ஸஹீம் எம். ரிஸ்மியின் பார்வையும் பதிவும்

எனது நண்பர் சிரேஷ்ட ஊடகவியலாளர் இக்பால் அலியினையும் வை. எம். எம். ஏ இன் கண்டி மாவட்டப் பணிப்பாளர் இஹ்திசாமையும் அழைத்துக் கொண்டு திட்டமிட்டபடி மூத்த ஊடகவியலாளர் லத்தீப் பாரூக் இல்லம் சென்றோம். அவருடன் முதலில் இக்பால் அலி பற்றி நானும் மற்றும் ஏ. எம். நஹியா ஆகிய இருவரும் சேர்ந்து அறிமுகம் செய்து வைத்தோம். அப்பொழுது இக்பால் அலி ஏற்கனவே ஒரு தடவை முன்னாள் அமைச்சர் எம். எச். ஏ. ஹலீமுடைய அமைச்சு அலுவலகத்தில் வைத்து ஒரு தடவை லத்தீப் பாரூக்குடன் சந்தித்து உரையாடியதாகக் கூறி இருவரும் பரஸ்பரம் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

எனது மடவளை ஊரில் எனது சிறிய வயதில் நான் கண்டு அதிசயித்த ஒரு பெரு மகான்தான் லத்தீப் பாரூக். ஊடகத் துறையின் மூலம் உலகெங்கும் பறந்து திரிந்து மானுடனின் முன்னேற்றத்திற்காக எதையாவது செய்து விட வேண்டும் என்று ஆலாயப் பறந்து பெரும் சாதனைகள் புரிந்த சத்திய எழுத்தாளர். அரபுலக ஊடகங்களுக்கு சத்திய செய்திகளை வழங்கிய துணிச்சல் மிக்க எழுத்தாளர். லேக் ஹவுஸ் டெய்லி நியூஸ் பத்திரிகையில் ஆசிரியர் பீடத்தில் கடமையாற்றியவர். அதன் செய்தி சேகரிப்புக்காய் ஆலாய் பறந்து திரிந்து அதிவேகமான புதுப்புது தகவல்களை வெளியே கொண்டு வந்தவர். அவருடைய திறனைப் பற்றி அக்காலத்து ஊடக உலகம் நன்கு அறியும்.

எங்கள் வீடு பிரதான வீதியில் அமைந்துள்ளது. லத்தீப் பாரூக் அவர்களின் வீட்டுக்கு சற்று உள் செல்ல வேண்டும். அக்கால கட்டத்தில் எனது தந்தையும் லத்தீப் பாரூக்கும் சந்தித்துக் கொள்வது வழக்கம். இருவரும் தினமும் சந்தோசமாக சுகம் விசாரித்து முகம் மலர்ந்து கொள்வார்கள். எனது தந்தை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர் என்பது எல்லோருக்கும் நன்கு தெரியும். அந்த நேரம் மடவளையில் எல்லோரும் ஐக்கிய தேசியக் கட்சி என்று தான் இருந்தார்கள். ஆனாலும் என் தந்தை ஒரு வித்தியாசமான மனிதர் என்று இவ்வாறு எனது தந்தை பற்றிய பண்புகளைக் கூறிய லத்தீப் பாருக், என் தந்தை நடந்து செல்வதைப் போன்று அப்படியே நடந்து காட்டி அவர் எம்மை வியப்பில் ஆழ்த்தினார்.

உண்மையிலே இவரை நாம் ஆங்கில ஊடகத்துறையில் பெரும் ஜாம்பவான் என்று குறிப்பிடலாம். இவரைப் போல ஊடகத் துறையில் செய்தி தேடலைச் செய்தவர்கள் என்று சொல்வதற்கு மிக அபூர்வமானவர்கள்தான் இருக்கின்றார்கள். எவரைப் பார்த்தாலும் ஊடகம் என்று அவர்கள் நம்புகிற எதையோ வைத்துக் கொண்டு குண்டு சட்டிக்குள் அங்கீகாரத்தை தேடி குதிரை ஓட்டுகிறவர்களாகத்தான் பார்க்க முடிகிறது. சமூக வெளியில் பொது மனிதர்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்கு எதிராக பக்கம் சாராமல் நின்று குரல் எழுப்புகின்ற ஓர் ஆளுமை மிக்க அடையாளம் லத்தீப் பாரூப். இவரைப் பற்றிய நிறையப் பேசலாம். எழுதலாம். இலங்கை மற்றும் உலக அரசியல் அரங்குகளிலுள்ள அரசியல் தலைமைகளுடன் மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டவர். இதுவரை 11 ஆங்கில நூல்கள் எழுதியுள்ளார். இவர் பேராசியர் எம். ஏ. நுஹ்மான், ஏ. எம். நஹியா, கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி, சட்டத்தரணி ஜாவிட் யூசுப், சட்டத்தரணி எம். எம். சுஹைர் போன்ற இலக்கிய ஆளுமைமிக்கவர்களுடைய நண்பரும் கூட. எமது மடவளை ஊரின் பெருமைக்குரிய மகன் லத்தீப் பாரூக். அவர்களுடைய சந்திப்பானது மனதிற்கு இதமாக இருக்கிறது. அவர் மடவளை ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாக சபையிலும் இருந்துள்ளார். அவர் ஊடக உலகிற்கு அடையாளச் சின்னம். சர்வதேச ஊடகத்தின் அளவு கோல் ஆவார்.

லத்தீப் பாரூக் வெறுமனே பேனா பிடித்து ஊடகத்துறை என்று செய்திகளை மாத்திரம் எழுதாமல் சமூகப் போராளியாகவே அன்று முதல் இன்று வரை செயற்பாடுகள் ஆளுமைகள் அமைந்துள்ளன. சிறு பாராயம் முதல் இன்று வரை நான் அவரை அறிவேன். நெற்றிக் கண்ணைக் காட்டிலும் குற்றம் குற்றமே என்றாலும் உண்மையான செய்திகளை வெளியே கொண்டு வருவதில் தயங்க மாட்டார். அவர் எழுதிய செய்திகள் ஆக்கங்கள் இன்னும் உயிர்த் துடிப்புடன் ஊடக உலகில் பேசுபொருளாகக் காணப்படுகின்றன.

லத்தீப் பாரூக் ஒரு வசதியுள்ள குடும்பத்தில் பிறந்தவர் அல்ல. ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் ஆரம்பக் கல்வியை மடவளை மதீனா பாடசாலையில் கற்றவர். ஆறாம் ஆண்டு முதல் 10 வகுப்பு வரை வத்துகாமம் க்ரைஸ்சேச் கல்லூரியில் கற்றார். அதன் பின்பு எச். எஸ். சி உயர் தரக் கல்வியை சிறிய காலம் மாத்தளை சென் தோமஸ் கல்லூரியில் கற்றவர். அங்குள்ள கல்விச் சூழல் அவருக்கு வாய்ப்பளிக்க வில்லை. பின்னர் மாத்தளை சாஹிராக் கல்லூரிக்குச் சென்று கல்வி கற்றார். அங்கு இருந்து பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். அங்கு சென்று படிப்பது என்றால் அப்பொழுது ரூபா 150 மட்டும் செலவு போகும். அந்த மாதிரிச் செலவு செய்து படிக்க அவரிடம் பண வசதிகள் இருக்க வில்லை. அவர் தொடர்ந்து படிப்பதற்கு வசதிகள் இல்லை. அவர் வீட்டிலே பொருளாதார நெருக்கடியான சூழல் இருந்தது. ஆதலால் அவர் படிப்பை இடை நிறுத்திவிட்டு 1962 களில் கொழும்பு சென்று டெம்பல் வீதி மருதானையில் விடுதியில் தங்கியிருந்தார். டொனால்ஸ் ஸ்ரூடியோவுக்குப் பக்கத்தில் யூனூஸ் என்பவர் இருந்தார். அவர் சன் நியூஸ் பத்திரிகையில் விளையாட்டுத் துறை ஆசிரியராக கடமையாற்றியவர்.

லத்தீப் பாரூக், அவரிடம் தனக்கு ஏதாவது தொழில் பெற்றுத் தர முடியுமா என்று கேட்டார். அதற்கு அவர் 'நாளை காலை 10.00 மணி அளவில் அலுவலகத்திற்கு வரும்படி' கூறினார் யூனூஸ். அவரை அழைத்துச் சென்று சன் பத்திரிகையின் முகாமைத்து ஆசிரியர் தனபால என்பவரை அறிமுகம் செய்து வைத்தார். அவர் சன், தவச, தினபதி, சிந்தாமணி போன்ற பத்திரிகைகளின் வெளியீட்டு நிறுவன முகாமையாளர் ஆவார். உடனே லத்தீப் பாரூக் நேர்முகப் பரீட்சையொன்றை வைத்து தெரிவு செய்தார்கள். முதலில் சுதந்திர ஊடகவியலாளராக இயங்கும்படியும் பின்னர் நிரந்தர நியமனம் வழங்குவதாகவும் உறுதியளித்தார்கள். 10 வரிகள் ஒரு செய்தி எழுதினால் 40 சதம் வழங்குவார்கள். அவர் ஆங்கிலத்தில் எழுதுகின்ற செய்திகள் தமிழில் தினபதி பத்திரிகையிலும் வெளிவரும்.

அதில் வெளிவரும் செய்திகள் யாவற்றிற்கும் பணம் வழங்குவார்கள். இப்படி ஒவ்வொரு நாளும் எழுதும் செய்திகளுக்கு ஒரு நாளைக்கு ஒரு ரூபா 20 சதம் கிடைக்கும். அவர் 1966-1969 காலம் வரையிலும் மிகவும் கஷ்டத்துடன் ஊடகப் பணியாற்றி வந்தார்.

தினபதி பத்திரிகையின் பிரதமர் ஆசிரியராக எஸ். டி. சிவநாயகம் இருந்தார். ராஜா அரியரட்ணம், யோகா பாலச்சந்திரன் போன்றவர்களுடன் லத்தீப் பாரூக் அவர்கள் 'சன்' ஆங்கிலப் பத்திரிகையில் கடமையாற்றி வந்தார். அதேவேளையில் மனிதர்களுள் மாணிக்கம் ஒன்று ஒரு பகுதியில் பத்தி எழுத்திலும் ஈடுபட்டு வந்தார். அப்பொழுது காணிவெல் ஐஸ் கிரீம் அருகில் உள்ள வீடொன்றில் தங்கி இருந்தார். அதற்கு முன்னால்தான் டொக்டர் எம். சி. கலீல் இருந்தார். அப்பொழுது அவருடைய அறிமுகம் லத்தீப் பாரூக்குக் கிடைத்தது. அவர் தங்கமான மனிதர். நல்ல குணம் படைத்தவர். அவர் வீடு கடற்கரை பக்கம் இருந்தது. ஒரு தடவை அவர் அறுவை சிகிச்சை செய்திருந்தார். அப்பொழுது அவர் வீட்டிலே ஓய்வு எடுத்துக் கொணடிருந்தார். அந்நேரத்தில் அவருடன் கதைத்துக் கொண்டிருப்பதற்கென லத்தீப் பாரூக்கை அழைத்திருந்தார். அப்பொழுது அவர் லத்தீப் பாரூக்கிடம் சம்பளம் எவ்வளவு கிடைக்கின்றது என்று வினவினார்.

அதற்கு லத்தீப் பாரூக், 'சம்பளம் போதாது. வீட்டுச் செலவுக்கும் பணம் அனுப்ப வேண்டும். கஷ்டம்தான்' என்று தெரிவித்தார். அந்த வகையில் டொக்டர் எம். சி. கலீல் அவர்கள் ஒரு சுகயீனமுற்ற நிலையில் இருந்த போதிலும் கூட அவர் லேக் ஹவுஸுக்குச் சென்று அதன் படியில் ஏறி இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மாமாவான ரஞ்சித் விஜயவர்தனவை நேரடியாகச் சந்தித்து கதைத்திருந்தார். அதற்கு அவர் லத்தீப் பாரூக்கை இணைத்துக் கொள்வதாக உறுதியளித்துள்ளார்.

அதேவேளையில் முன்னாள் அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீட் லத்தீப் பாரூக்குடன் மிக நெருக்கமான உறவு இருந்தது. அவர் டெய்லி நியூஸ் பிரதம ஆசிரியர் ஏனஸ் கொரியாவுடன் கதைத்தார். அதன் பின்பு 1970 களில் ஆசிரியர் பீடத்தில் நியமனம் கிடைத்தது. அதன் பின்னர் லத்தீப் பாரூக் தன் கடமைகளைத் திறன்படச் செய்ய ஆயத்தமானார், டெய்லி நியுஸ் பிரதம ஆசிரியர் முழுமையான ஆதரவு வழங்கினார். லத்தீப் பாரூக் பத்திரிகைக்காக இரவு பகல் பாராமல் கடுமையாக உழைத்தார்.

அப்பொழுது பண்டாரநாயக்கவின் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

அப்பொழுது டெய்லி நியுஸ் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஏனஸ் கொரியா மலேசியாவுக்குச் சென்றுவிட்டார். லத்தீப் பாரூக் சன்டே ஒப்சவர் பத்திரிகைக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். அக்கால கட்டத்தில் ஹட்டன் நெசனல் வங்கியின் உரிமையாளர் ஹெறிஜாவும் லத்தீப் பாரூக் ஆகிய இருவர்களுக்குமிடையே மிக நெருக்கமான நட்புறவு ஏற்பட்டது. அவர் தேயிலை ஏற்றுமதியின் உதவி முகாமையாளராகப் பணி புரிந்தார். இருவரும் அடிக்கடி சந்திப்பதும், நல்ல ஹோட்டல்களுக்குச் சென்று சாப்பிடுவது வழக்கமாக இருந்தது. அப்பொழுது ஒரு நாள் ஹட்டன் நெசனல் வங்கியின் உரிமையாளர் ஹெறிஸா அவர்கள் ' இலங்கையிலுள்ள நல்ல தேயிலையை இந்தியாவிலுள்ள கொள்வனவு செய்து அதனைத் தரமற்றதாக மாற்றி ஈராக் நாட்டுக்கு நல்ல தேயிலை என விற்பனை செய்கிறார்கள்' என்று லத்தீக் பாரூக்கிடம் தெரிவித்தார். அந்தச் செய்தியை லத்தீக் பாரூக் பத்திரிகையில் பிரசுரம் செய்தார்.

அப்பொழுது அவருக்கு ரூபா 200 சம்பளம் ஆகும். அது ஒரு பெரிய சம்பளம். அந்தச் செய்தி வந்தவுடன் ஈராக் உயர்ஸ்தானிகராலயத்தில் இருந்து லத்தீப் பாரூக்குக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. ஈராக் உயர் ஸ்தானிகர் லத்தீப் பாரூக் அவர்களுடன் பேச வேண்டும் என்று பெண்மணி ஒருவர் அழைப்பு விடுத்திருந்தார். அதற்கு லத்தீப் பாரூக் அவர்கள் 'உயர் ஸ்தானிகராலயமே இங்கு இல்லையே. அவர் எங்கு இருக்கிறார்' என்று கேள்விகளைத் தொடுத்துள்ளார். அதற்கு அந்தப் பெண்மணி 'இலங்கையின் ஈராக் உயர் ஸ்தானிகராலயத்தின் அலுவலகம் இன்டர் கொண்டனல் ஹோட்டலில் தான் இருக்கிறது' என்று தெரிவித்துள்ளார். லேக் ஹவுஸுக்கு அருகாமையில்தான் இன்டர் கொண்டனல் ஹோட்டல் இருக்கிறது. அந்த இடத்திற்கு லத்தீப் பாரூக் அவர்கள் நடந்து சென்று சந்தித்தார்.

அப்பொழுது உயர்ஸ்தானிகர் தேயிலை பற்றிய பத்திரிகையில் வெளிவந்த செய்தி பிழையானது. அவர்கள் தரமற்ற தேயிலையை விற்பனை செய்ய வில்லை என்று தூதுவர் தெளிவுபடுத்தியுள்ளார். அதற்கு லத்தீப் பாரூக், அப்படியாயின் தூதுவருடைய மறுப்புக் கருத்தை பெற்றுக் கொண்டு புதிதாக வந்துள்ள தூதுவர் அந்தச் செய்தி பிழையென்று குறிப்பிட்டுள்ளார் என்று தூதுவரின் புகைப்படத்துடன் பத்திரிகையில் அந்தச் செய்தியை பிரசுரம் செய்தார். அதன் பின்பு தூதுவருக்கு மிக்க மகிழ்ச்சி. தூதுவர் அவரை உயர்ஸ்தானிகராலயத்திற்கு அழைப்பு விடுத்திருந்தார். லத்தீப் பாரூக் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விட்டு பேரீச்சம் பழம் பக்கட் ஒன்றை வழங்கினார். எனினும் லத்தீப் பாரூக் எவர்களிடமும் எதையும் வாங்க மாட்டார். பேரீச்சம் பழத்தை வாங்க மறுத்தால் தூதுவரின் மனம் சங்கடமாகிப் போய் விடுமோ என்ற நிலையிலேயே அவற்றை அவர் வாங்கிக் கொண்டார்.

அவர் அப்பொழுது திரும்பிச் செல்லும் போது அவர் கையில் பத்திரிகைகள் கொஞ்சம் கொடுத்தார். அவை எல்லாம் பக்தாத் நியூஸ் பத்திரிகைகள் ஆகும். அதில் ஈராக் நியூஸ் ஏஜன்ஸி பற்றி பெரியதொரு கட்டுரை இருந்தது. அதனை முழுமையாக வாசித்து விட்டு மறுநாள் தொலைபேசியில் அது பற்றி தூதுவருடன் பேசினார். அவரைத் தூதுவர் வரச் சொன்னார். லத்தீப் பாரூக் அவர்கள் அங்கு சென்றவுடன் இலங்கை ஈராக் நியூஸ் ஏஜன்ஸியின் செய்தியாளராக கடமையாற்றுவதற்கு விண்ணப்பத்தை நிரப்பிக் கொடுத்தார்.

இடைக்கிடையே அதற்கான பதிலை லத்தீப் பாரூக் தூதுவரிடத்தில் தொலைபேசியின் ஊடாக கேட்டு அறிந்து கொள்வார். வெளிநாட்டுச் செய்தி ஊடகத்துறையில் செய்தியாளராக நியமனம் எப்போது வரும் என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த லத்தீப் பாரூக்குக்கு ஒன்றரை மாத்திற்கு பிறகு ஈராக் தூதுவரின் அழைப்பு வந்தது. அங்கு சென்ற லத்தீப் பாரூக் அவர்களுக்கு ஈராக்கின் நியூஸ் ஏஜன்ஸியின் இலங்கைக்கான செய்தியாளராக நியனம் வழங்கப்பட்டிருக்கிறது என்ற தகவலைத் தெரிவித்த தூதுவர் தனது மகிழ்ச்சிகரமான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

லத்தீப் பாரூக் அவர்கள் லேக் ஹவுஸில் கடமையாற்றிக் கொண்டு 1971 இல் இருந்து ஈராக் நியூஸ் ஏஜன்ஸிக்கும் செய்திகளை அனுப்ப ஆரம்பித்தார்.

அப்பொழுது ஈராக் நியூஸ் ஏஜன்ஸியின் மாதாந்தம் சம்பளம் ரூபா 1800 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக 2 வருடங்கள் ஈராக் நியூஸ் ஏஜன்ஸிக்கு செய்திகள் அனுப்பி வந்தார். இரண்டு வருடங்களுக்கு பிறகு அந்நாட்டுக்கு வரும்படி அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அந்நாட்டுக்குச் சென்று பல இடங்களைச் சுற்றிப் பார்த்து விட்டு நாடு திரும்பினார்.

லேக் ஹவுஸில் பணியாற்றியமையால் பாராளுமன்ற செய்தி சேகரிப்புக்கும் செல்வார். அதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல்வாதிகள் எல்லாத் தரப்பினர்களுடைய அறிமுகங்களும் அவருக்கு தானாகவே கிடைத்தன எனலாம்.

பிரதம ஆசிரியர் ஏனஸ் கொரியா அவருடன் மிகுந்த அன்பு வைத்திருந்தார். அவர் லத்தீப் பாரூக்கிடம் அரசியல் சீர்திருத்தம் மேற்கொள்ளப்படப் போகிறது. அவை தொடர்பான தகவல்களை சேகரித்து எழுதும்படி கேட்டுக் கொண்டார். அக்கால கட்டத்தில் அரசியலமைப்புத் துறையின் அமைச்சர் கொல்வின் ஆர். டி சில்வா வாகும். ஆனாலும் லத்தீப் பாரூக் அவர்களுக்கு அத்துறையில் சிறந்த அனுபவ முதிர்ச்சி போதாது. எனினும் பத்துக் கேள்விகளைக் தயார் படுத்திக் கொண்டு சென்று அமைச்சரிடம் கேள்விகளைக் கேட்குமாறு ஆசிரியர் அவரைப் பணித்திருந்தார்.

அந்தக் கேள்வியில் இன ஒருமைப்பாடு சக வாழ்வுதான் என்று மேடைகளில் நன்றாகப் பேசுகின்றோம். ஆனால் இலங்கை பௌத்த நாடு எனவும் சிங்கள மொழி தேசிய மொழி எனவும் அரசியல் அமைப்பில் கொண்டு வந்தால் நாட்டில் பெரிய பிரச்சினைகள் எழும். அதேபோன்று சிறுபான்மையினத்தவர்கள் இரண்டாம் நிலையைச் சார்ந்தவர்கள் என்ற கருத்து முரண்பாடுகள் எழ வாய்ப்புக்கள் உள்ளன என்று அமைச்சரிடம் லத்தீப் பாரூக் கேள்வியொன்றை முன்வைத்தார். அதன் போது அமைச்சர் அவர்கள் 'தனது தலையிலே ஆணி ஒன்றை எடுத்து அடித்த மாதிரியான கேள்வியே முன்வைக்கப்பட்டுள்ளது. அது உண்மையிலேயே பிரச்சினைக்குரிய விடயம்தான்' என்று அமைச்சர் ஒத்துக் கொண்ட கருத்தை சேர்த்து லத்தீப் பாரூக் பெயரில் பத்திரிகையில் எழுதினார். அந்தச் செய்தி இலங்கையில் மட்டுமல்ல உலக நாடுகள் முழுவதும் பரபரப்பாகப் பேசப்பட்டன.







அதனைத் தொடர்ந்து மறுவாரம் ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்ளுடன் நேர் காணல் ஒன்றை செய்யுமாறு பிரதமர் ஆசிரியர் ஏனர்ஸ் கொரியா அவர்கள் லத்தீப் பாரூக்குக்கு பணிப்புரை விடுத்தார். அதுவும் ஒரு பெரிய தலைப்புச் செய்தியாக மாறியது. இப்படி பெரும் பெரும் பல அரசியல் தலைமைகளை பேட்டி கண்டு பத்திரிகையில் பிரசுரம் செய்தார். ஆங்கில ஊடகத் துறையில் மிகப் பிரபல்யமான ஒருவராக மதிக்கப்பட்டார்.

லத்தீக் பாரூக் அவர்களின் நண்பர் ஒருவர் இந்தியாவில் தூதுவராலயத்தில் கடமையாற்றினார். அவர் பெயர் அப்துல் சலாம் மிலாதி. அவர் லத்தீப் பாரூக் அவர்களைச் சந்தித்த போது 'ஊடகவியலாளர் லிபியா நாட்டுக்குச் சுற்றுலா செல்வதற்கான விசா வந்துள்ளது. சகல பயணச் செலவுகளும் இலவசம்' என்று தெரிவித்தார். அதற்கு இணங்க அந்தப் பயணம் இலங்கையில் இருந்து லிபியாவுக்குச் சென்று பின்னர் லண்டன் செல்ல வேண்டும். அங்கு சென்று வெளிநாட்டு அமைச்சர் அவர்களுடன் சந்தித்து உரையாடியவர் லிபியாத் தலைவர் கடாபி அவர்களை சந்திக்க வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்தார். அதற்கு இணங்க மறுநாள் மாலை 4.00 மணி அளவில் நாட்டின் தலைவர் கடாபி அவர்களை சந்திக்க வாய்ப்பு கிடைத்தது. அவருக்கு கிடைத்த அந்த மகத்தான சந்திப்பின் மூலம் பத்திரிகைக்கு நேர் காணலைச் செய்தார். அந்த நேர்காணல் ஆங்கில மொழியில் செய்வதற்கு லத்தீப் பாரூக் எதிர்பார்த்தார். ஆனால் கடாபி அரபு மொழியில் வழங்குவதற்கே விரும்பினார். அந்த வகையில் அரபு மொழியில் நேர் காணல் இடம்பெற்றது. அவ்வாறு அரபு மொழியில் இடம்பெற்றதால் லத்தீப் பாரூக் அவர்களுக்கு இடையில் கேள்விகளைத் தயார் செய்து கொள்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டது.

அப்பொழுதுதான் லிபியா நாட்டில் எரி பொருள் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்ட காலம் எனலாம். அப்பொழுது கடாபி அவர்கள் லத்தீப் பாரூக் அவர்களைப் பார்த்து தான் சந்தித்த ஆசியா நாடுகளிலுள்ள முதலாவது ஊடகவியலாளர் என்ற கருத்தைத் தெரிவித்துள்ளார். இது லத்தீப் பாரூக் அவர்களுக்கு மிக முக்கியமான விடயமாகும். அவர் லண்டன் சென்று இரு வாரங்கள் கண்டி வெலம்பொடையைச் சேர்ந்த நண்பர் சாதீக் இல்லத்தில் தங்கி பல இடங்களைப் பார்த்த மனமகிழ்ச்சியோடும் லிபியா நாட்டுத் தலைவர் கடாபி அவர்களை சந்தித்த மனமகிச்சியோடும் நாடு திருப்பினார் லத்தீப் பாரூக்.

முன்னாள் ஜனாதிபதிகளான ஜே. ஆர். ஜயவர்தனவுடனும், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவுடனும் மற்றும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இலங்கை பலஸ்தீன் நட்புறவு ஒன்றையத்தை உருவாக்குவதற்கு பின்புலமாக இருந்து செயற்பட்டவர் லத்தீப் பாரூக். இப்படி ஊடகத்துறையில் நீண்டதொரு வரலாற்கைக்கொண்டவராக இவர் காணப்படுகின்றார். இவர் ஊடக வாழ்க்கைப் பயணம் என்ற பெயரில் பெரியதொரு சுயசரிதை நூலும் வெளிவந்துள்ளது.

இலங்கையில் அரபுலக அரசியல் கலாசாரத்தையும் அவர்களுடைய பண்புகளையும் மனிதாபிமானச் செயற்பாடுகளையும் அறிமுகம் செய்தவர். அவை மாத்திரமல்ல சிங்கள முஸ்லிம்களுக்கிடையே நட்புறவை நிலை நாட்டுவதில் பெரும் மகாத்மாவாக விளங்கியவர். ஆங்கில ஊடகத் துறையில் 50 ஆண்டுகளுக்கு மேல் ஒரு தனித்துவமான ஆளுமையைப் பதிவு செய்தவர்.

இக்பால் அலி...




# கிழக்கின் குரல்





கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், காத்தான்குடி அல் அக்ஸா ஜும்ஆப் பள்ளிவாசலில் ரமழான் மாதத்தின் முதல் நாள் புனித நோன்பு திறக்கும் நிகழ்வில் கலந்து கொண்டார். இதனைத்தொடர்ந்து கிழக்கு மாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை காத்தான்குடியில் நடைபெறவுள்ள கிழக்கு இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வு தொடர்பான கலந்துரையாடலொன்றும் நடைபெற்றது.

## மூதூர் வேதத்தீவு ஆற்றில் நீராடச் செல்ல வேண்டாமென அறிவிப்பு

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் வேதத்தீவு ஆறு மற்றும் இடிமண் ஆறுகளில் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துவருவதால் பொதுமக்களை எச்சரிக்கையுடன் இருக்குமாறு சமூக அமைப்பினர் எச்சரித்துள்ளனர்.

குறிப்பாக வழமையாக இப்பகுதிகளில் நீராடச் செல்பவர்களையும், நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களையும் செல்ல வேண்டாமென வேதத்தீவு சமூக சேவை அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

இந்நிலையில் இவ்வாறுகளில் நன்னீர் மீன்பிடியில் தினமும் பெருமளவில் ஈடுபடும் மீனவர்கள் மற்றும் நீராடச் செல்பவர்களின் பாதுகாப்புக் கருதி இவ்வாறுகளுக்கு செல்ல வேண்டாமெனவும் அமைப்பினரால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

## உணவு பாதுகாப்பு சட்ட திட்டங்களை மீறுபவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை

(ஒலுவில் விசேட நிருபர்)

உணவு பாதுகாப்பு சட்ட திட்டங்களை மீறுபவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அக்கரைப்பற்று சுகாதார வைத்திய திகாரி டொக்டர் எம்.எப்.ஏ. காதர் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி டொக்டர் சக்கீலா இஸ்ஸதீனின் ஆலோசனைக்கமைய அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்துக்குட்பட்ட உணவகங்களின் உரிமையாளர்கள் மற்றும் உணவு தயாரிப்பவர்கள் ஆகியோருக்கு விழிப்புணர்வு செயலமர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு, பொதுச் சுகாதார பரிசோதகர்கள் குழுவினர் தொடர்ச்சியாக உணவகங்களில் திடீர் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்கள் போன்றவற்றை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது நோன்பு காலம் ஆகையால் வீதியோரங்களில் உணவுப் பொருட்கள் விற்பனை செய்பவர்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் அனுமதி பெற வேண்டுமென கேட்டுள்ளார்.

வீதியோரங்களில் உணவு விற்பனை செய்யும் இடங்களில் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படவில்லையென அறியக் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் முகக்கவசம், கையுறை போன்றவற்றை பாவிக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளார்.

உணவு கையாளும் நிலையங்கள், பொதுச் சுகாதார பரிசோதகர் குழுவினரால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுவருவதாதவும், இதன்போது உணவகங்கள் மற்றும் வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள், உணவு பரிமாறுவோர் ஆகியோருக்கு சுகாதாரம் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுவருவதாகவும் கூறினார்.

உணவு சட்ட விதிமுறைகள், நுகர்வோர் விவகாரசட்டங்கள் மற்றும் அதன் விதிமுறைகளுக்கு அமைய வேண்டுமெனவும், உணவு தயாரிப்போர், உணவு விநியோகிக்கும் இடம், பயன்படுத்தும் உபகரணம் போன்றவற்றின் தூய்மையை உறுதிப்படுத்தல், அதிக எண்ணெய், அதிக சீனி, அதிக உப்பு கொண்ட உணவுகளை விற்காதிருத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சுகாதார பகுதியினரின் அறிவுறுத்தல்களை உதாசீனம் செய்து பாவனைக்குதவாத உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அதன் உரிமையாளருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வியாபார நிலையங்கள் மூடப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

## அதாஉல்லா எம்.பி – தென்னிந்திய கட்டட நிர்மாணத்துறை வல்லுநர் இடையில் சந்திப்பு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)



தென்னிந்திய தொடர்மாடிக் குடியிருப்பு கட்டட நிர்மாணத்துறையின் வல்லுநரும், தயாரிப்பாளருமான எல்.கணேஸ், பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாஉல்லா ஆகியோருக்கிடையில் கலந்துரையாடலொன்று அண்மையில் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது, இலங்கையில் தொடர்மாடி குடியிருப்பு நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பது, கிழக்கிலங்கையில் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இங்கு பேசப்பட்டன.

அத்தோடு அக்கரைப்பற்றில் முக்கியமான நிர்மாணங்களை சென்று பார்த்த எல்.கணேஸ், வெகுவிரைவில் தொடர்மாடி வீட்டுத்திட்ட பணிகளை கிழக்கில் தொடர்வதற்கான நம்பிக்கையை இதன்போது வெளிப்படுத்தியதோடு மேலதிக ஆலோசனைகளை தான் வழங்குவதாகவும் தெரிவித்தார்.




பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்திற்கு ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேசனின் "Back to School " உதவித்திட்டத்தின் கீழ் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம். இந்நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். (படம் : எம்.எம்.ஜெஸ்மின்)

## கிழக்கு மாகாணத்திலுள்ள தகவல் அதிகாரிகளுக்கு செயலமர்வு

தகவலறியும் உரிமைச் சட்டத்தை வலுப்படுத்தும் நோக்கில் கிழக்கு மாகாணத்திலுள்ள அரச நிறுவனங்களில் தகவல் அதிகாரிகளுக்கான செயலமர்வுகளை இலங்கை அபிவிருத்தி ஊடகவியல் மன்றம் அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது.

'அரச பொறுப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை' எனும் தொனிப்பொருளில் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற இச்செயலமர்வுகளில் சுமார் 120 தகவல் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

பொதுநலவாய மன்றத்தினால் நிதியளிக்கப்பட்ட செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக நடைபெற்ற செயலமர்வுகளுக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்ட செயலகங்கள் ஒத்துழைப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இலங்கை அபிவிருத்தி ஊடகவியல் மன்றத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான சட்டத்தரணி அசாட் முஸ்தபாவின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இச்செயலமர்வுகளில் வளவாளராக ஊடகவியலாளரும், தகவலறியும் செயற்பட்டாளருமான றிப்தி அலி பங்கேற்றிருந்தார்.

## வேட்டைத் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் இளைஞன் பலி!

### ஒருவர் கைது

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

ஓட்டமாவடி மஜ்மா நகர் பகுதியில் துப்பாக்கி வெடிப்புச் சம்பவத்தில் இளைஞன் ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர். நண்பர்கள் இருவர் வேட்டைக்கு சென்ற போது அவர்கள் பயன்படுத்திய வேட்டைத் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் இளைஞன் உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

ஓட்டமாவடி நாவலடி பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய இம்தியாஸ் எனும் இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன்,



அவருடன் வேட்டைக்குச் சென்ற நபர் வாழைச்சேனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்த நபர் துப்பாக்கியை தன்வசம் வைத்திருந்த போது அது தவறுதலாக இயங்கியதில் இளைஞன் உயிரிழந்துள்ளதாகவும் அவருடன் சென்ற நபர் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்த இளைஞனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மடத்தடி மீனாட்சியம்மன் ஆலய மகா சங்காபிஷேகம்

### 'மரகதம்'வரலாற்று நூல் வெளியீட்டு விழா

(காரைதீவு குறூப் நிருபர்)



வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகா சங்காபிஷேக நிகழ்வும் "மரகதம்" வரலாற்று நூல் வெளியீட்டு விழாவும் எதிர்வரும் (16) சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

108 சங்காபிஷேக நிகழ்வு ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் முன்னிலையில் காலை 9.00 மணி முதல் சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

அதேவேளை, வரலாற்று பாரம்பரியத்துடன் கூடிய மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கான முதல் வரலாற்று நூலான 'மரகதம்' நூல் வெளியீட்டு விழா ஆலய சந்நிதானத்தில் காலை 11 மணிக்கு ஆலய பரிபாலன சபையின் தலைவர் கலாநிதி கி.ஜெயசிறில் தலைமையில் நடைபெறவுள்ளது. ஆலய பரிபாலன சபை ஆலோசகர் உதவிக் கல்விப் பணிப்பாளர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா தொகுத்து எழுதிய இந் நூல் வெளியீட்டு விழாவிற்கு பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அழைக்கப்பட்டுள்ளார்.

முதன்மை அதிதியாக ஜனாதிபதி செயலணியின் கிழக்கு மாகாண இணைப்பாளர் கணபதிப்பிள்ளை மோகன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

மேலும், ஆன்மீக அதிதியாக இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

## காத்தான்குடி சிறுவர் அபிவிருத்தி நிலையத்துக்கு அமெரிக்க பிரதி உயர்ஸ்தானிகர் விஜயம்

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

காத்தான்குடி சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு இலங்கைக்கான அமெரிக்க பிரதி உயர்ஸ்தானிகர் டக்ளஸ் இ சொனக் நேற்றுமுன்தினம் மாலை விஜயம் செய்தார்.

இதன்போது அமெரிக்க பிரதி உயர்ஸ்தானிகருக்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. புனித நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்விலும் அமெரிக்க பிரதி உயர்ஸ்தானிகர் டக்லஸ் இ சொனக் கலந்துகொண்டார். காத்தான்குடி சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் தலைவர் ஐ.எல். எம் உபைத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் காத்தான்குடி சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் செயற்பாடுகள், அதன் வேலைத்திட்டம், அதன் ஆரம்பம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது கருத்து தெரிவித்த அமெரிக்க பிரதி உயர்ஸ்தானிகர், காத்தான்குடி சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் செயற்பாடுகள் மிகவும் சிறப்பாக இருப்பதாகவும் இங்குள்ள மாணவர்கள் வினைத்திறன் மிக்கவர்களாக காணப்படுவதாகவும் தெரிவித்தார்.



இந்நிகழ்வில் சிவில் சமூக செயற்பாட்டாளர் ஏ.எல்.எம்.சபீல் நழீமி மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட காத்தான்குடி சிறுவர் இல்ல நிர்வாகிகள், முக்கியஸ்தர்கள், அமெரிக்க தூதரக அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## அலுவலக முகாமைத்துவப் போட்டி: தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்கு விருதுகள்

(தம்பலகாமம் குறூப் நிருபர்)



திருகோணமலை மாவட்டத்திலுள்ள 11 பிரதேச செயலகங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட 2022–2023 ஆம் ஆண்டின் அலுவலக முகாமைத்துவம் தொடர்பான போட்டியில் தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவின் பாலம்போட்டாறு கிராம சேவகர் பிரிவு மூன்றாமிடத்தை பெற்றதுடன் கிராம சேவகர் பிரிவின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் வை.தங்கரூபன் இதற்கான விருதை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வின் போது பெற்றுக் கொண்டார். மாவட்ட மட்டத்தில் ஆறாமிடத்தை தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவின் புதுக்குடியிருப்பு கிராம சேவகர் பிரிவின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரேம் குமார் பெற்றுக்கொண்டார்.

# மாத்தளை, கெடவள அல் யூஸுபிய்யஹ்வில் 2ஆவது அல்-ஆலிம், அல்-ஹாபிழ் பட்டமளிப்பு விழா

Reg.No: MRCA/13/1/AC/139







மாத்தளை கெடவள அல் யூஸுபிய்யஹ் அரபுக் கல்லூரியின் 2ஆவது பட்டமளிப்பு விழா அண்மையில் கல்லூரி மைதானத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது. கல்லூரி அதிபர் மௌலவி அஷ்ஷெய்க் ஏ.எஸ்.எம்.பைஸல் மற்றும் கல்லூரியின் நிர்வாக சபைத் தலைவர் எஸ்.எச்.எம். நவ்ஷாட் ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், அக்குறணை அல் ஜாமிஆ ரஹ்மானிய அரபுக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் கல்லூரியின் நிர்வாக சபையின் உப தலைவருமான மௌலவி ஏ.சி.எம். ஜிப்ரி மற்றும் கேடிசி குறூப் தொழிலதிபர் எம்.எஸ்.எம். ஸனீர் ஆகியோர் பிரதம அதிதியாகவும் பதுளை பஹ்மியா அரபுக் கல்லூரியின் பணிப்பாளர் மௌலவி ஏ.எச். நவ்ஷாட் விசேட பேச்சாளராகவும் கலந்து கொண்டனர்.



இவ்விழாவில் ஆலிம்களாக 31பேரும் ஹாபிழ்களாக 9 பேரும் பட்டம் பெற்றனர். இஸட்.ஏ. அஸீமுதீன், எம்.எச்.எம். ஹாபில், ஏ.ஜீ. எம். ஹாரிஸ், எம்.ஏ.எம். அஸ்லம், எம். எம். அப்துல்ஹகீம், எம்.எம். சல்மான், எம். எஸ்.எம். சாஜித், ஏ.டப்ளியு.எம். அம்சார், ஏ.எம். அஹ்சான், என்.எம். அப்ரித், எம். எம்.எம். சினான், எம்.ஏ.எம். அஸ்மீன், பி.எம். ஆபித், எம்.என்.எம். ரிஸ்கான், என்.எம்.சனூஸ், எம்.ஆர்.எம். முன்சிப், எம்.ஆர்.எம்.ராசா, எம்.எப்.எம்.சும்ரி, எம். என்.எம்.நாசிக், எம்.எல்.எம்.பஸ்ரின், எம். என்.எம். சப்ரான், கே.எம்.எம். இல்ஹாம், இஸட்.ஏ.எம். ஸஹ்ரான், ஏ.எம். அஸாட், எம்.என்.எம். ரில்வான், எம்.எம்.எம். முஸானி, எம்.எம். அஹ்மத், எம்.என். இனாமுல் ஹசன், எம். டப்ளியு. ஸஹ்ரான் முஹம்மத், எம்.என்.எம். ரியாஸ், எம்.ஏ. உமர் ஹூஸைன் ஆகியோர் அல் ஆலிம்களாகவும் எம்.எப். அப்துல்லாஹ், எம்.எஸ்.எம். ஸாஜித், எம். அன்சாப், எம்.எம். கலீலுர் ரஹ்மான், எம்.என்.எம். அப்ளல், எச்.எம். சாலிஹீன், ஏ.ஆர்.எம். அன்சாப், ஏ.எம். இப்ராத், எம். எம். ஹகீமுதீன் ஆகியோர் அல்ஹாபிழ்களாகவும் பட்டம் பெற்றனர்.













இவ்விழாவுக்கான ஏற்பாடுகளை கல்லூரியின் நிர்வாக சபை, கல்லூரியின் பழைய மாணவர்கள், கெடவள ஜும்ஆப் பள்ளி நிர்வாக சபை ஆகியோரினால் மேற்கொள்ளப்பட்டது.

படமும் தகவலும்
எம்.சதுர்தீன்...
மாத்தளை சுழற்சி நிருபர் (JP)

தினகரன் வர்த்தக உலா

## இலங்கையில் சூழலுக்கு நட்பான கறையான் நிர்வகிப்பு தீர்வுகள்



இலங்கையில் புத்தாக்கமான பூச்சி நிர்வகிப்பு தீர்வுகளை வழங்குவதில் முன்னோடியாகத் திகழும் சுரேன் குக் ஏஜென்சிஸ், உலகின் முன்னணி இரசாயனப் பொருட்கள் உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றான சுமிடோமோ கெமிக்கல் உடன் முக்கியத்துவம் வாய்ந்த பங்காண்மையை ஏற்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. அதன் பிரகாரம், வஸாரி 10 எஃப் எல் எனும் புதிய கறையான் கட்டுப்படுத்தல் தயாரிப்பை இலங்கை சந்தையில் அறிமுகம் செய்துள்ளது.

பூச்சி நிர்வகிப்பு தொழிற்துறையில், வினைத்திறனான மற்றும் சூழலுக்கு நட்பான தீர்வு இதனூடாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

வஸாரி 10 எஃப் எல் என்பது, சுரேன் குக் ஏஜென்சிஸ் மற்றும் சுமிடோமோ கெமிக்கல் ஆகியவற்றுக்கு நிலைபேறான மற்றும் வினைத்திறனான பூச்சி முகாமைத்துவ தீர்வுகளை அறிமுகம் செய்வதற்கான அர்ப்பணிப்புக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. தொழிற்துறையில் முன்னோடி எனும் வகையில், சுரேன் குக் ஏஜென்சிஸ் எப்போதும் புத்தாக்கமான மற்றும் நச்சுத் தன்மை அற்ற பூச்சிக் கட்டுப்படுத்தல் முறைகளை பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளது. வஸாரி 10 எஃப் எல் அறிமுகமானது, அதன் கொள்கையான கரையான்களுக்கு எதிராக சக்தி வாய்ந்த தீர்வை வழங்குவது என்பதற்கமைய அமைந்துள்ளது. மனிதர்களினதும், சூழலினதும் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

## ஐரோப்பிய சுகாதார மற்றும் பாதுகாப்பு தர சான்றிதழைப் பெற்ற SplashBay




பண்டாரகமவில் அமைந்துள்ள புத்தாக்கம் நிறைந்த நீர்ப் பூங்காவான பேர்ள் பே இல் உள்ள *SplashBay* தனது முதலாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் நிலையில் *TUVNOD* இடமிருந்து மதிப்புக்குரிய ஐரோப்பிய சுகாதார மற்றும் பாதுகாப்புத் தரச் சான்றிதழைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

டேவிட் பீரிஸ் குழுமத்தின் புகழ்பெற்ற உறுப்பினரான பேர்ள் பே, நீர்ப் பூங்கா, சான்றிதழ் பெற்ற ஓய்விடம், முறைசார் கார்ட்டிங் பாதை மற்றும் காற்றுத் துப்பாக்கி சுடும் பிரதேசம், அம்பு விடும் பிரதேசம் போன்ற பொழுதுபோக்கு அம்சங்களைக் கொண்டுள்ளது.

இந்தச் சான்றிதழானது பேர்ள் பேக்கு ஒரு குறிப்பிடத்தக்க வெற்றியை எடுத்துக்காட்டுவது மட்டுமல்லாம், பொழுதுபோக்கு மற்றும் ஓய்வுத்துறையில் சிறந்து விளங்குதல், பாதுகாப்பிற்கான அதன் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை எடுத்துக் காட்டுகிறது.

பேர்ள் பேயானது கடந்த ஒரு வருடத்தில் பரபரப்பை விரும்பும் மற்றும் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக நேரத்தைக் களிக்க விரும்புபவர்களுக்கு முன்னணி இடமாக மாறியுள்ளது.

இங்குள்ள வசதிகளில் தரம் மற்றும் பாதுகாப்பு என்பன கடுமையான ஐரோப்பிய தரத்துக்கு அமைய பின்பற்றப்படுகின்றன என்பதற்கு எடுத்துக் காட்டாக *TUVNOD* இன் சான்றிதழ் அமைந்துள்ளது.

*TUVNOD* ஒரு மரியாதைக்குரிய ஜெர்மன் சான்றிதழ் அமைப்பு என்பதுடன், இது மனிதர்கள், பொருள் சொத்துக்கள் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காக தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் பாதுகாப்பைச் சரிபார்ப்பதில் நிபுணத்துவம் பெற்றதாகும்.

## UCMAS Sri Lanka வின் கொழும்பு தலைமை அலுவலகத் திறப்பு விழா








*UCMAS Sri Lanka* அதன் நான்காவது ஆண்டு நிறைவையொட்டி, கொழும்பில் தன் தலைமை அலுவலகத்தின் திறப்புவிழாவை பெப்ரவரி 21ஆம் திகதியன்று மிகச்சிறப்பான முறையில் கொண்டாடியுள்ளது.

மன எண்கணிதப் பயிற்சியின் மூலம் இளம் மனங்களுக்கு வலுவூட்டும் நோக்குடன் நிறுவப்பட்ட *UCMAS Sri Lanka* கடந்த நான்கு வருடங்களாக கல்வியில் சிறந்து விளங்கும் ஒரு கலங்கரை விளக்காகத் திகழ்ந்துள்ளது.

குழந்தைகளின் அறிவாற்றல் திறன்களை வளர்ப்பதில் அதன் புதுமையான அணுகுமுறை மற்றும் அர்ப்பணிப்பினால், *UCMAS* கல்வித் துறையில் நாடளாவிய ரீதியில் பரவலான பாராட்டையும் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது.

தலைமை அலுவலகத்தின் பிரமாண்ட திறப்பானது இந் நிறுவனத்தின் பயணத்தில் ஒரு முக்கிய தருணத்தைக் குறிப்பதோடு, மனக் கணிதக் கல்வித்துறையில் அதன் தொடர் பங்களிப்பையும் பறைசாற்றுகின்றது.

*UCMAS* உலகளாவிய ரீதியில் மாணவர்களிடையே மன சுறுசுறுப்பு, வேகம் மற்றும் நம்பிக்கையை வளர்ப்பதில் பெரும் பங்காற்றி வருகின்றது. கல்வியாளர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு அதிநவீன வளங்கள் மற்றும் ஆதரவை வழங்குவதில் *UCMAS* இலங்கையின் அசைக்க முடியாத நிறுவனமாகத் திகழ்கின்றது.

தொடர்ச்சியான கண்டுபிடிப்புகள் மற்றும் புதிய கணித முறைகளை மையமாகக் கொண்டு, *UCMAS Sri Lanka*, மன எண்கணிதக் கல்வித்துறையில் புதிய சிகரங்களை எட்டுவதோடு மட்டுமல்லாது, இளம் தலைமுறையினருக்கு அவர்களின் முழுத் திறனை வெளிப்படுத்தவும், எதிர்காலத்தில் சிறந்து விளங்கவும் உதவும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்பதை இந்த 4ஆவது ஆண்டு நிறைவில் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

## DPMC வேர்க்ஷொப் எக்ஸ்பிரஸ் தற்பொழுது காலியில்





தற்பொழுது காலியில் விற்பனைக்குப் பின்னரான சேவை மற்றும்வாடிக்கையாளர்கள் இலகுவில் அணுகக் கூடிய வகையில் நெருக்கமாகச் செயற்படுவதை மேலும் விஸ்தரிக்கும் நோக்கில் டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடட் நிறுவனம் தமது வேர்க் ஷொப் எக்ஸ்பிரஸ் இன் 07ஆவது கிளையை ரம்மியமான காலி நகரில் அண்மையில் திறந்துவைத்தது. 290டி, வக்வெல வீதி,காலி என்ற முகவரியில் அமையப்பெற்றுள்ள சகல வசதிகளையும் கொண்டுள்ள அதிநவீன வாகன சேர்விஸ்பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் நிலையம் தற்பொழுது பிராந்தியத்தில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு மிகவும் வசதி மிக்கதாக அமையும்.

காலி நகருக்கு மிகவும் அருகில் அமைந்துள்ள டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிட்டெட் வேர்க்ஷொப் எக்ஸ்பிரஸ் நிறுவனத்திடமிருந்து சகல பஜாஜ் வாகனங்களுக்குமான சேவைகள், பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பதுடன், முச்சக்கரவண்டி, மோட்டார்சைக்கிள், மற்றும் கியூட் வாகன வாடிக்கையாளர்களுக்கு விசேட சேவைகள் வழங்கப்படும்.

டேவிட் பீரிஸ் குழுமத்தின் வாகன சேவை மற்றும் பராமரிப்புப் பிரிவான DPMC வேர்க்ஷொப் மடபாத்த மாத்தறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றின் கீழ் அமைக்கப்பட்டுள்ள வேர்க்ஷொப் எக்ஸ்பிரஸ் ஊடாக அதன் சேவைகள் மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

இதுவரையில் ஹைட்பார்க் கோர்னர், நீர்கொழும்பு, குருநாகல், அநுராதபுரம், இரத்தினபுரி, காலி மற்றும் பதுளை ஆகிய நகரங்களில் இது அமைக்கப்பட்டுள்ளது.

# வடக்கில் சுற்றுலா தளங்களை அபிவிருத்தி செய்ய ஏற்பாடு

## வடக்கு ஆளுநருடன் இந்திய குழுவினர் கலந்துரையாடல்

**யாழ். விசேட நிருபர்**



வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத் தளங்களை அபிவிருத்தி செய்வது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக இலங்கைக்கான இந்திய பதில் உயர்ஸ்தானிகர் கலாநிதி சத்வஞ்சல் பாண்டே உள்ளிட்ட குழுவினருக்கும் வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ். எம் சார்ள்ஸுக்கும் இடையில் விரிவான கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்த விடயங்கள் தொடர்பாக வடமாகாண ஆளுநரை இந்தக் குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடியதுடன், யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் செவிதி சாய் முரளியும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார்.

பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்தல், சென்னையிலிருந்து பலாலிக்கு விமான சேவைகளை அதிகரித்தல், யாழ். காங்கேசன்துறைக்கும் இந்தியாவின் தூத்துக்குடிக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவையை முன்னெடுத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக வடமாகாண ஆளுநர் சார்ள்ஸுடன் இந்தக் குழுவினர் கலந்துரையாடினர்.

இவை தவிர, இயற்கைச் சக்தி வளங்களை பயன்படுத்தி மின் உற்பத்தியை மேற்கொள்ளுதல் மற்றும் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கக்கூடிய ஏனைய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாகவும் வடமாகாண ஆளுநருடன் இந்தக் குழுவினர் கலந்துரையாடினர்.

# வடக்கின் உதயம்

## யாழில் இளம் குடும்பஸ்தர் கொலை; கிளிநொச்சியில் நால்வர் கைது

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவரை கடத்தி படுகொலை செய்த சம்பவம் தொடர்பாக 4 சந்தேக நபர்களை யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 23 வயதுடைய தவச்செல்வம் பவிதரனும் அவரது மனைவியும் காரைநகருக்கு மோட்டார் சைக்கிளில் சென்று விட்டு, வீடு திரும்பிய வேளையில் பொன்னாலை பாலத்துக்கு அருகில் வைத்து இவர்கள் இருவரும் இருவேறு வாகனங்களில் வன்முறை கும்பலால் கடத்தப்பட்டனர்.

இந்நிலையில் மனைவியை சித்தங்கேணியில் இறக்கி விட்டு, கணவரான பவிதரன் மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்தி விட்டு, இவரை வட்டுக்கோட்டை வைத்தியசாலைக்கு முன்பாக கைவிட்டுச் சென்றிருந்தனர். படுகாயமடைந்த இக் குடும்பஸ்தரை வட்டுக்கோட்டை வைத்தியசாலை பணியாளர்கள் மீட்டு, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் இவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய பொலிஸார், கிளிநொச்சியின் ஜெயபுரம் பிரதேசத்தில் சந்தேக நபர்கள் பதுங்கியிருந்த போது கைது செய்துள்ளனர்.

இச்சந்தேக நபர்களிடமிருந்து 2 மோட்டார் சைக்கிள்களை கைப்பற்றியுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், வட்டுக்கோட்டை மற்றும் அராலியைச் சேர்ந்த 37, 32, 25, 22 வயதுடைய சந்தேக நபர்களையே கைது செய்துள்ளதாகவும் தெரிவித்தனர்.இச்சந்தேக நபர்களை வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பூநகரியில்
## 'பன்னிருமாத ஒளி விளக்கு' நிகழ்ச்சி



**பரந்தன் குறூப் நிருபர்**

நாடளாவிய ரீதியில் கலாசார எழுச்சியினூடாக அமைதியான வளர்ச்சியடைந்த பூரணமான அழகான இலங்கை மானிட சந்ததியை உருவாக்கும் நோக்கில் வருடாந்தம் 'பன்னிருமாத ஒளி விளக்கு' நிகழ்ச்சி தொடர் கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படுகின்றது.

அந்த வகையில் கலாசார மற்றும் கலை நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (12) கிளிநொச்சியின் பூநகரி பிரதேச செயலளர் பிரிவில் முன்னெடுக்கப்பட்டது. இரணைமாதா நகரில் மூன்று கலைஞர்களுக்கு தலா 5000 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் கிராமிய நூலகங்களுக்கு நூல்கள் அன்பளிப்புச் செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இரணைமாதா நகர் பொது நூலகத்துக்கு ஒருதொகுதி நூல்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பன்னிருமாத நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஜெயபுரம் சிறுவர் கழக சிறுவர்களுக்கான நடனப் பயிற்சி செயலமர்வும் நடத்தப்பட்டது.

## வடமாகாண ஆளுநரை சந்தித்த அவுஸ்திரேலிய நிபுணர் குழுவினர்



**யாழ். விசேட நிருபர்**

வடக்கு மாகாண மக்களின் தற்போதைய நிலைமை தொடர்பாக அம்மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸுடன் அவுஸ்திரேலிய நிபுணர்கள் குழுவினர் கலந்துரையாடினர்.

சமுத்திர பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஆரம்பக்கட்ட கள ஆய்வில் ஈடுபட்டுள்ள அவுஸ்திரேலிய நிபுணர்கள் குழுவினரே நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (12) வடமாகாண ஆளுநரை சந்தித்துக் கலந்துரையாடினர்.

வடமாகாண மக்களின் தற்போதைய வாழ்வியல் செயற்பாடுகள், பாதுகாப்பு, சுகாதாரம், சுற்றுலாத்துறை, உட்கட்டமைப்பு வசதிகள், சமுத்திர பாதுகாப்பு, கடற்றொழில் செயற்பாடுகள், கண்ணிவெடி அகற்றுதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக வடமாகாண ஆளுநருடன் அவுஸ்திரேலிய நிபுணர்கள் குழுவினர் விரிவாக கலந்துரையாடினர். இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்தின் அரசியல் மற்றும் பொருளாதாரத் துறையின் முதலாம் நிலை செயலாளரின் தலைமையில் இந்த நிபுணர்கள் குழுவினர் ஆளுநரை சந்தித்துள்ளனர்.

## எழுதுமட்டுவாழில் துப்பாக்கி சூடு; 32 வயது நபர் படுகாயம்



**சாவகச்சேரி விசேட நிருபர்**

யாழ். கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (12) இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

குரங்குகளை கட்டுப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படும் வாயு துப்பாக்கியால் சுடப்பட்டதிலேயே இவர் மார்பில் படுகாயமடைந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

ஆண் சகோதரர்களான மூத்த சகோதரருக்கும் இளைய சகோதரருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டின் போதே, மூத்த சகோதரரை இளைய சகோதரர் வாயு துப்பாக்கியால் சுட்டுள்ளதாக தமது ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் எழுதுமட்டுவாழ் தெற்கைச் சேர்ந்த 32 வயதுடைய மூத்த சகோதரர் படுகாயமடைந்து மிருசுவில் பிரதேச வைத்தியசாலையில் உடனடியாக அனுமதிக்கப்பட்டார். இதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக இவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணையை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மன்னாரில் விளம்பர பலகைகள் அகற்றல்

**மன்னார் குறூப் நிருபர்**



மன்னார் நகர சபை எல்லைக்குள் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வர்த்தக நிலையங்களில் உரிய அனுமதி பெற்று வரி செலுத்தாது காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பரப் பலகைகள் நேற்று புதன்கிழமை மன்னார் நகர சபை ஊழியர்களால் அகற்றப்பட்டன.

மன்னார் நகர சபையிடம் உரிய வரி செலுத்தி அனுமதி பெறாது, உள்ளூர் வர்த்தகர்களின் வர்த்தக நிலையங்களில் நீண்ட நாட்களாக காட்சிப்படுத்தப்பட்டிருந்த பல்வேறு நிறுவனங்களின் விளம்பர காட்சி பலகைகளே வர்த்தக நிலையங்களிலிருந்து அகற்றப்பட்டன.

முன்னதாக இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் விளம்பரப் பலகைகளுக்கு அனுமதி பெற்று வரியை செலுத்தி காட்சிப்படுத்துமாறு நகர சபையால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டு, கடிதங்கள் அனுப்பப்பட்டு உரிய அனுமதியை பெறாத வர்த்தக நிலையங்களின் விளம்பர பலகைகள் மேற்கண்டவாறு அகற்றப்பட்டன.

மேலும் நகர சபை எல்லைக்குள் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள சிறு வர்த்தக நிலையங்கள், சிற்றுண்டி நிலையங்கள், குளிர்பான நிலையங்களையும் அகற்றுவதற்கான நடவடிக்கையையும் மன்னார் நகரசபை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முல்லைத்தீவில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு



**மாங்குளம் குறூப் நிருபர்**

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி நடத்தப்பட்ட வினாடி வினா போட்டிக்கான பரிசளிப்பு விழாவும் சர்வதேச மகளிர் தின நிகழ்வும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (13) முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் பாடசாலையில் நடைபெற்றது

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி கொமர்ஷல் வங்கியின் முள்ளியவளை கிளையினர், முல்லைத்தீவு கல்வி வலயத்துடன் இணைந்து வினாடி வினா போட்டியை கடந்த வாரம் நடத்தியிருந்தனர்.

வினாடி வினா போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை பெற்ற மாணவர்கள் வெற்றிக் கேடயம் மற்றும் பதக்கம், சான்றிதழ், பணப்பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். நான்காம், ஐந்தாம் இடங்களை பெற்ற மாணவர்கள் வெற்றிப் பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

வினாடி வினா போட்டியில் முதலாம் இடத்தை வற்றாப்பளை மகா வித்தியாலய மாணவிகளும், இரண்டாம் இடத்தை முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் பாடசாலை மாணவிகளும், மூன்றாம் இடத்தை குமுழமுனை மகா வித்தியாலய மாணவிகளும், நான்காம் இடத்தை விசுவமடு மகா வித்தியாலய மாணவிகளும், ஐந்தாம் இடத்தை புதுக்குடியிருப்பு இணைப்பாலை றோமன் கத்தோலிக்க பாடசாலை மாணவிகளும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.




## சிறுமி பாலியல் துஷ்பிரயோகம்; குற்றவாளிக்கு 10 வருட கடூழிய சிறை

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**



நானுஓயா பொலிஸ் பிரிவில் சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டு, நுவரெலியா மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட 52 வயதுடைய நபர் ஒருவருக்கு 10 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டில் நானுஓயாவைச் சேர்ந்த இந்நபர், 16 வயதுக்கு குறைந்த பாடசாலை சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பாக நானுஓயா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இந்நபர் கைது செய்யப்பட்டு, இவருக்கு எதிராக நுவரெலியா மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்ட நிலையில் வழக்குக்கான தீர்ப்பு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (13) நுவரெலியா மேல் நீதிமன்ற நீதிபதி விராஜ் வீரசூரியவால் வழங்கப்பட்டது.

அத்துடன், இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 5 இலட்சம் ரூபா நட்டஈடு வழங்க வேண்டுமென தீர்ப்பு வழங்கிய நீதிபதி, இந்த நட்டஈட்டு தொகையை பாதிக்கப்பட்டவருக்கு வழங்காத பட்சத்தில் மேலும் மூன்று வருடங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமெனவும் நீதிபதி தீர்ப்பளித்துள்ளார். மேலும் குற்றவாளி நீதிமன்ற அபராதத் தொகை 15 ஆயிரம் ரூபாவை செலுத்த உத்தரவிட்ட நீதிபதி, இந்த அபராதத்தை செலுத்தாத பட்சத்தில் மேலும் மூன்று மாதங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமென்றார்.

(ஆ.ரமேஸ்)

## பலாங்கொடை கதிர்வேலாயுத சுவாமி கோயில் திருவிழா

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

பலாங்கொடை அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தானத்தின் வருடாந்தத் திருவிழா இம்மாதம் 20ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து 22ஆம் திகதி பாற்குட பவனியும் 24ஆம் திகதி தேர் திருவிழாவும் நடைபெறவுள்ளதாக, கோயில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இந்நிலையில் தேர் திருவிழாவின் போது பக்தர்கள் புடைசூழ பலாங்கொடை நகரினூடாக தேர் பவனி வரவுள்ளதாகவும், கோயில் நிர்வாகத்தினர் மேலும் தெரிவித்தனர்.

உற்சவகால பிரதம குரு சர்வசாதக சிவஸ்ரீ ஜோதிட பூஷணம் கோ.வே.கதிரேசன் குருக்கள், திருவிழாக் கால சமய வழிபாடுகளை நடத்தி வைக்கவுள்ளார்.

## பலாங்கொடையில்
## பஸ்ஸிலிருந்து தவறி விழுந்து வயோதிபப் பெண் மரணம்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**



பஸ்ஸில் பயணித்துக்கொண்டிருந்த 72 வயதான மூதாட்டி ஒருவர் பஸ்ஸிலிருந்து தவறி விழுந்து மரணமான சம்பவம் பலாங்கொடை பிரதேசத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (12) இடம்பெற்றுள்ளது.

பாணந்துறையிலிருந்து மகியங்கனை நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டியில் இருந்தே இவர் தவறி விழுந்துள்ளார்.

பொலன்னறுவையைச் சேர்ந்த இவர், பலாங்கொடை மாயல்கஹ பிரதேசத்தில் உறவினர் ஒருவருடைய மரண வீட்டுக்குச் சென்று திரும்பிக்கொண்டிருக்கையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் படுகாயமடைந்த இவர், பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் மரணமடைந்ததாக, பொலிஸார் தெரிவித்தனர்.

## தாக்குதல் சம்பவம்; இரு தோட்ட முகாமையாளருக்கு விளக்கமறியல்

நுவரெலியா, பம்பரகலை தோட்டத்தில் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட தோட்ட முகாமையாளர்கள் இருவருக்கு எதிர்வரும் 18ஆம் திகதிவரை நுவரெலியா மாவட்ட நீதவான் நீதமன்றத்தால் விளக்கமறியல் உத்தரவு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டுள்ளது.

நுவரெலியா பம்பரகலை தோட்டத்தில் கள உத்தியோகத்தர் ஒருவருக்கும் தோட்ட முகாமையாளர் இருவருக்கும் இடையில் கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி தொழில் ரீதியாக வாக்குவாதம் ஏற்பட்டு பின்னர் கைகலப்பில் முடிந்துள்ளது. தோட்ட தேயிலை காணிகளுக்கு விசிர வழங்கப்பட்ட மருந்தை மீதம் வைத்தமையால் கள உத்தியோகத்தரை தோட்ட முகாமையாளர் தகாத வார்த்தையால் பேசியதை தொடர்ந்தே கைகலப்புச் சம்பவம் இடம்பெற்றதுடன், இதில் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது சந்தேகநபர்களான தந்தை மற்றும் மகனை ஏழு நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

(ஆ.ரமேஸ்)

# வயிற்றில் கட்டி யாருக்கு வருகிறது?

## ஒரு எளிய சோதிட விளக்கம்



நோயற்ற வாழ்வுடன் வாழ்நாளைக் கழிக்க வேண்டுமென்கிற ஆவல் நம்மெல்லோருக்குமுண்டு. ஆனால் அவ்வெண்ணம் வாழ்க்கையில் ஈடேறாது பல இன்னல்களுக்கு உள்ளாகிறோம். அவ்வின்னல்கள் காரணமான நோய்கள் ஏன்? ஏற்படுகின்றன என்பதையும் நாமறியோம். அவற்றிலே வெளிப்படையாக உடலிலோ அன்றிப் புலன்களிலோ ஏற்படும் காய்ச்சல் மற்றும் வலி முதலான நோய்களுக்கு அதற்குண்டான பரிகாரத்தை நாடுகிறோம்.

ஆனால் நம்மால் காரணம் அறியமுடியாமலும் சில நோய்கள் ஏற்படுகின்றன. அவற்றிலொன்று வயிற்றில் உண்டாகும் குன்மம் எனப்படும் கட்டிநோய்.

சிலர் அடிக்கடி ஏப்பம் விடுவதைப் பார்த்திருப்பீர்கள். சிலருக்கு இந்த ஏப்பமானது ஏற்கனவே சாப்பிட்டதையெல்லாம் மறுபடியும் தொண்டைக் குழிக்குள் கொண்டு வருவது போல் இருக்கும். அதுவும் சாப்பாடானது வயிற்றில் புளித்துப் போனது போன்ற அருவருப்பான ஏப்பம் உண்டாகும். சிலருக்கு சாப்பிட வேண்டுமென்ற விருப்பமிருக்கும் ஆனால், உணவை வாயில் வைத்தால் வாந்தியெடுப்பது போன்ற உணர்வு ஏற்படும். வயிறு திடீர் திடீரென உப்பி விடும். வயிற்றினுள் குடைச்சலுண்டாகும். ஆங்காங்கே வயிற்றில் ஒரு கட்டிதிரள்வது போன்ற உணர்வேற்படும். சிறுநீர், மலம் என்பனவும் சிரமப்பட்டுக் கழியும். வாயுவானது கீழே சென்று பறியாமல் மேற்பக்கமாக எழுந்து மார்பை அடைப்பது போன்ற உணர்ச்சியேற்படும். மூச்சுத் திணறும். குன்மம் நம் உடலில் இங்குதான் என்றில்லாமல் எல்லாப் பகுதிகளிலும் தோன்றலாம். அநேகமாக வயிற்றில் தோன்றுவது தான் அதிகம். சரியான போசாக்கின்றி வளர்ந்த ஒருவர் அல்லது எப்போதும் போசாக்கில்லாத உணவை உண்ணும் ஒருவர் எந்நேரமும் உழைப்பில் கவனம் செலுத்தி உணவைக் கவனிக்காமல் திரிந்த ஒருவர், எலும்பும் தோலுமான உருவத்துடன் அல்லது உடம்பு ஊதிப்பருத்து வயிறும் பானைபோல உப்பியிருக்க எந்நேரமும் இடுப்பைப் பிடித்துக் கொண்டு குனிந்து முக்கி முனகி இயங்கிக் கொண்டிருப்பாரேயானால் அவருக்கு வயிற்றில் குன்மம் பீடித்திருக்கிறதென்றே அர்த்தமாகும்.

ஆங்கில மருத்துவமானது இதனை ஒரு வேண்டாத கட்டி வளர்த்திருப்பதாகக் கருதி அல்லது புற்றுநோயின் அறிகுறியென்று கூறி சத்திரசிகிச்சை மூலம் குணப்படுத்த முயல்கிறது

ஆனால் இந்நோய்க்கான காரணத்தை சோதிட நூல்களும் பழம்பெரும் வைத்திய நூலான கர்மவிபாகமும் விரிவாக எடுத்துக் கூறுகின்றது.

உடலில் அதன் இயக்கத்துக்கு உறுதுணையாக உள்ள பொருட்கள் யாவும் பல காரணங்களால் ஒன்று சேர்ந்து விட்டால் அதற்குப் பெயர் தான் குன்மம், கட்டி என்பதெல்லாம்.

இதற்கான காரணத்தை ஜாதக கிரந்தம் என்ற நூல் இவ்வாறு கூறுகிறது. அதாவது இரு பாவக் கிரகங்களுக்கிடையில் சந்திரன் அகப்பட்டிருந்தால் இதுபோன்ற குன்மம் போன்ற நோய்களுக்கு உள்ளாக முடியும். பாவக்கிரகங்கள் இருபக்க ராசிகளிலும் உள்ளபோது நடுவிலுள்ள ராசியில் சந்திரன் தனித்திருந்தால் அதற்கு பாவ கந்திரியோகம் என்று பெயர். அதேவேளை ஒரே ராசியில் இருபாவிகளுடன் கூடவே சந்திரன் இருப்பினும் இவையிரண்டுக்கும் ஒரே தீயபலனே கூறப்பட்டிருக்கிறது.

இதற்குப் பரிகாரமாக சந்திரப் பிரீதிக்காக பரிகாரநூலில் கூறியுள்ளபடி சாந்தி செய்தால் நோயின் தாக்கமும் வேதனையும் குறைய இடமுண்டு.

இது போன்றே கர்மவிபாகம் என்ற நூலில் எவன் தன் முற்பிறவியில் தனக்கு அறிவைப் புகட்டிய ஆசிரியருக்கு எதிராக அவதூறு பரப்புகிறானோ வன்முறையில் இறங்குகிறானோ அவன் இப்பிறவியில் குன்ம நோய்க்கு உட்பட்டாக வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

இதனை எழுதிய போதாயன முனிவர் அதற்குப் பரிகாரமாக பஞ்சலோகத்தைக் கொண்டோ அல்லது வெள்ளை எருக்கைக் கொண்டோ விநாயகரை மூஷிகத்துடன் முழு உருவமாய்ச் செய்து அம்மூர்த்திக்கு ஹோமம் ஜெபம் போன்றவற்றை நம்பிக்கையுடனும் சிரத்தையுடனும் செய்து பூஜித்தால் நிச்சயமாக குன்மமோ, சுவாச நோயோ குணமாகும் என்கிறார். இனி வைத்திய நூல்களில் கூறப்பட்டுள்ள பரிகாரமுறைகள் பற்றிப் பார்ப்போம். உடலில் வாதம், பித்தம், சிலேட்டுமம் என்று தாதுக்களின் மாறுதல்களாலும், உணவு வகைகளில் கவனக் குறைவாலும் அதிக சிற்றின்ப அனுபவத்தாலும் குடலினுள் கட்டி என்ற இந்தக் குன்மநோய் ஏற்படும். இந்நோய் நுரையீரலிலும் இருதயத்திலும் வயிற்றிலும் (நாபி) சிறுநீர்ப்பையிலும் இருதயத்திற்கும் சிறுநீர்ப்பைக்கும் நடுவேயுமாக ஐந்து இடங்களில் ஏற்பட இடமுண்டு. அக்கட்டிகளில் சில ஆங்காங்கே அசையவும் அல்லது ஒரேயிடத்தில் அசைவற்று நிற்கவும் கூடும். இது அநேகமாக ஆண்களுக்கே ஏற்படும்.

ஆனாலும் மாதருக்கு மாதவிடாய் கோளாறு காரணமாக ஏற்படும்.

இந்நோய்க்கான பரிகாரம் பற்றி வைத்திய நூல்கள் விபரிக்கையில்,

நோயாளியை பட்டினிபோடுதல் நல்லதென்றும் புதிதானதும் சுத்தமானதுமான உணவை உண்ணவேண்டுமென்றும் கூறுகின்றன.

அத்துடன் உப்பு, சுக்கு. மாதுளை, புளிவெஞ்சி, பெருங்காயம் என்பன தினமும் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டுமாம். வாகடத்தில் கூறப்பட்டுள்ள சர்ஜசாரம் என்ற மூலிகையையும் தாழைக் கிழங்கையும் எரித்து அதன் சாம்பலை இந்துப்புடன் கலந்து உட்கொள்ளவும் வேண்டுமாம். மாமிசப்பிரியர்கள் மூலிகைகளையும் கிழங்குகள் வேர்களையும் உண்ணும் நாட்டுப் பிராணிகளின் இறைச்சியை உண்ணலாமாம்.

சுக்கு, மிளகு, திப்பிலி சேர்ந்த பானத்தை அடிக்கடி பருகுவது நல்லது. கள்ளின் தெளிவை ஆமணக்கெண்ணெயுடன் சேர்த்தும் உட்கொள்ள வேண்டும். நெல்லி கடுக்காய், தான்றி, சிவதை, தந்தி முதலான தசமூலத்தை சமமாகச் சேர்த்து நான்கு மடங்கு நீருடன் காய்ச்சி நாலிலொரு பங்காக வற்றச் செய்து அதனை தேன் கலந்து உட்கொள்ளலாம். வசம்பு. கடுக்காய், பெருங்காயம் உப்பு, புளிவெஞ்சி, ஓமம் கலந்து கசாயம் செய்தும் சூட்டுடன் பருக வேண்டுமாம். அத்துடன் நோய்தீரும்வரை ஒவ்வாமையை உண்டாக்கும் மீன்வகைகள், கருவாடு. இறைச்சி வகைகள், வயிற்றில் வாயுவை உண்டாக்கும் பருப்பு வகைகள், இனிப்பான பழங்கள் என்பவற்றை உண்ணவே கூடாதாம்.

வைத்தியரிடம் கலந்து நாராசக சூரணம் வாங்கிச் சாப்பிட்டால் நலமுண்டாகுமென கர்ம விபாகத்தில் மேலும் வழிவகை சொல்லப்பட்டிருக்கிறது. அவரவர் உடல்களில் ஏற்பட்டிருக்கும் வாத பித்த கப மாறுதல் நிலைக்குத் தக்கபடி மருத்துவரிடம் உடலைச் சோதனை செய்து கொண்டு பின்னர் அதற்கேற்ற பரிகாரத்தை ஏற்றுக் கொண்டால் குணமடைந்து நோயற்ற வாழ்வு வாழலாம்.

**திருவோணம்**

---

வாழ்க்கையின் ஓட்டத்தில், கஷ்டங்கள் பெரும்பாலும் கனவுகளை மூழ்கடிக்கும், இந்த நிலையில் மஞ்சுளா ராமலிங்கத்தின் கதை, சாத்தியமில்லாதததாகவே தோன்றும். "17 வயதில் திருமணம், 18 வயதில் கனவுகளை மீறிய சுமை" என்றவாறே அவர் யோசிக்கிறார், முதிர்வயதுக்கான தனது பயணத்தின் ஆரம்ப அத்தியாயங்களை நினைவுபடுத்துகிறார். பல தசாப்தங்களுக்குப் பிறகு, சவால்கள் தொடர்கின்றன, ஆனால் தன்னுடைய மகளை முழுக் குடும்பத்திலும் முதல் மருத்துவராக்கும் அவரது கனவை எதுவும் தடுக்கவில்லை. மஞ்சுளா தளராத உறுதியுடன் வாழ்வின் துன்பங்களை எதிர்கொண்டார். 1 கோடி கடன் மற்றும் கடன்காரர்களின் இடைவிடாத தொந்தரவு என்பனவே அவரது ஆரம்பகால வாழ்க்கையாயிருந்தது. எவ்வாறாயினும், இந்த சவால்களுக்குள், புரட்சிகரமான மாற்றத்திற்கான களத்தை அமைக்கும் ஒரு வழியை அவர் கண்டுபிடித்தார், அதே நேரத்தில் இலங்கையின் தற்போதைய மற்றும் வளர்ந்து வரும் பிரச்சினைகளில் ஒன்றான தவறாக நிர்வகிக்கப்படும் கழிவுகளுக்கு தீர்வை கண்டறிந்தார்!

உள்நாட்டில் தேங்கி நிற்கும் கழிவுகளால் இலங்கை போராடுகிறது. தினமும் 9,000 மெட்ரிக் தொன் திடக் கழிவு உற்பத்தி செய்யப்படுகிறது, இது ஒவ்வொரு

# வரலாற்றை பதிவு செய்துள்ள சிங்கப் பெண்

ஆண்டும் 1.2% அதிகரித்து வருகிறது. சுற்றுச்சூழல் சீரழிவு, சுகாதார அபாயங்கள் மற்றும் சமூக சவால்களில் வெளிப்படும், வெறும் புள்ளிவிவரங்களுக்கு அப்பாற்பட்ட விளைவுகள். கழிவுகளை முறையற்ற முறையில் அகற்றுவது, குறிப்பாக பிளாஸ்டிக், என்பது கவலைக்குரிய பிரச்சினையாக இருந்துவருவதுடன் குப்பைகள் ஒரு இடத்தில் தேங்கி இருப்பது, விலைமதிப்பற்ற நீர்நிலைகளை மாசுபடுத்துகிறது, மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளை அச்சுறுத்துகிறது.

கழிவு நிர்வகிப்பு இக்கட்டான சூழ்நிலைகளுக்கு மத்தியில், மஞ்சுளா ஒரு உயிர்நாடியைக் கண்டுபிடித்தார், அப்போது அவரது மைத்துனர் அதை அவருக்கு பரிந்துரைத்தார். ASPIRE, கழிவு நிர்வகிப்பு அவசரப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயன்றது. இந்த திட்டம் பிளாஸ்டிக் சேகரிப்பை மட்டுமல்லாமல் பிளாஸ்டிக் சேகரிப்பை வலுப்படுத்தவும், மீள்சுழற்சி முயற்சிகளை மேம்படுத்தவும், பொறுப்பான PET பிளாஸ்டிக் அகற்றலுக்கு வாதிடவும், கழிவு நிர்வகிப்பு அமைப்பில் முக்கிய பங்கு வகிப்பவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தவும் செயற்படுகின்றது.

வேர்ல்ட் விஷன் லங்காவின் தலைமையில், ASPIRE ஆனது கழிவு நிர்வகிப்பை கையாள்வதற்கான ஒரு விரிவான அணுகுமுறையை முன்வைத்தது. 'இலங்கையில் பிளாஸ்டிக் முறைசாரா மீள்சுழற்சி சுற்றுச்சூழல் அமைப்பை துரிதப்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல் திட்டம் (ASPIRE) மாற்றத்தின் கலங்கரை விளக்கமாக வெளிப்பட்டது.

இருப்பினும், மஞ்சுளாவைப் பொறுத்தவரை, ASPIRE என்பது ஒரு திட்டம் மட்டுமல்ல அது அவரது குடும்பத்தின் கதையின் பாதையை மாற்றியமைக்கும் ஒரு உயிர்நாடியாக இருந்தது. குறைந்த கல்வி மற்றும் அனுபவத்துடன், மஞ்சுளா ஆரம்பத்தில் கொழும்பில் தனது பயணத்தைத் தொடங்கினார், கழிவுகளின் முக்கியத்துவத்தைஅறியவில்லை. குடிப்பழக்கத்துக்கு அடிமையாகி போராடும் கணவனை கவனித்துக் கொள்வது மற்றும் அதிகரித்து வரும் அவரது உடல் உபாதைகளைச் சமாளிப்பது போன்ற சவால்களுக்குச் செல்வதே அவரது முதன்மையான கவனம். இந்த வலிமையான சவால்களுக்கு மத்தியில்,இந்தத் திட்டம் நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாக வெளிப்பட்டது, தடைகளைத் தாண்டி மஞ்சுளா தனது வாழ்க்கையை மாற்றுவதற்கு மிகவும் தேவையான ஆதரவையும் வாய்ப்புகளையும் வழங்கியது.

"நான் எனக்கு நன்றாகத் தெரிந்ததைச் செய்தேன் மோசமான சூழ்நிலையில் சிறந்ததைப் பார்த்து, அழுத்தமான முயற்சியுடன் மாற்றத்தை ஏற்படுத்தினேன்" என்று அவர் பகிர்ந்து கொள்கிறார். ஒரு கழிவு சேகரிப்பாளராக, அவர் தனது வேலையைத் தாண்டி, குப்பை நிர்வகிப்பு என்ற பெரும் திட்டத்தில் குப்பைகளின், குறிப்பாக பிளாஸ்டிக்கின் மதிப்பை அங்கீகரிப்பதன் மூலம் அதை ஒரு பணியாக மாற்றினார். "இத்திட்டம் பல திறமைகளை வெளிப்படுத்தியது, என்னை கூட ஒரு தொழிலதிபராக மாற்றியது!" மஞ்சுளா பெருமிதத்துடன் நினைவு கூர்ந்தார். "சரியான ஊதியத்தை



எவ்வாறு உருவாக்குவது, வணிக நிர்வாகத்தைப் புரிந்துகொள்வது, எனது வணிகத்தை மேம்படுத்துவது மற்றும் பிற மதிப்புமிக்க நுண்ணறிவுகளுடன் நான் அடுத்து எங்கு கவனம் செலுத்த வேண்டும் என்பதைத் தீர்மானிப்பது எப்படி என்பதை இந்தத் திட்டம் எனக்குக் கற்றுக் கொடுத்தது."

அவருக்குக் கிடைத்த வழிகாட்டுதல், கருவிகள் மற்றும் உபகரணங்களுடன், மஞ்சுளாவின் PET கழிவு சேகரிப்பு சில மாதங்களில் 500 கிலோவிலிருந்து 12,000 கிலோவாக உயர்ந்தது. இந்த புதிய செயல்திறன் சுற்றுச்சூழலின் நிலைத்தன்மைக்கு பங்களித்தது மட்டுமல்லாமல், அவரது வருமானத்தில் கணிசமான ஊக்கத்தின் மூலக்கல்லாகவும் மாறியது. விரைவில், வாழ்க்கையின் துரதிர்ஷ்டங்களால் அச்சுறுத்தப்பட்ட ஒரு தாயின் கனவு, இந்த வருமான அதிகரிப்பு மற்றும் மேம்பட்ட வாழ்க்கைத் தரத்தின் மூலம் ஒரு உத்தரவாதத்தைக் கண்டது.

மஞ்சுளாவின் குழந்தைகள் அவரை 'சிங்கப்பெண்' என்று அடிக்கடி அழைக்கிறார்கள்,

**லில்லி**

---

# ஊதியமில்லா பராமிப்பு பணிகளில் பெண்கள்



## உழைப்புச் சுரண்டலில் இருந்து அவர்கள் மீள்வது எப்போது?

21ஆம் நூற்றாண்டில் அதீத தொழிநுட்ப மாற்றங்களுடன் கூடிய இன்றைய காலகட்டத்தில் உலகில் மனிதனைப் படைக்கும் சக்தி சொரூபமாகவும், கண்ணில்பட்ட தெய்வமாகவும், வாழும் கடவுளாகவும் நம் முன்னோர்களால் என்றும் பெண்கள் போற்றப்பட்டு வருகின்றனர். கலை, அரசியல், கல்வி, பொருளாதாரம், கலாசாரம், விளையாட்டு, விஞ்ஞானம், கண்டுபிடிப்பு, வணிகம், சட்டம் முதலான பல துறைகளில் வெவ்வேறு பதவிகளில் தங்களுக்கான அங்கீகாரத்தை நிலைநாட்டி ஆண்களுக்கு சரிநிகராக பெண்கள் தமக்கென உறுதியானதும், நிலையானதும், கௌரவமானதுமான இடங்களைப் பிடித்துள்ளனர்.

சட்டங்கள் ஆள்வதும் பட்டங்கள் வெல்வதுமான பாரதியின் புதுமைப் பெண்கள் உருவாகிக் கொண்டிருப்பது மட்டுமின்றி குடும்பம், பதவி, கௌரவம், பாரம்பரியம் என அனைத்தையும் பேணியும் வருகிறார்கள். பெண்களே நாட்டின் கண்கள், நம்மை பெற்றவள் பெண், நமது சந்ததியை பெற்றுக்கொடுப்பவள் பெண், மனித வாழ்வில் தாய், மனைவி, மகள், சகோதரி என பல பாத்திரங்களில் நல்ல உறவாக இருப்பவளும் பெண். கங்கா, யமுனா, காவேரி என புண்ணிய நதியாக இருப்பவளும் பெண். வளர்ச்சிப் பாதையில் சமுதாயத்தை அழைத்து செல்லும் பெண்கள் பாதுகாப்போடு நடத்தப்பட வேண்டியது அவசியமாகும். இதற்காக, பெண் கல்வி, பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் அவர்களது நல்வாழ்வை மேம்படுத்தல் என்பனவற்றுக்கு முக்கியமளித்து உலகளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்வுகள் மற்றும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையில், 1978ஆம் ஆண்டு முதல் மகளிர் தினக் கொண்டாட்டம் இடம்பெற்று வருவதோடு, அதன் பின்னர் ஒவ்வொரு வருடமும், வெவ்வேறு கருப்பொருளை மையப்படுத்தி கொண்டாட்டம் இடம்பெற்று வருகிறது. இலங்கை தற்போது பல்வேறு சமூக மற்றும் பொருளாதார சவால்களை எதிர்கொண்டுள்ள போதிலும், நாட்டிலுள்ள பெண்கள் தொடர்ச்சியாக வலிமை மற்றும் மீளெழுச்சித்தன்மையை வெளிப்படுத்தி முன்னோக்கி பயணிப்பதன் மூலம், மரியாதையையும் பாராட்டையும் பெறுகின்றனர். அந்த வகையில், இவ்வருட மகளிர் தினமானது இலங்கைப் பெண்களின் குறிப்பிடும் படியான சாதனைகளை கௌரவிக்கும் பொருட்டு 'பெண்களில் முதலீடு செய்யுங்கள்: முன்னேற்றத்தை துரிதப்படுத்துங்கள்" எனும் கருப்பொருளின் கீழ் கொண்டாடப்படுகின்றது.

பாலின சமத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பெண்களின் சாதனைகளைக் கொண்டாடவும், நேர்மறையான மாற்றத்திற்காக வாதிடவும் இந்த நாள் கொண்டாடப்படுகின்றது. உலகெங்கிலும் உள்ள பெண்களின் பங்களிப்பை அங்கீகரித்து, அனைத்துப் பெண்களையும் உள்ளடக்கி சமத்துவமான சமூகத்தை நோக்கிச் செயற்பட இது ஒரு வாய்ப்பாகும். உலகளாவிய இயக்கத்தில் இணைந்து, பெண்களின் உரிமைகள் மற்றும் அதிகாரமளித்தலுக்கு ஆதரவளிக்க நடவடிக்கை எடுக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையால் இத்தினம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. புவிசார் அரசியல் மோதல்களுடன் நாட்டில் நிலவும் வறுமை நிலைகள் மற்றும் பருவநிலை மாற்றத்தின் அதிகரித்து வரும் தாக்கங்கள் வரை பல நெருக்கடிகளை உலகம் எதிர்கொள்கிறது. பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் தீர்வுகளால் மட்டுமே இந்த சவால்களை எதிர்கொள்ள முடியும். பெண்களில் முதலீடு செய்வதன் மூலம் நாம் மாற்றத்தைத் தூண்டலாம். மேலும், அனைவருக்கும் ஆரோக்கியமானதும், பாதுகாப்பானதுமான சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் பெண்களை சமமான உலகத்தை நோக்கி நகர்த்துவதன் மூலம் மாத்திரமே சமூக மாற்றத்தை துரிதப்படுத்தலாம். 2030ஆம் ஆண்டுக்குள் 342 மில்லியனுக்கும் அதிகமான பெண்கள் மற்றும் சிறுமிகள் தீவிர வறுமையில் வாழலாம் என ஐ.நா அறிக்கை குறிப்பிடுகிறது. பெண்களின் தேவைகளுக்கேற்ப முன்னுரிமைகள் பரிசீலிக்கப்படுவதை உறுதிசெய்ய, ஒவ்வொரு நாட்டு அரசாங்கமும் கட்டாயமாக பெண்களின் பாலினம் சார்ந்த நிதியுதவிக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

அத்துடன் நாட்டுப் பெண்களின் அத்தியாவசிய சேவைகளையும், சமூகப் பாதுகாப்பிற்கான பொதுச் செலவினங்களையும் அதிகரிக்க வேண்டும். ஊதியம் மற்றும் ஊதியம் பெறாத பராமரிப்புப் பணியின் மூலம் உலகெங்கிலும் உள்ள பொருளாதாரத்திற்கு பெண்கள் செய்யும் முக்கிய பங்களிப்பை ஒவ்வொருவரும் மதிப்பது மட்டுமின்றி அங்கீகரிக்கவும் வேண்டும். ஏனெனில் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் மூன்று மடங்கு அதிக நேரத்தைச் சம்பளமில்லாத பராமரிப்புப் பணிகளில் செலவிடுகின்றனர். மேலும், இந்தச் செயற்பாடுகளுக்கு குறித்த தொகை ஒதுக்கப்பட்டால் அவர்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 40 சதவீதத்திற்கும் அதிகமாகக் கணக்கிடப்படுவர். பெண்களில் முதலீடு செய்வது, பாலின சமத்துவத்தை ஊக்குவிப்பது முதலான செயற்பாடுகள் சமுதாயத்தில் உள்ள அனைவருக்கும் வளமான எதிர்காலத்தை உருவாக்குகிறது.

இலங்கையில் பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் தலைமைத்துவத்தைக் கொண்டாடும் வகையில், இலங்கையின் பெண்கள் தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனம், மகளிர் தலைமைத்துவ மன்றத்துடன் இணைந்து இவ்வருடத்தில் பல செயற்திட்டங்களை வழங்கத் தயாராகி வருகிறது. இது "InspireInclusion Count Her In " எனும் கருப்பொருளில் இன்று மார்ச் 14, 2024 நடைபெறவுள்ளது. மேலும், கொழும்பு ஜப்பான் அரசாங்கம் இணைந்து ஐ.நா ஆதரவுடன் 2023 /2027 காலப்பகுதிக்காக வெளியிட்ட பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு தொடர்பான அதன் முதல் தேசிய செயற்திட்டத்தை இலங்கை ஏற்றுக்கொண்டுள்ளது.

பெண்கள் மீது காட்டப்படும் பாகுபாடு என்பது மனித உரிமை மீறல்களில் ஒன்றாக கருதப்படுகிறது. இந்த பாகுபாடு பெண்கள் மீது சுமத்தப்படும் மாபெரும் தடையாகும். பெண்களின் துணையுடனேதான் பல சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அமைதியான குடும்ப சூழல், பொருளாதார வளர்ச்சி, சீரான முன்னேற்றத்திற்கு பெண்களின் பங்களிப்பு ஒவ்வொரு குடும்பம் முதல் சர்வதேச சமூகம் வரையும் தேவைப்படுகிறது. சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பு துறைகளை வலுப்படுத்த பெண்களின் பங்கு தேவைப்படுகிறது. அந்தவகையில் மேரி கியூரி, புளோரன்ஸ் நைட்டிங்கேள், ஔவையார், அன்னை தெரேசா, ராணி லக்ஷ்மிபாய், சாவித்ரிபாய் பூலே, ஆனந்திபாய் ஜோஷி, சரோஜினி நாயுடு, விஜய லட்சுமி பண்டிட், கமலா தேவிசட்டோபாத்யாய், நீதிபதி அன்னா சாண்டி, சுசேத்தா கிரிப்லானி, கிட்டுர் சென்னம்மா, பூலான்தேவி, அனுலாதேவி, இந்திராகாந்தி, கல்பனா சாவ்லா என சாதனைப் பெண்களின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது எனலாம்.

சர்வதேச ரீதியில் பல்துறைகளிலும் பெண்களின் சாதனைகள் போற்றத்தக்கது. காவல் துறை, சட்டத்துறை, அரசியல் துறை, தகவல் தொடர்புத் துறை, மருத்துவத் துறை, போக்குவரத்துத் துறை, விளையாட்டுத் துறை, வணிகத் துறை உட்பட அனைத்து துறைகளிலும் இன்று பெண்கள் உயர் பதவிகளை வகித்து திறம்பட செயல்படுகின்றனர். போக்குவரத்து துறையிலும் பெண் ஓட்டுனர்கள் வந்து விட்டனர். வேளாண்மை துறையிலும் பெண்கள் பங்களிப்பு உள்ளமை சிறப்புக்குரியதாகும்.

உலகை மாற்றிய சக்தி வாய்ந்த நூறு பெண்களின் பட்டியலில் அறிவியல் புலத்தில் மிக அரிதான சாதனை படைத்தவராக மேரி கியூரி அம்மையார் குறிப்பிடப்படுகின்றார். சிறுவயதில் இலங்கை சிறுமி ஒருவர் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார்.

அறிவியலில் சாதனை படைத்த ஏழு இந்தியப் பெண் விஞ்ஞானிகள் பெண்ணினத்தின் வரலாற்றை மாற்றி அமைத்துள்ளார்கள். அறிவியலில் எட்டச் சாத்தியம் இல்லாதவைகளாக கருதப்பட்ட உச்சத்தையும் பெண்கள் எட்டியுள்ளனர். நோபல் பரிசு வென்றது முதல் நாசாவிற்கு செல்வது வரையிலும் தங்களது பெயர்களை பதித்துள்ளனர் பெண்கள். ஆணாதிக்கத்துக்கு மத்தியிலும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பிரிவுகளில் சாதனையும் படைத்துள்ளனர்.

கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் இலங்கைப் பெண்கள் கணிசமான முன்னேற்றங்களை அடைந்துள்ள நிலையிலும், அமைச்சுக்கள், திணைக்களங்கள், அமைப்புக்கள் என பல இயங்குநிலைகளில் பெண்களின் உரிமைகள் இன்னும் மறுக்கப்படுவதையும், அவர்களின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தப்பட்டு வருவதையும் காண முடிகிறது. பெண்களின் முன்னேற்றம் நாட்டின் எதிர்காலத்திற்கும், ஜனநாயக சமுதாயத்தை தோற்றுவிப்பதற்கும் அவசியமாகிறது. நாட்டின் வறுமையை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சியில் பெண்களின் முன்னேற்றமே பேசும் பொருளாக உள்ளது. கொவிட் தொற்றுநோய், புவிசார் அரசியல் மோதல்கள், காலநிலைப் பேரழிவுகள் மற்றும் பொருளாதாரக் கொந்தளிப்பு ஆகியவற்றின் தாக்கமானது 2020ஆம் ஆண்டிலிருந்து 75 மில்லியன் மக்களைக் கடுமையான வறுமைக்குள் தள்ளியுள்ளது. இயந்திரமயமான சமுதாயத்தில் பெண்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள அனுபவ அறிவையும் பெற வேண்டும். ஒவ்வொரு குடும்பத்திலும் பிள்ளைகளின் பிறப்பு முதல் பெண்களின் முக்கியத்துவத்தை ஒவ்வொரு பெற்றோரும் தம் பிள்ளைகளிடத்தில் விதைக்க வேண்டும்.

**கந்தசாமி அபிலாஷ், BEd**

# தினகரனின் 92ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு 92 பிரமுகர்கள் கௌரவிப்பு






மலையகம் 200 ஞாபகார்த்தமாக தேசமான்ய உமா தீபனை தலைவராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இலங்கை இந்திய நட்புறவு ஒன்றியத்தினால் தினகரன் பத்திரிகையின் 92ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு கண்டி கெப்பிட்டிபொல மண்டபத்தில் அண்மையில் 92 பிரமுகர்கள் கௌரவிக்கப்பட்ட நிகழ்வின்போது பிடிக்கப்பட்ட படங்கள்.
(படங்கள் : நாவலப்பிட்டி, மாவத்தகம குறூப் நிருபர்கள்)







## இலங்கை புகையிரத சேவைகள்

## விலைமனுக்கோரல்

**வடக்கு புகையிரத பாதை மற்றும் பதுளை புகையிரத பாதைக்கு கைகளால் இயக்கப்படும் நுழைவாயில் தடைகாப்புகளை வழங்கல், நிறுவல், பரிசோதனை மற்றும் செயற்படுத்தலுக்கான விலைமனுக்கோரல்**

**IFB இலக்கம் - SRS F. 7997**

1. கொழும்பு இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள கொள்வனவுக் குழுவின் தவைரினால் வடக்கு புகையிரத பாதை மற்றும் பதுளை புகையிரத பாதைக்கு கைகளால் இயக்கப்படும் நுழைவாயில் தடைகாப்புகளை வழங்கல், நிறுவல், பரிசோதனை மற்றும் செயற்படுத்தலுக்கான விலைமனுக்கோரல் செயற்படுத்தலுக்காக வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் / வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
2. கேள்விகோரல் **தேசிய போட்டி நடைமுறை மூலம் நடத்தப்படும் (NCB)**
3. ஆர்வமுள்ள மனுதாரர்கள் 2024.03.14 ஆம் திகதி முதல் 2024.04.04 ஆம் திகதி வரை **வாரத்தில் வேலைநாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 வரையான காலத்திற்குள்** கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் **மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 வரை** மேலதிக தகவல்கள் மற்றும் மனு ஆவண பரிசீலனையினை செய்ய முடியும்.

   பிரதிப் பொது முகாமையாளர் (கொள்முதல்),
   புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,
   ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.
   தொலைபேசி இல : **+94(11) 2438078,** அல்லது **+94(11) 2436818**
   தொலைநகல் இல : **+94 (11) 2432044**
   மின்னஞ்சல் : **srs.slr@gmail.com**
   இணையத்தளம் : **www.railway.gov.lk**

4. பின்வரும் தகுதிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றைப் பூர்த்தி செய்வதன் மூலம் இதேபோன்ற திட்டங்களைச் செயல்படுத்துவதில் நிபுணத்துவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
   a. கடந்த 15 ஆண்டுகளில் இலங்கை புகையிரத சேவைக்கு புகையிரத கடவை வீதி பாதுகாப்பு அமைப்பை வழங்கியிருத்தல்.
   b. கடந்த 5 ஆண்டுகளில் கோரல் விலையை இலங்கை புகையிரத சேவைக்கு குறைந்தபட்சம் ஒப்பந்த மதிப்பு சமமாகவோ அல்லது அதிகமானதாகவோ இருக்கும் வகையில் மின்சார / இயந்திர கருவிகள் / அமைப்புகளை வழங்கியிருத்தல்.
   c. மனுதாரர் கடந்த 5 ஆண்டுகளில் கோரல் விலையை விட அதிக ஒப்பந்த மதிப்பு சமமாகவோ அல்லது அதிகமானதாகவோ இருக்கும் வகையில் இலங்கை புகையிரத சேவைக்கு சிவில் கட்டுமான அனுபவத்தினை கொண்டிருத்தல்.
   d. மனுதாரர் கடந்த 5 ஆண்டுகளில் ஐந்து வருடங்களுக்கும் மேலாக உலோகத் தயாரிப்பு மற்றும் / அல்லது உலோகத் தயாரிப்புகளை நிறுவுவதில் அனுபவம் பெற்றிருப்பதுடன் மற்றும் கடந்த ஐந்து ஆண்டுகளில் கோரல் விலையை விட குறைவான மதிப்புள்ள உலோகத் தயாரிப்பு நிறுவல் செயற்திட்டமொன்றினை வெற்றிகரமாக நிறைவேற்றியிருத்தல்.
5. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.03.14** ஆம் திகதி முதல் **2024.04.04** ஆம் திகதி **பி.ப.3.00** மணிக்கு மீளச்செலுத்தப்படாத **ரூ.29,450/-** கொள்முதல் கட்டணத்தை செலுத்தி எழுத்துப்பூர்வமாக விண்ணப்பித்து **புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு, இலங்கை புகையிரத சேவைகள், ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10** எனும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
6. அனைத்து மனுக்களுக்கும் மனுப்பாதுகாப்புடன் சமர்ப்பித்தல் வேண்டும். மனுப் பாதுகாப்புத் தொகையாக **ரூ.1,630,000.00** இருத்தல் வேண்டும், மேலும் இலங்கையில் இயங்கும் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதமாக இருத்தல் வேண்டும்.
7. மனுக்கள் **2024.04.05** ஆம் திகதி **பி.ப.2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்** கீழே உள்ள முகவரியில் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கும் சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றலாம். தாமதமான மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

   தலைவர்,
   திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),
   புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,
   இலங்கை புகையிரத சேவைகள்,
   ஓல்கொட் மாவத்தை,
   கொழும்பு 10.

தலைவர்,
**திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),**
**இலங்கை புகையிரத சேவைகள்.**
கொள்முதல் இல. **SRS/F.7997**

SELACINE

## மேல் மாகாண மேல் நீதிமன்றம் கொழும்பு அமர்வு.
## (குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும்)

இல. 199, கிவ் வீதி (Kew Road),
கொழும்பு 02 இன்
CROPWIZ (PRIVATE) LIMITED
விடயம் தொடர்பாக.

**-ஒடுக்கப்பட கோரும் கம்பனி-**

-மற்றும்-

2007 ஆம் ஆண்டின் 07ம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் பாகம் XII இன் கீழாக நீதிமன்றத்தின் மூலம் ஒடுக்கப்படுவதற்கான விண்ணப்பம்

வழக்கு இல: HC/Civil/16/2024/CO
தன்மை : ஒடுக்கல்(Winding up)
நடவடிமுறை: சுருக்கமுறை
பெறுமதி : ரூபா.38,545,548/-

**C.I.C. AGRI BUSINESS (PRIVATE) LIMITED**
3ம் மாடி, இல.199, கிவ் வீதி,
கொழும்பு 02.

-மனுதாரர்-

இத்தால் அறிவிக்கப்படுவது யாதெனில் கொழும்பு குடியியல் மேல் நீதிமன்றத்தால் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட கம்பனியானது ஒடுக்கப்படுவதற்கான மனுவொன்று கொழும்பு 02, கிவ் வீதி, இல.199, 3ம் மாடி ஐச் சேர்ந்த சி.ஐ.சி அக்ரி பிஸ்னஸ்) (பிரைவேட்) லிமிட்டெட் கம்பனி (C.I.C AGRI BUSINESSES (PRIVATE) LIMITED] இனால் 2024ம் ஆண்டு பெப்ரவரி 22ம் திகதியன்று குறித்த நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் குறித்த மனுவானது 2024ம் ஆண்டு மார்ச் 28ம் திகதியன்று நீதிமன்றில் கேட்கப்படுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளது என்பதோடு குறித்த மனு தொடர்பாக ஆக்கப்படும் கட்டளைக்கு ஆதரவு அல்லது எதிர்ப்பு தெரிவிக்க விரும்பும் குறித்த கம்பனியினது கடன்கொடுனர் அல்லது பங்குதாரர்கள் கேட்பின்போது தாமாகவோ அல்லது அந்நோக்கத்திற்காக அவரது சட்டவுரைஞர் அல்லது பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி மூலம் தோன்றலாம் என்பதுடன் யாரேனும் அல்லது கம்பனியின் கடன்கொடுநர் அல்லது குறித்த கம்பனியின் பங்குதாரரினால் தேவைப்படுத்தப்படும்போது மனுவின் பிரதியொன்று அதற்கெனக் குறித்துரைக்கப்பட்ட கொடுமதியைச் செலுத்துவதன் மீது, கீழே கையொப்பமிட்டிருப்பவரினால் வழங்கப்படும்.

கையொப்பமிடப்பட்டுள்ளது: M/s. பால் ரத்னாயக்க அசோசியேட்ஸ்
(Paul Ratnayeke Associates)
சட்டத்தரணிகள், நொத்தாரிசுகள்
மற்றும் சொலிசிற்றர்கள்.
இல.59, கிறெகரி வீதி (Gregory's Road),
கொழும்பு 07.

குறிப்பு: குறித்த மனுவினது கேட்பில் தோன்றும் நோக்கமுடைய யாரேனும் நபர் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட பால் ரத்னாயக்க அசோசியேட்ஸ் சட்டத்தரணிகள் (Paul Ratnayeke Associates, Attorneys-at-Law) இற்கு அவ்வாறு செய்வதற்கான அவரது எண்ணத்தினை எழுத்து மூலமான அறிவித்தலை சேர்ப்பிக்க வேண்டும் அல்லது தபாலில் அனுப்புதல் வேண்டும். 1939ம் ஆண்டின் கம்பனிகள் ஒடுக்கப்படல் விதிகளினுடைய படிவம் 9 இல் குறித்துரைக்கப்பட்டதற்கமைவான அறிவித்தலானது, நபரினுடைய பெயர் மற்றும் முகவரி அல்லது ஒரு நிறுவனமாயின் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரியைக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் நபரினால் அல்லது நிறுவனத்தினால் அல்லது அவரின் அல்லது அவர்களின் சட்டத்தரணியினால் (யாரேனும் காணப்படின்) கையொப்பமிடப்பட வேண்டும் மற்றும் கடன்கொடுனராயின் கடன் நிலுவைத் தொகை மற்றும் பங்குதாரராயின் வைத்துள்ள பங்குகளின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். குறித்த அறிவித்தலானது சேர்க்கப்படும்போதோ அல்லது தபாலில் அனுப்பப்படும்போது வழமையான தபால் அனுப்பப்படும்போது 27ம் திகதி மார்ச் 2024ம் ஆண்டு பிற்பகல் 6.00 மணிக்கு முதல் கிடைக்கப்பெறும் வகையில் தபால் கிடைக்கக்கூடியவாறு நேரத்தை ஒழுங்கமைத்து அனுப்பப்படல் வேண்டும் அல்லது சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**பால் ரத்னாயக்க அசோசியேட்ஸ் (Paul Ratnayeke Associates)**
**மனுதாரருக்கான பதிவுபெற்ற சட்டத்தரணிகள்.**




கண்டி மகியாவ ஸ்ரீ காட்டுமாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற மகா சிவாரத்திரி சிறப்பு பூஜை.... ( படங்கள்: மகியாவ மு . தீபன் )

## திடீரென தீப்பற்றி எரிந்த மோட்டார் சைக்கிள்

**புசல்லாவை தினகரன் நிருபர்**

கண்டி வத்தேகம நகரில் அமைந்துள்ள வாகனங்கள் பழுதுபார்க்கும் தனியார் நிலையமொன்றில் பழுதுபார்ப்பதற்காக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளொன்று திடீரென தீப்பற்றி எரிந்தது. தீயைக்கட்டுப்படுத்த விரைந்து செயற்பட்ட நிலையத்தின் உரிமையாளர் தீக்காயங்களுக்கு உள்ளானதோடு வியாபார நிலையத்தல் கடமை புரிந்த ஊழியர்கள் வேகமாக செயற்பட்டு மேலும் தீப்பரவாமல் கட்டுப்படுத்தினர். இடைநடுவின் செயலிழந்த வாகனத்தை பழுது பார்க்க வந்தவர்கள் குறிப்பிட்ட நிலையத்தில் நிறுத்தி வைத்து அதனை இயக்க முற்பட்டபோதே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.



இலங்கை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளருமான சிவாஜிலிங்கம் உடல் நலமில்லாமல் சென்னை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். செய்தி அறிந்த விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன் சந்தித்து நலம் விசாரித்தார்.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# இலங்கை புகையிரத சேவைகள்

## விலைமனுக்கோரலுக்கான திகதி நீடிப்பு

**இலங்கை புகையிரத பாதைக்கு எஞ்சின் இயக்கும் மின்கலங்கள் S 10 வகுப்பில் டீசல் மல்டிபிள் யூனிட்டுக்கான (ALKALINE) அல்கலைன் மின்கலங்கள் 495 இனை கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்கோரல்.**

**IFB இலக்கம் - SRS F.7877**

மேற்குறிப்பிடப்பட்டுள்ள மனுத்தொடர்பாக **2024.01.18** ஆம் திகதி பிரசுரமான பத்திரிகை விளம்பரத்திற்கு கூடுதலாக ஒப்பந்த விதிமுறைகளில் சில திருத்தங்கள் சேர்க்கப்பட்ட காரணமாக மனுக்கள் ஏற்றுக்கொள்ளளும் இறுதி / திறக்கப்படும் திகதி நீட்டிக்கப்பட்டுள்ளது என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. திருத்தப்பட்ட மனுக்கள் ஏற்றுக்கொள்ளளும் இறுதி / திறக்கப்படும் திகதி பின்வறுமாறு:

- **மனுக்கள் ஏற்றுக்கொள்ளளும் இறுதி / திறக்கப்படும் திகதி – 2024.04.02 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு**

ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.04.01** ஆம் திகதி **பி.ப.3.00 (இலங்கை நேரப்படி)** மணிக்கு திருத்தம் செய்யப்பட்ட ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்கோரலின் ஏனைய நிபந்தனைகள் மற்றும் நேரம் மற்றும் இடத்தில் எவ்வித திருத்தமும் செய்யப்படவில்லை.

மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள

**பிரதிப் பொது முகாமையாளர் (கொள்முதல்),**
**புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,**
**ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.**
**தொலைபேசி இல : 94(11) 2438078, 94(11) 2436818**
**தொலைநகல் இல : 94 (11) 2432044**
**மின்னஞ்சல் : srs.slr@gmail.com**
**இணையத்தளம் : www.railway.gov.lk**

**தலைவர்,**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),**
**இலங்கை புகையிரத சேவைகள்.**
**கொள்முதல் இல.: SRS/F.7877**

SELACINE

# இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்
## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

### விலைமனுக்களுக்கான அழைத்தல்

| ஒப்பந்தப் பெயர் |
|---|
| வித்தியாலயம் வீதி கட்டைபறிச்சான் மூதூர் - மேம்படுத்தல் |
| ஸ்ரீ நாகதம்பிரான் கோவில் வீதி பங்குல நான்காம் வழி இன் மேம்படுத்தல் |
| செல்வநாயகபுரம் பிரதான 2 ஆம் ஒழுங்கையின் கொன்கிறீட் வீதியின் மேம்படுத்தல் |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைகளுக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2024.03.14 ஆம் திகதியிலிருந்து 2024.03.26 ஆம் திகதி வரையும் **www.rda.gov.lk** என்ற வீஅஅ மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணைய பக்கத்தை பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிரதான பொறியியலாளரின் அலுவலகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை, திருகோணமலை.**

# இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்
## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### விலைமனுக்களுக்கான அழைத்தல்

| ஒப்பந்தப் பெயர் |
|---|
| மட்டக்களப்பு மாவட்டத்தில் மாரப்பலம் கிறவல் வீதியின் மேம்படுத்தல் |
| மட்டக்களப்பு மாவட்டத்தில் கட்டம்-02, சேனைக்குடியிருப்பு, செங்கலடி உள்ளக வீதியின் கொன்கிறீட் நடைபாதை |
| மட்டக்களப்பு மாவட்டத்தில் கட்டம்-02 மயிலம்பாவெளி காமாட்சிநகர் உள்ளக வீதியின் கொன்கிறீட் நடைபாதை |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைகளுக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2024.03.14 ஆம் திகதியிலிருந்து 2024.03.22 ஆம் திகதி வரையும் **www.rda.gov.lk** என்ற வீஅஅ மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணைய பக்கத்தை பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**மாகாண பெறுகைக் குழு (கி.மா),**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**மட்டக்களப்பு.**

# இலங்கை புகையிரத சேவைகள்

## விலைமனுக்கோரல்

**திருக்கோணமலை புகையிரத பாதை மற்றும் மட்டக்களப்பு புகையிரத பாதைக்கு கைகளால் இயக்கப்படும் நுழைவாயில் தடைகாப்புகளை வழங்கல், நிறுவல், பரிசோதனை மற்றும் செயற்படுத்தலுக்கான விலைமனுக்கோரல்**

**IFB இலக்கம் - SRS F. 7998**

1. கொழும்பு இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள கொள்வனவுக் குழுவின் தவைரினால் **திருக்கோணமலை புகையிரத பாதை மற்றும் மட்டக்களப்பு புகையிரத பாதைக்கு கைகளால் இயக்கப்படும் நுழைவாயில் தடைகாப்புகளை வழங்கல், நிறுவல், பரிசோதனை மற்றும் செயற்படுத்தலுக்கான விலைமனுக்கோரல் செயற்படுத்தலுக்காக** வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் / வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
2. கேள்விகோரல் **தேசிய போட்டி நடைமுறை மூலம் நடத்தப்படும் (NCB)**
3. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.03.14** ஆம் திகதி முதல் **2024.04.04** ஆம் திகதி வரை **வாரத்தில் வேலைநாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 வரையான காலத்திற்குள்** கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் **மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 வரை** மேலதிக தகவல்கள் மற்றும் மனு ஆவண பரிசீலனையினை செய்ய முடியும்.

   **பிரதிப் பொது முகாமையாளர் (கொள்முதல்),**
   **புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,**
   **ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.**
   **தொலைபேசி இல : +94(11) 2438078, அல்லது +94(11) 2436818**
   **தொலைநகல் இல : +94 (11) 2432044**
   **மின்னஞ்சல் : srs.slr@gmail.com**
   **இணையத்தளம் : www.railway.gov.lk**

4. பின்வரும் தகுதிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றைப் பூர்த்தி செய்வதன் மூலம் இதேபோன்ற திட்டங்களைச் செயல்படுத்துவதில் நிபுணத்துவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
   a. கடந்த 15 ஆண்டுகளில் இலங்கை புகையிரத சேவைக்கு புகையிரத கடவை வீதி பாதுகாப்பு அமைப்பை வழங்கியிருத்தல்.
   b. கடந்த 5 ஆண்டுகளில் கோரல் விலையை இலங்கை புகையிரத சேவைக்கு குறைந்தபட்சம் ஒப்பந்த மதிப்பு சமமாகவோ அல்லது அதிகமானதாகவோ இருக்கும் வகையில் மின்சார / இயந்திர கருவிகள் / அமைப்புகளை வழங்கியிருத்தல்.
   c. மனுதாரர் கடந்த 5 ஆண்டுகளில் கோரல் விலையை விட அதிக ஒப்பந்த மதிப்பு சமமாகவோ அல்லது அதிகமானதாகவோ இருக்கும் வகையில் இலங்கை புகையிரத சேவைக்கு சிவில் கட்டுமான அனுபவத்தினை கொண்டிருத்தல்.
   d. மனுதாரர் கடந்த 5 ஆண்டுகளில் ஐந்து வருடங்களுக்கும் மேலாக உலோகத் தயாரிப்பு மற்றும் / அல்லது உலோகத் தயாரிப்புகளை நிறுவுவதில் அனுபவம் பெற்றிருப்பதுடன் மற்றும் கடந்த ஐந்து ஆண்டுகளில் கோரல் விலையை விட குறைவான மதிப்புள்ள உலோகத் தயாரிப்பு நிறுவல் செயற்திட்டமொன்றினை வெற்றிகரமாக நிறைவேற்றியிருத்தல்.
5. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.03.14** ஆம் திகதி முதல் **2024.04.04** ஆம் திகதி **பி.ப.3.00** மணிக்கு மீளச்செலுத்தப்படாத **ரூ.26,000/-** கொள்முதல் கட்டணத்தை செலுத்தி எழுத்துப்பூர்வமாக விண்ணப்பித்து **புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு, இலங்கை புகையிரத சேவைகள், ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10** எனும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
6. அனைத்து மனுக்களுக்கும் மனுப்பாதுகாப்புடன் சமர்ப்பித்தல் வேண்டும். மனுப் பாதுகாப்புத் தொகையாக **ரூ.1,400,000.00** இருத்தல் வேண்டும், மேலும் இலங்கையில் இயங்கும் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதமாக இருத்தல் வேண்டும்.
7. மனுக்கள் **2024.04.05** ஆம் திகதி **பி.ப.2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்** கீழே உள்ள முகவரியில் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கும் சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றலாம். தாமதமான மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

**தலைவர்,**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),**
**புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**ஓல்கொட் மாவத்தை,**
**கொழும்பு 10.**

**தலைவர்,**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),**
**இலங்கை புகையிரத சேவைகள்.**
**கொள்முதல் இல. SRS/F.7998**

SELACINE

The Housewives' companion
Classifieds on
Daily News

LAKE HOUSE REST
KATARAGAMA



No matter whether you are on pilgrimage, holiday or business, the Lake House Lodge in the City of God Skanda is your ideal place to stay for a few days with your whole family. Inviting and affordably priced (rates start from just Rs.1,500/- during the non-peak season), the Lake House Lodge is centrally located in the heart of Kataragama with easy access to the Kiri Vehera, **Kataragama Devalaya** and the Central Bus Stand.

**Air Conditioned Rooms with Hot Water**

**Double Room - Rs.5,800/- | Luxury Room - Rs.6,800/-**
Rates start from just Rs. 1,500/- during the non-peak season.
* 10% Discount will be offered only for Double Rooms and Luxury Rooms

LAKE HOUSE **0112429429 / 0472235291 / Priyantha - 0778666743**

# INVITATION FOR BIDS (IFB)

## DEPARTMENT OF LOCAL GOVERNMENT NORTHERN PROVINCE

## VALIKAMAM NORTH PRADESHIYA SABHA

## LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a **grant** from the **European Union** towards the cost of **Local Development Support Project** and intends to apply part of the proceeds of this **grant** to payments under the Contract for Work as described below.
2. The **Chairman, Provincial Project Procurement Committee (PPPC)** on behalf of the **Valikamam North Pradeshiya Sabha** now invites sealed bids from eligible and qualified bidders for the work as described below.

| No. | Contract No. | Contract Name | Employer's Estimated Cost (Rs. Mn) | CIDA Grade & Speciality | Contract Period (Days) | Bid Security Amount (Rs.) | Bid Validity Period up to | Bid Security Validity Period up to |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/JAF/VNPS/2024/PT3/02 | Reconstruction of Ikkiranai Road at Mallakam | 24.55 | C6 or above Higway Constructions | 112 | 370,000.00 | 18 Jun 2024 | 16 Jul 2024 |

3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty and grade as stated above with the Construction Industry Development Authority (CIDA).
5. Qualification requirements to qualify for contract award are included in Section 5 (Bidding Data and Contract Data) in the Bidding Document.
6. Interested bidders may obtain further information from **Secretary, Valikamam North Pradeshiya Sabha, Kollankaladdy, Kankesanthurai, Jaffna (T.P No: 0212241130, Fax No: 0212243688)** and inspect the bidding documents at **Valikamam North Pradeshiya Sabha, Kollankaladdy, Kankesanthurai, Jaffna** from **14-Mar-2024** until **2-Apr-2024** between **09:00 Hrs and 15:00 Hrs** on normal working days.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Secretary, Valikamam North Pradeshiya Sabha, Kollankaladdy, Kankesanthurai, Jaffna** from **14-Mar-2024** until **2-Apr-2024** between **09:00 Hrs and 15:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee of Rs.7,500.00.The method of payment will be **by cash.**
8. Bids shall be delivered in duplicate to **Chairman, Provincial Project Procurement Committee (PPPC), Local Development Support Project (LDSP), Department of Local Government (NP), Elders' Home Complex, Kaithady** at or before **14.00 Hrs** on **3-Apr-2024.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. All bids shall be accompanied by a **Bid Security** as stated in the Table above.

**Chairman,**
**Provincial Project Procurement Committee (PPPC),**
**Local Development Support Project (LDSP),**
**Department of Local Government (NP),**
**Elders' Home Complex, Kaithady.**
14-Mar-2024

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

Repeat Your Ad For Better Offers

## நோன்புப் பெருநாள் சந்தைகடைத் தொகுதி வழங்கல்
## புத்தளம் நகர சபை

நோன்புப் பெருநாளை முன்னிட்டு புத்தளம் நகர சபையினால் 2024.04.08 மற்றும் 09 ஆம் திகதிகளில் நோன்புப் பெருநாள் சந்தை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த கடைத் தொகுதிக்கான முன்பதிவுகள் 2024.04.06 ஆம் திகதி காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மண வரை புத்தளம் நகர சபையில் நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு - 032 22 65275

**ஏல்.பீ.ஜீ. பிரீதிகா,**
**செயலாளர்,**
**புத்தளம் நகர சபை,**
2024.03.14

## சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி
## பகிரங்க ஏல விற்பனை

சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி மூலம் பெற்றுக்கொண்ட தங்கக் கடனில் ஈடு வைக்கப்பட்ட கால எல்லைக்குள் பணத்தை செலுத்தத் தவறியதால், அந்தத் தங்கக் கடன் வசதிக்காக பத்திரங்களாக அடமானம் வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள் கீழ் குறிப்பிடப்பட்ட திகதிகளில் மு.ப. 10.00 க்கு பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

திகதி மற்றும் ஏல விற்பனை இடம்

திகதி : **25/03/2024**
இல.343, மாத்தளை வீதி, தம்புள்ளை.
இல.328, ரஜின சந்தி, தம்புத்தேகம.
இல.05, மைத்திறிபால சேனநாயக்க மாவத்தை, அநுராதபுரம்.
இல.80, யாழ்ப்பாணம் வீதி, மதவாச்சி.
இல.28, 30, இரண்டாம் குறுக்குத் தெரு, வவுனியா.
இல.86, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
இல.462/A, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
A 9 வீதி, கரடிபோக்கு சந்திக்கு அருகில், கிளிநொச்சி.
இல.15, அலகு 07, துன்னாலை வீதி, நெல்லியடி.
இல.34, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.
இல.498, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 03.
இல.163C/1/1, கொழும்பு வீதி, நீர்கொழும்பு.
விக்டோரி கட்டிடம், சிலாபம் வீதி, வென்னப்புவ.
இல.179/1/1, ஹெட்டிபொல வீதி, குளியாப்பிட்டி.
இல.65, மாஹவ வீதி, நிக்கவரட்டி
இல.42, மிஹிந்து மாவத்தை, குருணாகல்
இல.140/B, கொழும்பு வீதி, குருணாகல்.
இல.311/J, ரன்வல சந்தி, கேகாலை.
இல.103/C, நீர்கொழும்பு வீதி, கிரியுள்ள.

திகதி : **26/03/2024**
இல.14, மங்கல வீதி, கம்பஹா.
இல.837E, தலங்கம வடக்கு, மாலபே.
இல.579, காலி வீதி, வெள்ளவத்தை.
இல.348, காலி வீதி, பாணந்துறை.
இல.362, கோட்டை வீதி, ராஜகிரிய.
இல.34, ஹொரன வீதி, பிலியந்தல.
இல.188, பிலியந்தல வீதி, மஹரகம.
இல.173, இரத்தினபுரி வீதி, ஹொரன.
இல.16, ஹைலெவல் வீதி, ஹோமாகம.
இல.546, காலி வீதி, தெற்கு களுத்துறை, களுத்துறை.
இல.29, ஸ்டேசன் வீதி, தெஹிவளை.
இல.30A, நாவல வீதி, நுகேகொட.
இல.106/1, துட்டுகெமுனு வீதி, கொஹுவளை.

திகதி : **27/03/2024**
இல.64, மாகொல வீதி, கிரிபத்கொடை.
இல.493, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
இல.120, நீர்கொழும்பு வீதி, ஜாஎல
இல.143 J, கண்டி வீதி, கடவத்த.
இல.310/2A, ஜோர்ஜ் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 13.
இல.49, சைமன்ட்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10.
இல.115/1, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய.
முத்துகுமாரண கட்டிடம், கீழ் வீதி, திஸ்ஸமகாராம.
இல.46/1/1, கொழும்பு வீதி, கலுவெல்ல, காலி.
இல.01, அநகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை.
இல.103, டி.எஸ் சேனநாயக்க மாவத்தை, அம்பாறை.
இல.131, நுவரெலிய வீதி, கம்பளை.
இல.271/1, 1ஆவது மாடி, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி.
இல.186. டி.எஸ். சேனநாயக்க மாவத்தை, கண்டி.
இல.18/2, பதியதலாவ வீதி, மஹியங்கனை.
இல.80, கண்டி வீதி, நுவரெலியா.

எந்த ஒரு முன் அறிவித்தலும் இன்றி ஏல விற்பனையை இரத்துச் செய்வது அல்லது ஒத்திவைக்கும் உரிமை சிங்கர் பினான்ஸ் (லங்கா) நிறுவனத்தின் வசமானதாகும்.

தங்கக் கடன் முகாமையாளர்
**SINGER FINANCE**
இல. 498, ஆர்.ஏ.டி மேல் மாவத்தை, கொழும்பு 03.

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## பெறுகை அறிவித்தல்
# ஹோமாகம பிரதேச சபை

**ஹோமாகம பிரதேச சபைக்கு சொந்தமான ஹேனவத்த அரலிய லேண்ட்ஸ் பொதுக் காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கர்ப்பிணிகண் மற்றும் சிறுவர் சிகிச்சையக கட்டிடத்தின் மிகுதி வேலைகளைப் பூர்த்தி செய்தல்.**

01. இச் செயற்றிட்டம் மேல் மாகாண சபையின் மாகாண அபிவிருத்தி வழங்கல் மானியங்களின் கீழ் செயற்படுவதுடன் கீழ்க்காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களிடமிருந்து தேசியபோட்டி முறையின் கீழ் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இல | செயற்றிட்டத்தின் பெயர் | மதிப்பிடப் பட்ட தொகை (ரூ) | CIDA தரம் | ஒப்பந்தத்தின் கால எல்லை |
|---|---|---|---|---|
| 01 | ஹோமாகம பிரதேச சபைக்குச் சொந்தமான ஹேனவத்த அரலிய லேண்ட்ஸ் பொதுக்காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கர்ப்பிணிகள் மற்றும் சிறுவர் சிகிச்சைக் கட்டிடத்தின் மிகுதி வேலைகள் பூர்த்திசெய்தல் | 6 மில்லியன் (வெட் இன்றி) | C8, C7 அல்லது C6 | 120 நாட்கள் |

03. கேள்விதாரர்களால் ஹோமாகம பிரதேச சபையின் செயலாளருக்கு எழுத்துமூல வேண்டுதலை மேற்கொண்டு மீளளிக்கப்படாத ரூ. 5000.00 கட்டணத்தை செலுத்திய பின்னர் 2024.03.15 முதல் 2024.03.28 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான கால எல்லையில் கேள்வி ஆவணத் தொகுதியை பிரதேச சபையின் அபிவிருத்திப் பிரிவில் பெற்றுக்கொள்ளப்படும். இதுப்பற்றிய மேலதிக விபரங்களை வேலை அதிகாரி மூலம் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே. இலக்கம் 011-5633991)

04. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளுடன் (மூலப்பிரதி மற்றும் நகரப்பிரதியென) 2024.04.01 பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்குமுன் கிடைக்குமாறு ஹோமாகம பிரதேச சபையின் செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கடித உறையின் இடதுப்பக்க மேல் மூலையின் "ஹோமாகம பிரதேச சபைக்குச் சொந்தமான ஹேனவத்த அரலிய லேண்ட்ஸ் பொதுக்காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கர்ப்பிணிகள் மற்றும் சிறுவர் சிகிச்சையகக் கட்டிடத்தின் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்தல்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

05. கேள்விகள் ஏற்க்கப்படும் இறுதிநேரம் தாண்டியதுடன் வருகை தந்துள்ள கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் ஹோமாகம பிரதேச சபையின் முதலாம் மாடியின் கமிட்டி அறையில் கேள்விகள் திறக்கப்படும்.

06. சகல கேள்வி ஆவணங்களை சமர்ப்பிக்கும் போது மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத் தொகையாக ரூ. 60,000.00 தொகையை பிரதேச சபை தலைமையக அலுவலக் காசாளரிடம் காசாகச் செலுத்திய பற்றுச்சீட்டை அல்லது இலங்கை மத்திய வங்கியில் பதிவுசெய்த வங்கி மூலம் 2024.06.04 வரை செல்லுபடியாகுமாறு செயலாளர், ஹோமாகம பிரதேச சபை என்ற பெயருக்கு பெற்றுக்கொண்ட ரூ. 120,000.00 வங்கிப் பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

**கே.பீ.டீ. குமுதினிகுலதிலக்க,**
**செயலாளர்**
**பிரதேச சபை,**
**ஹோமாகம**

**தொ.பே. இல : 011-2855230**
**பெக்ஸ் இல : 011-2857169**
**திகதி : 2024.03.14**

# இலங்கை புகையிரத சேவைகள்
## விலைமனுக்கோரல்

**மத்திய/புத்தளம் புகையிர பாதையில் மற்றும் KVL/ கரையோர புகையிர பாதைக்கு கைகளால் இயக்கப்படும் நுழைவாயில் தடைகாப்புகளை வழங்கல், நிறுவல், பரிசோதனை மற்றும் செயற்படுத்தலுக்கான விலைமனுக்கோரல்**

**IFB இலக்கம் - SRS F. 7996**

1. கொழும்பு இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள கொள்வனவுக் குழுவின் தவைரினால் **மத்திய/புத்தளம் புகையிர பாதையில் மற்றும் KVL/ கரையோர புகையிர பாதைக்கு கைகளால் இயக்கப்படும் நுழைவாயில் தடைகாப்புகளை வழங்கல், நிறுவல், பரிசோதனை மற்றும் செயற்படுத்தலுக்காக** வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் / வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
2. கேள்விகோரல் **தேசிய போட்டி நடைமுறை மூலம் நடத்தப்படும் (NCB)**
3. மேலதிக தகவல்கள் மற்றும் மனு ஆவண பரிசீலனையினை **2024.03.14** ஆம் திகதி **2024.04.04** ஆம் திகதி **வேலைநாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 வரை** கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் செய்ய முடியும்.

   **பிரதிப் பொது முகாமையாளர் (கொள்முதல்),**
   **புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,**
   **ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.**
   **தொலைபேசி இல : +94(11) 2438078, அல்லது +94(11) 2436818**
   **தொலைநகல் இல : +94 (11) 2432044**
   **மின்னஞ்சல் : srs.slr@gmail.com**
   **இணையத்தளம் : www.railway.gov.lk**

4. பின்வரும் தகுதிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றைப் பூர்த்தி செய்வதன் மூலம் இதேபோன்ற திட்டங்களைச் செயல்படுத்துவதில் நிபுணத்துவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
   a. கடந்த 15 ஆண்டுகளில் இலங்கை புகையிரத சேவைக்கு புகையிரத கடவை வீதி பாதுகாப்பு அமைப்பை வழங்கியிருத்தல்.
   b. கடந்த 5 ஆண்டுகளில் கோரல் விலையை இலங்கை புகையிரத சேவைக்கு குறைந்தபட்சம் ஒப்பந்த மதிப்பு சமமாகவோ அல்லது அதிகமானதாகவோ இருக்கும் வகையில் மின்சார / இயந்திர கருவிகள் / அமைப்புகளை வழங்கியிருத்தல்.
   c. மனுதாரர் கடந்த 5 ஆண்டுகளில் கோரல் விலையை விட அதிக ஒப்பந்த மதிப்பு சமமாகவோ அல்லது அதிகமானதாகவோ இருக்கும் வகையில் இலங்கை புகையிரத சேவைக்கு சிவில் கட்டுமான அனுபவத்தினை கொண்டிருத்தல்.
   d. மனுதாரர் கடந்த 5 ஆண்டுகளில் ஐந்து வருடங்களுக்கும் மேலாக உலோகத் தயாரிப்பு மற்றும் / அல்லது உலோகத் தயாரிப்புகளை நிறுவுவதில் அனுபவம் பெற்றிருப்பதுடன் மற்றும் கடந்த ஐந்து ஆண்டுகளில் கோரல் விலையை விட குறைவான மதிப்புள்ள உலோகத் தயாரிப்பு நிறுவல் செயற்திட்டமொன்றினை வெற்றிகரமாக நிறைவேற்றியிருத்தல்.
5. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.03.14** ஆம் திகதி முதல் **2024.04.04** ஆம் திகதி **பி.ப.3.00** மணிக்கு மீளச்செலுத்தப்படாத **ரூ.24,800/-** கொள்முதல் கட்டணத்தை செலுத்தி எழுத்துப்பூர்வமாக விண்ணப்பித்து **புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு, இலங்கை புகையிரத சேவைகள், ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10** எனும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
6. அனைத்து மனுக்களுக்கும் மனுப்பாதுகாப்புடன் சமர்ப்பித்தல் வேண்டும். மனுப் பாதுகாப்புத் தொகையாக **ரூ.1,320,000.00** இருத்தல் வேண்டும், மேலும் இலங்கையில் இயங்கும் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதமாக இருத்தல் வேண்டும்.
7. மனுக்கள் **2024.04.05** ஆம் திகதி **பி.ப.2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்** கீழே உள்ள முகவரியில் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கும் சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றலாம். தாமதமான மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

   **தலைவர்,**
   **திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),**
   **புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,**
   **இலங்கை புகையிரத சேவைகள்,**
   **ஓல்கொட் மாவத்தை,**
   **கொழும்பு 10.**

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),
இலங்கை புகையிரத சேவைகள்.
கொள்முதல் இல. **SRS/F.7996**

SELACINE

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்
## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
### விலைமனுக்களுக்கான அழைத்தல்

| ஒப்பந்தப் பெயர் |
|---|
| சேனாநாயக்க உள்ளக வீதி, சேருயான உள்ளக வீதி, சாமிந்த தேவ மஹாத்தயாகே நிவச பார, அனுர நிவாச தக்வா மார்கய, அழககூன் மஹாத்தயாகே பராக்கிரம பார, புது பிலிமய அத்துள் மார்கய ஆகியவற்றின் மேம்படுத்தல். |
| நீல கராஜ் லங்க சிற்ற சுனில் மஹாத்தயாகே நிவச பார, சமகி மாவத்தை, அத்துரு மார்கய ஆகியவற்றின் மேம்படுத்தல் |
| ருவன் மீகிரி கடே லங்க இன் தேல சீலா லியனகே மாவத்தை பார சமகி புர மாவத்தை பார ஆகியவற்றின் மேம்படுத்தல் |
| தலகஸ் வீதி சுபோத்திங் மாவத்தை பார, தலகஸ் வெவ சாமிந்த மாவத்தை ஆகியவற்றின் மேம்படுத்தல் |
| யுகே நதீக்கா மஹாத்தயாகே நிவஸ பார இலிருந்து சுமத்திரத்ன பார, 91 சேனாதீர மஹத்தயாகே நிவச பார பாத்தியகம அட்டவனி பட்டுமக பார, ஜயந்திபுர, பன்சல பிரவேச மார்கய ரஜஎல லினட் மாவத்தபார ஆகியவற்றின் மேம்படுத்தல் |
| சங்கபோதிய மாத்தா 5 கொஸ்வத்த பார யூனிட் -05 விக்ரம பார ஆகியவற்றின் மேம்படுத்தல் |
| யூனிட் ஜயந்திபுர விக்ரம பார நிவஸ சீத்தா ஈ ஜி ஜெயபால பார ஆகியவற்றின் மேம்படுத்தல் |
| யூனிட் 3 பராரு சங்கபோ சமகி மாவத்தை பார போகஹவ சாதிய அசல சீத்தே வெல பார ஆகியவற்றின் மேம்படுத்தல் |
| விஜேவிக்ரம ஒழுங்கை பார ஜயந்திபுர பிஜி தனபால மஹாத்தயாகே நிவச பார |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைகளுக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2024.03.14 ஆம் திகதியிலிருந்து 2024.03.26 ஆம் திகதி வரையும் **www.rda.gov.lk** என்ற வீஅஅ மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணைய பக்கத்தை பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிரதான பொறியியலாளரின் அலுவலகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**திருகோணமலை.**

# கேள்விக்கான அழைப்பு
## மருத்துவ உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான கேள்வி கோரல் - 2024
## பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை, பொலன்னறுவ

பொலன்னறுவ பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் பெறுகைக்குழுவின் தலைவரால் கீழ்க்காணும் மருத்துவ மற்றும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக தகைமையுள்ள மற்றும் தகுதியுள்ள கேள்விதாரர்களிடமிருந்து தேசிய போட்டி கேள்வி சமர்ப்பிக்கும் முறையில் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**01 அலுவலக உபகரணங்கள்**

| தொ. இல. | உருப்படி | அளவு | கேள்விப் பிணைத் தொகை |
|---|---|---|---|
| 1. | Office table | 50 | 9,000.00 |
| 2. | Mid back chair | 100 | 20,000.00 |
| 3. | Steel glass cupboard | 20 | 10,000.00 |
| 4. | Desktop computer | 5 | 10,000.00 |
| 5. | Domestic refrigerator | 15 | 19,700.00 |
| 6. | Fiber pallet | 70 | 28,000.00 |
| 7. | Auditorium chair | 40 | 16,000.00 |
| 8. | Dot matrix printer | 05 | 1,500.00 |
| 9. | Polythene sealer | 10 | 3,000.00 |
| 10. | Portable sound system | 02 | 8,000.00 |
| 11. | Supply & installation of public addressing system | 01 | 30,000.00 |
| 12. | Shopping trolley | 15 | 4,500.00 |
| 13. | Reverse osmosis (RO) Plant for RDHS Office | 01 | 3,800.00 |

**02. மருத்துவ உபகரணங்கள்**

| தொ. இல. | உருப்படி | அளவு | கேள்விப் பிணைத் தொகை |
|---|---|---|---|
| 01 | Patient trolley | 20 | 20,000.00 |
| 02 | Wheel chair | 15 | 4,500.00 |
| 03 | Dressing trolley | 30 | 17,500.00 |
| 04 | Iv trolley | 30 | 17,500.00 |
| 05 | ECG Machine (3 Channel & 12 lead) | 06 | 12,000.00 |
| 06 | Multi Para - Monitor | 20 | 120,000.00 |
| 07 | Pneumatic tourniquet with cup (manual) | 02 | 4,000.00 |
| 08 | Electronic scale for lab | 03 | 12,000.00 |
| 09 | Postmortem tool bag | 04 | 2,450.00 |

1. தகைமையுள்ள சகல வழங்குநர்களுக்கும் கேள்வி விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம்.
2. ஒவ்வொரு உருப்படிக்கும் விலைமனுக்களை வேறுவேறாக சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி மாதிரிப் பத்திரக் கட்டணம் ஒரு உருப்படிக்காக ரூ. 1000.00 ஆகும். ஒரு உருப்படிக்காக ஒரு கேள்வியை மட்டுமே சமர்ப்பிக்கலாம். ஒரு விண்ணப்பத்திற்கும் பல விலைமனுக்களை சமர்ப்பிப்பதாயின் அக்கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
3. கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிக்கும் வேளையில் ஒரு உருப்படிக்கு வேறுவேறாக அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை மீளளிக்கப்படும் பிணையொன்றாக காசாக அல்லது இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து விநியோகிக்கப்படும் 2024.06.12 வரை செல்லுபடியாகும் வங்கிப் பிணையொன்றை வழங்குதல் வேண்டும்.
4. சகல விலைமனுக்களும் உள்ளிட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மருத்துவ உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களுக்கான விலைமனுக் கோரல் - 2024" என்று மற்றும் குறித்த உபகரணத்தின் பெயர் மற்றும் தொடர் இலக்கத்தைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பொது விபரங்கள்**

03. குறித்த கேள்விப் பத்திரங்கள் 2024.03.27 மு.ப. 10.00 இற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் **தலைவர், பெறுகைக்குழு, பிரதேச சுகாதார சேவைப் பணிமனை, பொலன்னறுவ** என்ற முகவரிக்கு அனுப்பலாம். அல்லது கணக்காளரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் கொண்டுவந்து உள்ளிடலாம். சகல விலைமனுக்களும் உள்ளிட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த உருப்படியின் பெயர் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.
04. 2024.03.14 முதல் 2024.03.26 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்வி மாதிரிப் பத்திரங்களை பொலன்னறுவை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் கணக்குப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். கேள்வி மாதிரிப் பத்திரங்களில் அமைவாக கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும். இதற்கான மேலதிக தகவல்கள் தேவைப்படின் தொ.பே. இல. 027-2223259 கணக்காளரை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.
05. கேள்விகளை சமர்ப்பிக்கும் போது மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி என்று குறிப்பிட்டு வேறுவேறு உறைகள் இரண்டில் இட்டு பொறியிட்டு இரு உறைகளையும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு அனுப்புதல் வேண்டும்.
06. இவ்விலைமனுக்கள் பற்றிய பெறுகைக்குழு மேற்கொள்ளும் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை,**
**பொலன்னறுவை.**

**For classified advertisements and for replies**
received in response to advertisements published under Lake House box numbers
+ 94 112429342
+ 94 112429343

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# வீதிகளுக்கிடையிலான போக்குவரத்து சேவை அதிகாரசபை, வடமத்திய மாகாணம்,

## கேள்வி கோரல் – 2024 / 2025

வட மத்திய மாகாண வீதிகளுக்கிடையிலான போக்குவரத்து சேவை அதிகாரசபையின் பெறுகைக் குழுவின் தலைவர் மற்றும் வட மத்திய மாகாண வீதிக்களுக்கிடையிலான போக்குவரத்துச் சேவை அதிகாரசபையின் தலைவரான என்னால் இவ் அதிகாரசபையின் கீழ் 2024/2025ம் ஆண்டுடன் சம்பந்தப்பட்ட கெக்கிராவ பஸ் நிலையம் அமைந்துள்ள மலசலகூட அமைப்பின் துப்புறவேற்பாட்டு வசதிகளை நடத்திச் செல்வதற்கு வடமத்திய மாகாணத்தில் பதிவாளர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| விபரம் | மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணம் | மீளளிக்கப்படும் பிணை வைப்பு | குறைந்தபட்ச கேள்வி | ஒப்பந்தக் காலம் |
|---|---|---|---|---|
| கெக்கிராவ பஸ் நிலைய மலசல கூட அமைப்பு | 5,000.00 | ரூ. 120,000.00 | ரூ. 1,200,000.00 | 2024.04.19 முதல் 2025.04.18 வரை |

1. கேள்வி விண்ணப்பங்கள் மற்றும் அறிவுறுத்தல் பத்திரங்களை 2024.03.14 முதல் 2024.04.03 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை அலுவலக தினங்களில் அநுராதபுரம் வித்யால மாவத்தையில் அமைந்துள்ள வீதிகளுக்கிடையிலான போக்குவரத்து சேவை அதிகாரசபையின் தலைமையகத்திற்கு வருகை தந்து ரூ. 5000.00 தொகையைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
2. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதுடன் சம்பந்தப்பட்ட மேலதிக விபரங்கள் மற்றும் கேள்வி நிபந்தனை விண்ணபத்துடன் விநியோகிக்கப்படும்.
3. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2024.04.04 பி.ப.2.00 இற்கு முன் கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டு வந்து பொது முகாமையாளரின் உத்தியோகப் பூர்வ அறையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
4. கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன், பொது முகாமையாளரின் உத்தியோகப்பூர்வ அறையில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது கேள்விதாரரின் பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
5. மாகாண வீதிகளுக்கிடையிலான போக்குவரத்து சேவை அதிகாரசபையினால் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்பட்டுள்ள குத்தகை கொள்வனவாளருக்கு இப் பெறுகைக்காக கலந்து கொள்ள முடியாது.
6. கேள்வி கோரல் மற்றும் வழங்குதல் சம்பந்தமான இறுதித் தீர்மானம் பெறுகைக் குழுவிற்கு உரியது.
7. இப் பெறுகை சம்பந்தமான மேலதிக விபரங்களை 025 - 2237941 பொது முகாமையாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வீதிகளுக்கிடையிலான போக்குவரத்து சேவை அதிகாரசபை,**
**வடமத்திய மாகாணம்.**

---

# இலங்கை பிக்ஷு பல்கலைக்கழகம் அநுராதபுரம்

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### இலங்கை பிக்ஷு பல்கலைக்கழகத்திற்கு பாதுகாப்பு சேவைகளை வழங்கல் 2024/2025

**(ஒப்பந்த இல.: BUSL/GAS/15/24/01)**

ஒரு (1)வருட காலத்திற்கு இந்த பல்கலைக்கழகத்திற்கு தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் 2024 ஆம் ஆண்டிற்காக பாதுகாப்பு அமைச்சிலிருந்து உரிமத்தைப் பெற்றுள்ள பதிவு பெற்ற வர்த்தக அமைப்புகளிலிருந்து இலங்கை பிக்ஷு பல்கலைக்கழக, பல்கலைக்கழக பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

ஆர்வமுள்ள விலைமனுதாரர் வேலை நாட்களில் 2024.04.04 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் இலங்கை பிக்ஷு பல்கலைக்கழகத்திற்கு பாதுகாப்பு சேவையை வழங்குவதற்காக மீளளிககப்படாத கட்டணமாக 3,500 ரூபாவை பல்கலைக்கழக சிறாப்பரிடம் செலுத்தி வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களை சமர்ப்பிப்பதன் மூலம் இலங்கை பிக்ஷு பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி பதிவாளரிடமிருந்து (பொது நிருவாகம்) விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். விலைமனுக்கோரல் ஆவணங்கள் பொது நிருவாகப் பிரிவிற்கு அழைத்தலொன்றை மேற்கொள்வதன் மூலம் அல்லது www.busl.ac.lk என்ற பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து 2024.03.14 ஆம் திகதியிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் தலைவர், பல்கலைக்கழக பெறுகைக் குழு, இலங்கை பிக்ஷு பல்கலைக்கழகம், புத்தளம் வீதி, அனுராதபுரம் என முகவரியிடப்பட்டு பதிவுத் தபாலில் 2024.04.05 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டுமென்பதுடன் அத்துடன் விலைமனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள விலைமனு பிணைத் தொகையுடன் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்களை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''Invitation for Bids Provision of Security Services at Bhiksu University of Sri Lanka 2024-2025|" என குறிப்பிடப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்கள் அவைகளின் மூடும் நேரத்தின் பின்னர் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் அல்லது விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் 2024.04.05 ஆம் திகதியன்று அனுராதபுரம், இலங்கை பிக்ஷு பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும்.

விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று 2024.03.27 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு இலங்கை பிக்ஷு பல்கலைக்கழக பேரவை அறையில் நடைபெறுமென்பதுடன் விலைமனுதாரர் விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு அவர்களின் சொந்த செலவிலேயே சமுகமளிக்கலாம்.

மேலதிக தகவலை 025-2050695 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக வேலை நாட்களில் இலங்கை பிக்ஷு பல்கலைக்கழக பொது நிருவாகத்திற்கான சிரேஷ்ட உதவி பதிவாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பல்கலைக்கழக பெறுகைக் குழு,**
**இலங்கை பிக்ஷு பல்கலைக்கழகம்,**
**புத்தளம் வீதி, அனுராதபுரம்.**
**14.03.2024.**

---

The Housewives' companion
Classifieds on
Daily News

Repeat Your ad For Better Offers

---

# 1964 இலக்கம் 28 ஐக் கொண்ட காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் 7(I)ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்.

எனது குறிப்பிலக்கம் : KDS/HAR/4/2/2/41

சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் குறிப்பிலக்கம் : 4-3/16/2018/UDA/223

இங்கு கீழ் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணியை அரசாங்கத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 2024 ஜனவரி மாதம் 19ஆம் திகதி இலக்கம் 2367/17 கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகைகளைப் பார்க்கவும்.

**உப அட்டவணை**

| | |
|---|---|
| பிரதேச செயலாளர் பிரிவு | : ஹாரிஸ்பத்துவ |
| கிராமம் | : கடுகஸ்தொட்டை, எட்டமுருங்காகொட |
| அமைவிடம் | : மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவில், குழுகம்மன சியபத்துவ சிறு பிரிவில், இலக்கம் 413 - கடுகஸ்தொட்ட கிராம சேவகர் பிரிவில் கடுகஸ்தொட்ட கிராமம், இலக்கம் 414 - எட்டமுருங்காகொட கிராம சேவகர் பிரிவில், எட்டமுருங்காகொட கிராமம். |
| காணியின் பெயர் | : கல்கானேகும்புற, தேவயலாகொட்டுவ, கலகாவகும்புற என்றழைக்கப்படும் கலகஹகும்புற, நவம்பேழ கும்புற என்றழைக்கப்படும் கல்கானகும்புற, கல்அங்கே கும்புற, கல்கஹகும்புரேவத்த. |
| கடத்திரல் வரைபட இலக்கம் | : இலக்கம் 320495, இலக்கம் 320315 |
| காணித்துண்டு இலக்கம் | : இலக்கம் 320495 இல் பிரிவு இலக்கம் 01 இல் பத்திர இலக்கம் 2 இல் துண்டு இலக்கம் 1, பிரிவு இலக்கம் 01 இல் பத்திர இலக்கம் 1 இல் துண்டு இலக்கம் 3, 4, 5, 6, 7, 10, 11, 12, 15, 16, 17, 18, 19, 20, 21, 23, 24, 25, 26, 29, 30, 31, 32, 33, 36, 37 மற்றும் இலக்கம் 320315 இல் பிரிவு இலக்கம் 01 இல் பத்திர இலக்கம் 5 இல் துண்டு இலக்கம் 2, 3, 4, 5, 6, 7, 8, 9,பிரிவு இலக்கம் 01 இல் பத்திர இலக்கம் 1 இல் துண்டு இலக்கம் 45, 46, 47, 48, 49, 50, 51. |

**மொஹான் தர்மதாச**
**பிரதேச செயலாளர்**
**ஹாரிஸ்பத்துவ.**

**2024.02.29**
**பிரதேச செயலாளர் காரியாலயம்**
**ஹாரிஸ்பத்துவ**
**நுகவெல.**

---

## கேள்வி அறிவித்தல்

# இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் மிஹிந்தலை

### 24 ஆவது பொது பட்டமளிப்பிற்காக நிழற்படமெடுத்தல் சேவையை வழங்கல்

**IFB No.: RUSL/CONV24/2024**

2024 ஜுன் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் நடைபெறுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மிஹிந்தலை, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் 24 ஆவது பொது பட்டமளிப்பிற்கான நிழற்படமெடுத்தல் சேவையை வழங்குவதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

கேள்வியானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறைகளின் மூலம் நடத்தப்படும். விலைமனுதாரர் நிழற்படமெடுத்தலில் ஆகக் குறைந்தது ஐந்து வருட அனுபவத்தைக் கொண்டிருப்பதுடன் குறிப்பிட்ட காலப்பகுதியில் ஆகக் குறைந்தது மூன்று (3) பட்டமளிப்பு விழாக்களை 1500 இற்கு குறையாத பட்டதாரிகளுக்கு பிரதான சேவை வழங்குநராக விளங்கியதுடன் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவுமிருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ள சாரார் மேலதிக தகவலை 025-2266780 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்று கேள்வி ஆவணங்களை 2024.04.04 ஆம் திகதியன்று வரையும் வார நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பரீட்சைகள் மற்றும் கல்விசாராருக்கான பிரதி பதிவாளரின் அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

விலைமனு முன்னோடிக் கூட்டமானது 2024.03.21 ஆம் திகதியன்று மு.ப. 9.30 மணிக்கு மிஹிந்தலை, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக பிரதான கேட்போர் கூடத்தில் நடைபெறுவதுடன் உங்கள் பங்குபற்றுதல் பெரிதும் பாராட்டப்படும்.

தகுதியுள்ள விலைமனுதாரர் எழுத்து மூலமான கோரிக்கையொன்றுடன் ஐந்தாயிரம் ரூபாவை (5000 ரூபா) மீளளிக்கப்படாத கட்டணமாக அனுராதபுர மக்கள் வங்கிக் கிளையில் செயற்படும் 008-1-001-1725841 என்ற கணக்கிலக்கத்திற்கு மிஹிந்தலை, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பெயரில் வரவு வைக்கப்படலாம் அல்லது இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக சிறாப்பரிடம் ரொக்கப் பணத்தில் வரவு வைக்கப்படலாம். கேள்வி ஆவணம்/ஆவணங்கள் வேலை நாட்களில் 2024.04.04 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் வழங்கப்படும்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு முத்திரையிடப்பட்டு கேள்வியின் பெயரான IFB No. RUSL/CONV24/2024 மற்றும் மூடும் திகதி ஆகியன தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு 2024.04.05 ஆம் திகதியன்று பிப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், மிஹிந்தலை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மிஹிந்தலை, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், பிரதான நிருவாக கட்டிடம், 2 ஆம் மாடியிலுள்ள பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கள் கேள்விகளை சமர்ப்பிப்பதற்கான இறுதி நேரத்தின் பின்னர் உடனடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்/ பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமான கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.

திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானவே இறுதி தீர்மானமாகும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்,**
**மிஹிந்தலை.**
**14.03.2024.**

---

### 1964 இலக்கம் 28 ஐக் கொண்ட காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் 7 (i) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்.

**எனது குறிப்பிலக்கம் :-**
**KDS/TUM/04/01/01/10**

இங்கு கீழ் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணியை அரசாங்கத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2360/57 கொண்ட 2023 நவம்பர் மாதம் 30 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்தமானப் பத்திரிகைகளைப் பார்க்கவும்.

**உப அட்டவணை**

மாகாணம் - மத்திய
மாவட்டம் - கண்டி
பிரதேச செயலாளர் பிரிவு - தும்பனை
கிராமம் - பாங்அங்க
காணியின் பெயர் - நாரங்அத்த

அடிப்படை வரைபட இலக்கம் - க.வ 321296/01/01

காணியின் அளவு : - ஹெக். 0.0229

**காணி எடுத்தல் அதிகாரி,**
**பிரதேச செயலாளர்**

**பிரதேச செயலாளர் காரியாலயம்**
**தும்பனே கலகெதர**
**திகதி - 2024-03-04**

---


# வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| 15 -3XXX | TOYOTA | COROLLA KE72V | 1983 |
| 018 -3XXX | HONDA | CIVIC | 1992 |
| **வேன்** | | | |
| 051 -0XXX | TOYOTA | CR26V | 1984 |
| 252 -4XXX | MITSUBISHI | DELICA P15V | 1993 |
| JG -0XXX | HYUNDAI | GRACE | 2000 |
| **லொறி** | | | |
| GK -3XXX | MITSUBISHI | CANTER | 1995 |
| LD -5XXX | ISUZU | FREEZER TRUCK | 2001 |
| PP -6XXX | TATA | ACE | 2010 |
| PR -2XXX | TATA | ACE | 2011 |
| PT -1XXX | MAHINDRA | MAXXIMO | 2012 |
| PV -5XXX | TATA | ACE EX | 2013 |
| PW -2XXX | DFSK | EQ1020DR | 2013 |
| DAA -0XXX | TATA | SUPER ACE | 2014 |
| DAD -4XXX | TATA | ACE X PRESS CDI | 2016 |
| **டிப்பர்** | | | |
| LH -3XXX | LANKA ASHOK LEYLAND | COMMET TIPPER 1613 | 2010 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| HD -9XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| HT -0XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| JC -7XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| JM -7XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| QG -5XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QL -2XXX | PIAGGIO | APE | 2007 |
| QP -8XXX | BAJAJ | AUTO AR4S | 2008 |
| QX -1XXX | BAJAJ | AR4S-UG | 2010 |
| YA -8XXX | BAJAJ | AR4S-UG | 2010 |
| YM -4XXX | BAJAJ | RE 205 | 2011 |
| AAB -6XXX | BAJAJ | RE205 | 2012 |
| AAO -6XXX | BAJAJ | RE | 2014 |
| **துவிச்சக்கர வண்டிகள்** | | | |
| BEE -4XXX | BAJAJ | PULSAR 150AS | 2015 |
| BDM-1XXX | BAJAJ | PULSAR 150 UG4.5 | 2016 |
| BEO -9XXX | BAJAJ | AVENGER STREET 150 | 2016 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2024 மார்ச் 14ஆம், 15ஆம், 18ஆம் மற்றும் 19ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2024 மார்ச் 19ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.

www.skillsads.com

மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

Mercantile Investments and Finance PLC

தொடர்பு:
ஜானக்க - 071 1624559 / மொதித - 071 9530350

# ஜப்பானிய கிரிக்கெட்டை வளர்க்க இலங்கை கிரிக்கெட் சபை உதவி

ஜப்பான் கிரிக்கெட்டை மேம்படுத்துவதற்கு இலங்கை கிரிக்கெட் மற்றும் ஜப்பான் கிரிக்கெட் சம்மேளனத்திற்கு இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.



இந்த உடன்படிக்கையின் கீழ் ஜப்பான் கிரிக்கெட்டுக்கு உதவும் வகையில் வீரர்கள், அணிகள், பயிற்சியாளர்கள் மற்றும் பொறுப்பாளர்களை அனுப்ப இலங்கை கிரிக்கெட் சபை இணங்கியுள்ளது.

டி20 போட்டிகளில் ஆடுவதற்காக ஜப்பானுக்கு அணிகளை இலங்கை கிரிக்கெட் சபை அனுப்பவிருப்பதோடு ஜப்பான் கிரிக்கெட் அணிகளையும் இலங்கையில் ஆடுவதற்கு வாரவேற்கவுள்ளது. இதன்போது லங்கா பிரீமியர் லீக் அணிகளுடன் ஜப்பான் வீரர்கள் பயிற்சி பெறவும் வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

இலங்கை கிரிக்கெட் தலைவர் ஷம்மி சில்வா மற்றும் ஜப்பான் கிரிக்கெட் சம்மேளனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி நோக்கி அலெக்ஸ் மியாஜி இடையே இலங்கை கிரிக்கெட் தலைமையகத்தில் இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதாக இலங்கை கிரிக்கெட் சபை குறிப்பிட்டுள்ளது.

## புனிதர்களின் சமருக்கு டயலொக் அனுசரணை



இலங்கையின் முன்னணி இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, மதிப்புமிக்க இரு கத்தோலிக்க கல்லூரிகளான புனித ஜோசப் கல்லூரி மற்றும் புனித பீட்டர்ஸ் கல்லூரிகளுக்கிடையிலான 90ஆவது புனிதர்களின் சமருக்கு இம்முறையும் பிரதான அனுசரணை வழங்குகிறது.

இந்தப் போட்டி எதிர்வரும் மார்ச் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் முதல் இன்னிங்ஸ் 60 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டு நடைபெறுவதால், போட்டியில் முடிவொன்றை எட்டும் வாய்ப்பு அதிகமாக உள்ளது.




## தொடர்ச்சியான வெற்றிகளுடன் அல் ஹிலால் உலக சாதனை

முன்னிலை கால்பந்து அணி ஒன்று தொடர்ச்சியாக அதிக வெற்றிகளைப் பெற்ற சாதனையை சவூதி அரேபியாவின் ப்ரோ லீக் அணியான அல் ஹிலால் முறியடித்துள்ளது.



அல் இட்டிஹாட் அணிக்கு எதிராக நேற்று முன்தினம் (12) நடந்த ஆசிய சம்பியன்ஸ் லீக் காலிறுதிப் போட்டியில் 20 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியதன் மூலமே அல் ஹிலால் இந்த சாதனையை படைத்தது. இது அல் ஹிலால் அணி தொடர்ச்சியாகப் பெறும் 28 ஆவது வெற்றியாக இருந்தது.

இதன்மூலம் தொடர்ச்சியாக 27 வெற்றிகளைப் பெற்று 2016 ஆம் ஆண்டு வெல்ஷ் அணியான நியூ செயின்ட்ஸ் படைத்திருந்த சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது. கடந்த செப்டெம்பர் 21 ஆம் திகதி நடைபெற்ற டமக் அணிக்கு எதிரான போட்டியை 1–1 என சமன் செய்தது தொடக்கம் அல் ஹிலால் அணி ஆடிய அனைத்துப் போட்டிகளிலும் தொடர்ந்து வெற்றியீட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொதுநலவாய போட்டிக்கு கைகொடுத்தது மலேசியா

பொதுநலவாய விளையாட்டுப் போட்டியை 2026ஆம் ஆண்டு எடுத்து நடத்த 100 மில்லியன் யூரோ வழங்கப்பட்டுள்ளதாக மலேசியா கூறியுள்ளது.



அவுஸ்திரேலியாவின் விக்டோரிய மாநிலம் கடந்த ஆண்டு (2023) ஜூலை மாதம் செலவுகளைக் காரணம் காட்டி போட்டியை ஏற்று நடத்துவதிலிருந்து விலகியது. அதைத் தொடர்ந்து பொதுநலவாய விளையாட்டு சம்மேளனம்போட்டியைஎடுத்துநடத்தநாட்டைத் தேடியது. 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் பொதுநலவாய விளையாட்டுப் போட்டி கடைசியாக 2022ஆம் ஆண்டி பிர்மிங்ஹாமில் நடைபெற்றது.

'பொதுநலவாய விளையாட்டுப் போட்டியை 2026ஆம் ஆண்டில் ஏற்று நடத்த மலேசியாவுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது' என்று மலேசியாவின் ஒலிம்பிக் மன்றம் குறிப்பிட்டது. மலேசியாவில் கடைசியாக பொதுநலவாய விளையாட்டுப் போட்டி 1998ஆம் ஆண்டு நடைபெற்றது. வாழ்வில் ஒரு முறை வரும் வாய்ப்பு இது என்று மலேசியாவின் பொதுநலவாய விளையாட்டுகளின் சங்கம் குறிப்பிட்டது.

உலக விளையாட்டு வரைபடத்தில் மலேசியாவை மீண்டும் இடம்பெறச் செய்ய இந்த வாய்ப்பு உதவும் என்று கூறப்பட்டது.



கிழக்கு மாகாணத்தில் இலங்கை வங்கியில் கடமையாற்றும் உத்தியோத்தர்கள் இடையில் மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தல் அண்மையில் (9) நடைபெற்ற விளையாட்டுப் போட்டியின்போது பிடிக்கப்பட்ட படத்தினை காணலாம்.

(படம்: மாளிகைக்காடு குறூப் நிருபர்)

## 4 ஆண்டுகளில் இல்லாத சிறுவர்கள் காசாவில் பலி

காசா போரில் உயிரிழுந்த சிறுவர்களின் எண்ணிக்கை உலக அளவில் கடந்த 4 ஆண்டுகளில் நிகழ்ந்த சண்டைகளில் பலியான பிள்ளைகளை விட அதிகம் என்று பலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாட்டு நிறுவன அமைப்பு கூறுகிறது.



2019ஆம் ஆண்டுக்கும் 2022ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் உலக அளவில் நிகழ்ந்த சண்டைகளில் 12,193 பிள்ளைகள் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த ஆண்டு (2023) ஒக்டோபரிலிருந்து இந்த ஆண்டு (2024) பெப்ரவரி வரை காசாவில் 12,300க்கும் அதிகமான பிள்ளைகள் பலியானதாக அறிக்கை கூறுகிறது.

'இது சிறார் மீது நடத்தப்படும் போர். அவர்களின் குழந்தைப் பருவத்தின் மீதும் வருங்காலத்தின் மீதும் நடத்தப்படும் போர்' என்று ஐக்கிய நாட்டு நிறுவனம் தெரிவித்தது.

# சர்வதேச செய்திகள்

## அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் டிரம்ப்–பைடனின் போட்டி உறுதி

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் தமது கட்சியின் வேட்பாளராக போட்டியிடுவதற்கான பிரதிநிதிகளின் எண்ணிக்கையை ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் அவரது முன்னாள் போட்டியாளரான டொனால்ட் டிரம்ப் வென்றுள்ளனர்.



நான்கு மாநிலங்கள், அமெரிக்க நிலப்பகுதி ஒன்று மற்றும் வெளிநாட்டில் வாழும் ஜனநாயக கட்சியினர் நேற்று முன்தினம் (12) வாக்களித்த முன்னோடித் தேர்தலில் ஜோ பைடன் வெற்றியீட்டியுள்ளார்.

இதன்போது பைடன் தமக்குத் தேவையான 1,968 பேராளர்களைப் பெற்றுவிட்டார் என்று அறிவிக்கப்பட்டது. சில மணி நேரத்துக்குப் பின் டிரம்ப் அவருக்குத் தேவையான 1,215 பேராளர் எண்ணிக்கையை அடைந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன்மூலம் 2020 ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட இரு வேட்பாளர்களுமே இம்முறை தேர்தலிலும் போட்டியிடவுள்ளமை உறுதியாகியுள்ளது.

இந்த கோடை காலத்தில் இடம்பெறவுள்ள கட்சி மாநாடுகளில் இருவரும் வேட்பாளராக போட்டியிடுவது உத்தியோகபூர்வமாக உறுதி செய்யப்படவுள்ளது.

அமெரிக்க வரலாற்றில் 70 ஆண்டுகளில் முதல் முறையாகவே முன்னாள் ஜனாதிபதிகள் இருவர் தேர்தலில் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் நியமனத்தை வென்ற பின் பைடன் அறிக்கை வெளியிட்டார். அதில், டிரம்ப்பின் பிரசாரங்கள், வெறுப்பும், பழிவாங்கும் உணர்வும் கொண்டவை என்றும் அவை அமெரிக்காவின் அடித்தளத்தையே மிரட்டக்கூடியவை என்றும் குறைகூறினார்.

வேட்பாளர்கள் உறுதியாகிவிட்டதால் மிக நீண்டகாலத் தேர்தல் பிரசாரமாக இது அமையப் போகிறது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் நவம்பர் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# வடக்கு காசாவுக்கு புதிய தரைவழி பாதையில் ஐ.நா. உதவி விநியோகம்

## ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன பகுதிகளில் பதற்றம் அதிகரிப்பு



காசாவில் இஸ்ரேலின் தாக்குதல் தொடரும் சூழலில் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கும் வடக்கு காசாவுக்கு கடந்த மூன்று வாரங்களில் முதல் முறையாக ஐக்கிய நாடுகள் அமைப்பு புதிய தரைவழி பாதை ஒன்றை பயன்படுத்தி உணவு விநியோகத்தை மேற்கொண்டுள்ளது.

உலக உணவுத் திட்டத்தின் ஆறு லொறிகள் காசா எல்லை வேலியின் வாயில் ஒன்றின் வழியாக வடக்கு காசாவை சென்றடைந்ததாக இஸ்ரேலிய இராணுவம் கூறியது.

காசாவில் பஞ்சம் ஒன்று ஏற்படுவதற்கான அச்சுறுத்தலுக்கு மத்தியில் அந்தப் பகுதிக்கான உதவிகளை அனுமதிப்பதற்கு இஸ்ரேலுக்கு அழுத்தங்கள் அதிகரித்து வரும் நிலையிலேயே இந்த உதவி விநியோகம் இடம்பெற்றுள்ளது.

காசா போரில் பட்டினி ஓர் ஆயுதமாக பயன்படுத்தப்படுவதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிநாட்டுக் கொள்கைகளுக்கான தலைவர் ஜோசப் பெரல் குறிப்பிட்டிருந்தார். அந்தப் பகுதிக்கு போதுமான உதவிகள் செல்லாதது மனிதனால் உருவாக்கப்பட்ட அனர்த்தம் என்று அவர் சுட்டிக்காட்டி இருந்தார்.



ஐ.நா பாதுகாப்புச் சபையில் கடந்த செவ்வாய்க்கிழமை பேசியபோதே பெரல் இதனைத் தெரிவித்தார்.

'சமூகம் ஒன்றே உயிருக்காக போராடும் நிலையை நாம் எதிர்கொண்டுள்ளோம். காசாவுக்கு மனிதாபிமான உதவிகள் செல்ல வேண்டி இருப்பதோடு அதனை சாத்தியப்படுத்தும் பொருட்டு ஐரோப்பிய ஒன்றியம் முடியுமான வரை பணியாற்றுகிறது' என்று குறிப்பிட்டார்.

200 தொன் உணவு உதவிகளை ஏற்றிய தொண்டு நிறுவனத்தின் கப்பல் ஒன்று சைப்ரஸில் இருந்து காசாவை நோக்கிய பயணத்தை ஆரம்பித்துள்ளது. அந்தக் கப்பல் இன்று (14) காசாவை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காசா கடற்கரையில் குறிப்பிடப்படாத இடத்தில் இந்தக் கப்பலில் இருந்து உதவிப் பொருட்களை பெறுவதற்கு இறங்கு துறை ஒன்றை குறித்த தொண்டு அமைப்புடன் தொடர்புபட்ட பலஸ்தீனர்கள் அமைத்து வருவதாக கூறப்படுகிறது.

மறுபுறம் காசா கடற்கரையில் உதவி விநியோகத்திற்கான தற்காலிக துறைமுகம் ஒன்றை அமைப்பதற்கான உபகரணங்களை ஏற்றிய அமெரிக்க இராணுவக் கப்பல் ஜெனரல் பிரான்க் எஸ் பெசம் மத்திய கிழக்கை நோக்கி பயணித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும் அவசர தேவையை நாடி இருக்கும் காசா மக்களுக்கு விரைவாக உதவிகளை வழங்குவதற்கு தரைவழி பாதையே விரைவானது என்று கருதப்படுகிறது.

இந்நிலையில் காசா எல்லை வேலி வழியாகச் செல்லும் இஸ்ரேலிய இராணுவப் பாதை ஒன்றை பயன்படுத்தி உலக உணவுத் திட்டம் வடக்கு காசாவில் 25,000 மக்களுக்கு போதுமான உணவு உதவிகளை எடுத்துச் சென்றதாக ஐ.நா கூறியது.

காசா மக்கள் தொகையில் கால் பங்கினரான குறைந்தது 576,000 பேர் பஞ்சம் ஒன்றை நெருங்கி இருப்பதாக ஐ.நா தெரிவித்தது.

வடக்கு காசாவில் கிட்டத்தட்ட 300,000 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ள சூழலில் இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக்கு மத்தியில் அவர்களை அணுகுவதில் பல மாதங்களாக போராட்டம் நீடிக்கும் சூழலில் காலம் தீர்ந்து வருவதாக எச்சரிக்கப்பட்டு வருகிறது. இங்கு போர் நீடிப்பதோடு சமூக ஒழுங்கும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் காசாவில் ஊட்டச்சத்து குறைபாட்டினால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 27 ஆக அதிகரித்திப்பதாக உலக உணவுத் திட்டம் குறிப்பிட்டுள்ளது. இவர்களில் பெரும்பாலானவர்கள் குழந்தைகளாவர்.

### காசாவுக்கு அப்பால் பதற்றம்

காசாவில் தொடர்ந்தும் இஸ்ரேலின் தாக்குதல்கள் நீடிக்கும் நிலையில் தெற்கில் குண்டு சத்தங்கள் கேட்டதாக அங்குள்ள ஏ.எப்.பி. செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் கடந்த செவ்வாய் இரவு தொடக்கம் இடம்பெற்ற தாக்குதல்களில் மேலும் 70 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

காசா நகரின் டல் அல் ஹவா பகுதியில் நேற்றுக் காலை இஸ்ரேல் வீசிய குண்டுகளில் சிறுவர்கள் உட்பட ஐந்து பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது.

காசா போர் நேற்றுடன் 159 ஆவது தினத்தை எட்டிய நிலையில் அங்கு கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 31,272 ஆக அதிகரித்துள்ளது.

முஸ்லிம்களின் புனித ரமழான் மாதம் ஆரம்பித்த நிலையில் ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு ஜெரூசலம் மற்றும் மேற்குக் கரையில் பதற்றம் அதிகரித்துள்ளது.

ஆக்கிரமிக்கப்பட்ட ஜெரூசலத்தின் வடமேற்கு பகுதியில் உள்ள அல் ஜிப் சிறு நகருக்கு அருகில் இஸ்ரேலியப் படை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 16 வயது பலஸ்தீன சிறுவன் ஒருவனும் 23 வயது இளைஞர் ஒருவரும் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் மூலம் மூவர் காயமடைந்துள்ளனர்.

முன்னதாக ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் ஷுவாபத் அகதி முகாமில் ரமி ஹம்தான் அல் ஹுல்ஹுலி என்ற 13 வயது சிறுவன் இஸ்ரேலிய படையினரால் சுட்டுக் கொள்ளப்பட்டிருப்பதாக பலஸ்தீன செய்திகள் தெரிவிக்கின்றன.

அந்தச் சிறுவன் பட்டாசு ஒன்றை தலைக்கு மேல் உயர்த்தி நின்றிருந்தபோது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருப்பது சி.என்.என். தொலைக்காட்சி வெளியிட்ட வீடியோவில் தெரிகிறது. அப்போது தனது கையில் இருந்த பட்டாசு வெடிக்கும் அதேநேரம் சிறுவன் கீழே விழுவது தெரிகிறது.

மறுபுறம் மேற்குக் கரை மற்றும் ஜெரூசலத்திற்கு இடையிலான சோதனைச்சாவடி ஒன்றுக்கு அருகில் நேற்று இடம்பெற்ற கத்திக்குத்து தாக்குதலில் இரு இஸ்ரேலிய படையினர் காயமடைந்துள்ளனர்.

சோதனைச்சாவடிக்கு சைக்கிளில் வந்த 15 வயது சிறுவனை சோதனைக்கு உட்படுத்த முற்பட்டபோது அந்தச் சிறுவன் கத்தியை எடுத்து தாக்க ஆரம்பித்ததாக இஸ்ரேலிய பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இஸ்ரேலிய பாதுகாப்பு படை அந்தத் தாக்குதல்தாரியை சுட்டுக் கொன்றதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதேநேரம் இஸ்ரேல் மற்றும் லெபனான் எல்லையிலும் மோதல் அதிகரித்துள்ளது. தெற்கு லெபனானில் உள்ள பலஸ்தீன அகதி முகாம் ஒன்றுக்கு அருகில் கார் வண்டி ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டதாக ரோய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. இதில் தமது உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டதை ஹமாஸ் உறுதி செய்துள்ளது.

காசாவில் போர் வெடித்தது தொடக்கம் லெபனானின் ஹிஸ்பல்லா அமைப்பு மற்றும் இஸ்ரேல் இடையே தினசரி மோதல் நீடித்து வருகிறது. அது தொடக்கம் லெபனானில் இஸ்ரேலின் தாக்குதல்களில் குறைந்தது 54 பொது மக்கள் உட்பட குறைந்து 319 பேர் கொல்லப்பட்டிருப்பதாக ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

ஹிஸ்புல்லா அமைப்பின் தாக்குதல்களில் குறைந்தது 10 இஸ்ரேலிய படையினர் மற்றும் ஏழு பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டும் முயற்சிகளும் ஸ்தம்பித்துள்ள சூழலில் ஏப்ரல் 9 ஆம் திகதி புனித ரமழான் மாதம் முடிவதற்குள் போர் நிறுத்த உடன்பாடு ஒன்று எட்டப்பட வாய்ப்பு உள்ளது என்று கட்டார் வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் மாஜித் அல் அன்சாரி குறிப்பிட்டுள்ளார்.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்காக மத்தியஸ் முயற்சியில் எகிப்து மற்றும் அமெரிக்காவுடன் கட்டாரும் ஈடுபட்டுள்ளது. மத்தியஸ்தர்கள் உடன்பாடு ஒன்றை நோக்கி இரு தரப்புக்கும் அழுத்தம் கொடுத்து வருகின்றனர் என்று அன்சாரி எக்ஸ் சமூகதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மார்ச் மாதம் 14ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## தென் மாகாண சபை

## மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் – மாத்தறை

01. மாத்தறை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் சார்பில் மாத்தறை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் திறமை வாய்ந்த மற்றும் தகைமைகளைக் கொண்ட விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் ஒப்பந்தத்திற்காக வெவ்வேறான வகையில் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனுக்கள் வழங்கப்படும் காலம் : 2024-03-14ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2024-04-03ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படுதல் மற்றும் திறக்கப்படுதல் : 2024-04-04ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு

| தொ. இல. | வேலை விபரங்கள் | மதிப்பீட்டுத் தொகை (வெட் இன்றி) ரூபா | நிர்மாணக் காலம் (நாட்கள்) | தேவையான CIDA பதிவு (கட்டிடங்கள்) | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி ரூபா | விலைக்கோரல் ஆவணக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| 01 | தெய்யந்தர மாவட்ட வைத்தியசாலை நிறுவனப் பொறுப்பு வைத்திய அதிகாரி விடுதியின் திருத்தவேலைகள் | 1,252,169.45 | 105 | C9 and C8 | 13,000.00 | 2000.00 |
| 02 | அக்ரெஸ்ஷ ஆதார வைத்தியசாலையின் தாய்மார் வார்ட் திருத்தவேலைகள் | 3,787,463.88 | 105 | C8 and C7 | 37,000.00 | 2500.00 |
| 03 | வெலிப்பிட்டிய சுகாதார வைத்திய அலுவலகத்தின் பக்கச் சுவர் மற்றும் வேலியின் திருத்தவேலைகள் | 2,336,688.00 | 105 | C8 and C7 | 23,000.00 | 2500.00 |
| 04 | ஊறுபொக்க பிரதேச வைத்தியசாலையின் சமையலறை திருத்தவேலைகள் | 3,649,264.70 | 105 | C8 and C7 | 36,000.00 | 2500.00 |
| 05 | கிரிந்த - புஹுல்வெல்ல ஆரம்ப வைத்திய பராமரிப்புப் பிரிவின் அம்பியூலன்ஸ் சாரதி ஓய்வறையின் திருத்தவேலைகள் | 1,150,602.00 | 105 | C9 and C8 | 12,000.00 | 2000.00 |
| 06 | பெரலபனாதர ஆரம்ப வைத்திய பராமரிப்புப் பிரிவின் வைத்திய அதிகாரி விடுதியின் திருத்தவேலைகள் | 3,324,457.75 | 105 | C8 and C7 | 33,000.00 | 2500.00 |
| 07 | ஊறுபொக்க பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி விடுதியின் திருத்தவேலைகள் | 1,090,950.40 | 105 | C9 and C8 | 11,000.00 | 2000.00 |
| 08 | திக்வெல்ல சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் கணனி அறையை பகுதிபிரித்தல் (Partition) | 159,930.00 | 56 | C9 and C8 | 2,000.00 | 1000.00 |
| 09 | வெலிகம பிரதேச வைத்தியசாலையின் மருந்து களஞ்சியசாலை திருத்தவேலைகள் | 3,069,174.35 | 105 | C8 and C7 | 31,000.00 | 2500.00 |
| 10 | ஊறுபொக்க மாவட்ட வைத்தியசாலையின் அம்பியூலன்ஸ் தரிப்பிடத்தை நவீனமயப்படுத்துதல் | 1,044,405.00 | 105 | C9 and C8 | 10,000.00 | 2000.00 |
| 11 | தெவிநுவர சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு டைல் பதித்தல். | 1,888,999.41 | 105 | C9 and C8 | 19,000.00 | 2000.00 |
| 12 | ஊருகமுவ மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி உத்தியோகபூர்வ விடுதியை நவீனமயப்படுத்துதல் | 2,313,711.83 | 105 | C8 and C7 | 23,000.00 | 2500.00 |
| 13 | பல்லேகம ஆரம்ப வைத்திய பராமரிப்பு பிரிவின் வெளி நோயாளர் பிரிவில் காத்திருக்கும் அலகை நிர்மாணித்தல் | 2,781,922.30 | 105 | C8 and C7 | 28,000.00 | 2500.00 |
| 14 | அக்குரெஸ்ஸ சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் திரிபோஷ களஞ்சியசாலையை நிர்மாணித்தல் | 1,395,257.69 | 105 | C9 and C8 | 14,000.00 | 2000.00 |

02. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையில் இந்த விலைக்கோரல்கள் இடம்பெறும்.

03. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் மேற்கூறப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தில் கட்டிட நிர்மாணத் துறையில் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

04. இந்தப் பெறுகையின் கீழ் நிறைவேற்றுவதற்குள்ள வேலையின் மதிப்பீட்டுப் பெறுமதி 50 மில்லியன் ரூபாவுக்குக் குறைவாக உள்ளதால் (வெட் மற்றும் ஏனைய வரிகள் தவிர்த்து) 2021-02-18ஆம் திகதிய 04/2016(iv) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் மாகாண முன்னுரிமை மற்றும் CIDA முன்னுரிமை கவனத்திற் கொள்ளப்படும்.

05. ஆர்வமுள்ள திறமை வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்கள் மற்றும் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை 2024-03-14ஆம் திகதி முதல் 2024-04-03ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் விலைக்கோரல் ஆவணக் கட்டணத்தைச் செலுத்தி, மாத்தறை, பரமுல்ல எனும் முகவரியில் அமைந்துள்ள மாத்தறை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். அனைத்துக் கொடுப்பனவுகளையும் ரொக்கப் பணத்தில் மட்டுமே மேற்கொள்ளுதல் வேண்டும். மேற்கூறப்பட்ட காலப்பகுதியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம். மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தின் 041-2222154 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

06. விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறியாக இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் மாத்தறை, மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் பெயரில் பெற்றுக்கொண்ட 2024-06-14ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் பிணை முறியொன்றை வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். காசோலை மற்றும் வங்கிக் கட்டளையாக சமர்ப்பிக்கப்படும் பிணை முறிகள் நிராகரிக்கப்படும்.

07. சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தத்திற்கு இயைபான விலைமனுக்களை இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அதன் மூலப்பிரதியில் மூலப்பிரதி என்றும் நகல் பிரதியில் நகல் பிரதியென்றும் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து, அந்த இரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு அந்த உறையை முத்திரைக் குறியிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

08. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுப் படிவங்களைச் சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைக்கோரல் இலக்கம் மற்றும் விபரங்களைக் குறிப்பிடுதல் வேண்டும். முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024-04-04ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகைக் குழு, மாத்தறை மாவட்ட சுகாதார பணிப்பாளர் அலுவலகம், பரமுல்ல, மாத்தறை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு குறித்த பதிவேட்டில் பதிவிட்டு கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 2024-06-14ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

09. விலைமனுக்கள் 2024-04-04ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுறுத்தப்பட்ட உடனடுத்து மாத்தறை, மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தில் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரரின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாத்தறை, மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகம்,**
**பரமுல்ல,**
**மாத்தறை.**
**2024-03-14ஆம் திகதி.**

# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

## நிகழ்நிலை பயன்பாட்டுமுறையினூடாக செலுத்தப்படும் பல்வேறு வகையான கொடுப்பனவுகளை உறுதிப்படுத்துதல்.

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் நிகழ்நிலை பயன்பாட்டுமுறையினூடாக மற்றும் மக்கள் வங்கிக் கிளைகள் ஊடாக செலுத்தப்படும் பல்வேறு வகையான கொடுப்பனவுகளில் இதுவரை உறுதிப்படுத்த முடியாத கொடுப்பனவுகள் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

வைப்புச் சீட்டின் குறித்த குறிப்பு எண்களை குறிப்பிடப்படாமை, தவறாக குறிப்பிடுதல் மற்றும் அவ்வைப்புச் சீட்டு மற்றும் அது தொடர்பான ஆவண விலைப்பட்டியல் ஆகியவை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்படாமல் இருந்தமை, என்பன வைப்புத்தொகைகள் அங்கீகரிக்கப்படாமைக்கு ஏதுவான காரணமாக காணப்படுகின்றது.

எனவே, அவ்வாறு பணம் செலுத்தியதன் பின்னர், நீங்கள் வைப்புச் செய்த வைப்புச் சீட்டின் நகலுடன் தொடர்புடைய ஆவண விலைப்பட்டியலை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவிற்கு **payments@trc.gov.lk** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது **WhatsApp 076 5051900** அல்லது தொலைநகல் **011 2671679** க்கு அனுப்புமாறு உங்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கூறிய வழிகளில் ஏதேனும் ஒன்றினூடாக இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு பணம் செலுத்திய வைப்புச் சீட்டினை **(Deposit Slip)** பின்வரும் வழிகளில் ஏதேனும் ஒன்றைத் தெரிவுசெய்து இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு அறிவிப்பதன் மூலம் ஏற்படும் தாமதங்கள் மற்றும் அசௌகரியங்களை தவிர்த்துக்கொள்ளலாம் என இதன்மூலம் தெரிவிக்கப்படுகின்றது.

**தொலைபேசி** - 011 2671680
தொலைநகல் - 011 2671679
மின்னஞ்சல் - payments@trc.gov.lk
Whatsapp - 076 5051900

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு**
